ஜேர்மனியிலும் வன்னியன் தொலைபேசி அட்டைகள்


தொடர்புகட்கு: ரவி
01726312893 / 0622642067
Pub.

1.50 Euro ஜேர்மனி

# ஈழமுரசு
ஐரோப்பா

POOBALAM WEEKLY

2004 02 - 08 Juin 2004 16

சம்யுக்தா
Credits Immobiliers
வீடு வாங்க கடன் உதவி
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
SAM-YUKTHA
Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(M° La Chapelle/Gare du Nord)



## ஊடகவியலாளர் நடேசன் சுட்டுக்கொலை

(31.05.04)

கிழக்கு மாகாணத்தின் மூத்த ஊடகவியலாளரான ஜி.நடேசன் இன்று காலை எட்டு மணிக்கு மட்டக்களப்பு நகரில் வைத்து இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். வீரகேசரி நாளிதழ், ஐ.பி.சி. தமிழ் உட்பட பல ஊடகங்களில் செய்தியாளராக இருந்த அவர், தமிழ் மக்களுக்கு எதிராக சிறீலங்கா அரசு மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கைகளை வெளியுலகிற்கு அம்பலப்படுத்தியதில் முன்னின்று செயற்பட்டவர். (தொடர்ச்சி 5ம் பக்கம்)

## ஜி.நடேசனுக்கு 'நாட்டுப்பற்றாளர்' பட்டம் வழங்கி கௌரவிப்பு

5 ▶

# கிழக்கில் தொடரும் கொலைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்

## விடுதலைப் புலிகள் எச்சரிக்கை


(31.05.04)

கிழக்கு மாகாணத்தின் கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் தமிழ் மக்களின் நேச சக்திகளை குறிவைத்துக்கொல்லும் நடவடிக்கைகளை சிறீலங்காவின் அரச படைகளும், அவர்களுடன் இணைந்து செயற்படும் குழுக்களும் உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் எச்சரித்துள்ளனர். (தொடர்ச்சி 5ம் பக்கம்)

## களுத்துறையில் தமிழர்கள் மீது சிங்களக் காடையர்கள் தாக்குதல்

(31.05.04)

களுத்துறை மாவட்டத்திலுள்ள புளத்சிங்கள எஸ்டேட் பகுதியில் நீண்டகாலமாக வாழ்ந்துவரும் தமிழ்மக்கள் மீது சிங்களக்காடையர் கூட்டம் தாக்குதல் நடத்தியது. 15 தமிழர்கள் படுகாயமடைந்திருக்கின்றனர். இவர்களில் 5 பேரின் நிலை கவலைக்கிடமாக இருக்கின்றது. இன்றிரவு இடம்பெற்ற இந்த சம்பவத்தில் எட்டு வீடுகளும் எரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த சம்பவம் தொடர்பாக களுத்துறைப் பொலிசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இரு குழுக்களிடையே வன்முறை இடம்பெறுகின்றது என்பதை அறிந்து அந்த இடத்திற்கு சென்ற பொலிசார் கலவரத்தை அடக்க ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். கண்ணீர் புகைக்குண்டுத்தாக்குதலை நடத்தினர். (தொடர்ச்சி 30ம் பக்கம்)



5 ▶

## எரிக் சூல்ஹைம் - அன்ரன் பாலசிங்கத்துடன் சந்திப்பு

Orient Textilien & Schmuck

Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836

* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.

உரிமையாளர்: ச.ஜெகதீஸ்



Pub

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்



# V.T.Cash & Carry

900g யாழ்ப்பாணம் மிளகாய்தூள் ஒரு போத்தல் 1Euro - மட்டக்களப்பு முறையில் தயாரிக்கப்பட்ட கட்டா கருவாடு 250g 1euro - 350 ச.மீற்றரில் அமைந்துள்ள ஸ்தாபனம்

Tél: 01 40 05 07 18
Fax: 01 40 05 06 92

15, Rue Cail, 75010 Paris.
M°: La Chapelle-Gare du Nord


# தனது மாணவனுக்காக 'குதிரை'யோடிய பிக்கு

(31.05.04)

பிக்கு மாணவர் ஒருவருக்காக க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பௌத்த சமய வினாத்தாளுக்கு விடை எழுதிக் கொண்டிருந்த பௌத்த பிக்கு ஒருவர் அம்பாறையில் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் கடந்த 25ம் திகதி செவ்வாய்க்கிழமை அம்பாறை சத்தாதிஸ்ஸ மகா வித்தியாலய பரீட்சை நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

பரீட்சை ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்ட பௌத்த பிக்கு, பௌத்த உயர்கல்வி நிறுவனம் ஒன்றில் விரிவுரையாளராக கடமையாற்றி வருபவராவார். இவர் தனது மாணவ பௌத்த பிக்குவிற்காக இவரின் படத்தை ஒட்டிய தபால் அடையாள அட்டையொன்றை தயாரித்து மாணவ பௌத்த பிக்குவின் பெயரில் பரீட்சை ஆள் மாறாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதுவரை நடந்து முடிந்த அனைத்து பாடங்களுக்கும் தனது மாணவ பிக்குவிற்காக இவரே விடை எழுதியுள்ளார் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# பேச்சுவார்த்தை மேசையில் நோர்வே அமரக்கூடாது

## ஜே.வி.பி. கடும் எதிர்ப்பு

(31.05.04)

சிறீலங்கா அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுகள் மீண்டும் ஆரம்பமாகும் பட்சத்தில், பேச்சுவார்த்தை மேசையில் நோர்வே அனுசரணையாளர்கள் அமரக்கூடாதென ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. நோர்வேயின் செயற்பாடுகளைக் கடுமையாக எதிர்க்க தற்போது ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

சிறீலங்கா அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கில் கடந்த வாரம் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் தோல்வியடைந்த நிலையிலும், ஜே.வி.பி. தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

சிறீலங்கா அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுகளை நோர்வே அனுசரணையாளர்களே ஆரம்பித்து வைப்பார்கள் என அரசு தரப்பும், விடுதலைப் புலிகளும் உடன்பாடு கண்டு, இதுவரை நடைபெற்ற பேச்சுகளின் போதும், பேச்சுவார்த்தை மேசையில் நோர்வே தரப்பினரும் அமர்ந்திருந்தனர்.

ஆனால், இனிமேல் நோர்வே அவ்வாறு பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்திருக்க அனுமதிக்கக்கூடாதெனவும், அந்த மேசையில் இருக்காது அவர்கள் அனுசரணை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமெனவும் தற்போது ஜே.வி.பி. கூறுகின்றது. போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிலும், நோர்வே இடம்பெறக்கூடாதெனவும் ஜே.வி.பி. தற்போது வலியுறுத்தியுள்ளது. இதைவிட, தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்றுக் கொள்வதையும், விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில் பேச்சுகளை மீள ஆரம்பிப்பதையும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.


## Meubles Europeens

உங்கள் வீட்டுத் தளபாடத் தேவைக்கு ஜேர்மன், பெல்ஜியம் தயாரிப்பு புதிய பழைய வீட்டுத் தளபாடங்கள் மலிவு விலையில்.
லெதர் சோபாக்கள் 3+ 2+1 சோகேஸ்
சாப்பாட்டு மேசைகள் கட்டில்
அலுமாரி குசின செட் மற்றும் அனைத்துவகை வீட்டுத் தளபாடங் களையும், வீட்டுப் பாவனைப் பொருட்களையும் உங்கள் விருப்பம் போல் தெரிவு செய்துகொள்ள நாடுங்கள்.

Meubles Europeens
4, Rue Des Villas
94800 Villejuif
Mo -Villejuif Louis Aragon (N°: 7)
Tél: 01 46 77 19 40 - 06 64 42 42 62

**திறக்கும் நேரம்**

திங்கள் முதல் சனி வரை -. 14H - 20H
ஞாயிறு - 10H - 18H

Pub-Fr-20

## விற்பனைக்கு

**2, TELECOM CENTER**

1. La Chappelle Paris 10eme
2. Paris 18 eme Fonds Commrces

**CEDER A BAILS**

தொடர்புகளுக்கு: 06 64 73 49 82

## ஈஸ்வரா இசைக்குழு



உங்கள் மங்களகரமான வைபவங்களுக்கு
இசைமழை பொழிந்து
சிறப்பித்திட என்றென்றும்

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
அருமை – 0664866681
மாறன் – 0664447207
குகானந்தன் – 0664819995

## வீடு விற்பனைக்கு (தனிவீடு)
## Vente de Maison

**à Savigny le temple (bourg)**

- Utiliser Seulement 3 ans - **புதிதாக கட்டப்பட்டது** (3 வருடமே பாவனைக்குட்பட்டது)
Terrain 540 M² - **மேலதிகமாக** 540M² **காணியுண்டு**
- Maison de 115 M² - **வீடு** 115M² **உள் அளவைக் கொண்டது**
- 6 Piece
- 4 Chambre - **4 அறைகள்**
- Avec Garage - **வாகனத் தரிப்பிடம்**

**Savigny-Paris 45 min (RER D)**
**Contacter au:**
**Fixe: 01 60 63 40 02 - Port: 06 64 10 39 70**
பாரிசில் இருந்து 45 நிமிடத் தூரம்
**விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

## EUROCONSULT SARL TRADUCTIONS

**மொழி பெயர்ப்பு நிலையம்**

அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாக கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு

**24, Rue Perdonnet , 75010 Paris**
**Tel: 0153267010 - Fax: 0153267502**

## போட்டோ பாலா

மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்

**உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:**

Photo Bala
**87 Rue de Clignancourt, 75018 Paris**
**Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77**

## Errances Travels



55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |

# சமாதானப் பேச்சுவார்த்தையை தொடர்வதில் சிக்கல்

## முடிவுகள் எட்டப்படாமல் நோர்வே திரும்பினார் சூல்ஹைம்

(கொழும்பு 28.05.2004)

சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான திகதியை நிர்ணயம் செய்வதற்கு முடியாத நிலையில், இந்த முயற்சியில் ஈடுபட்ட நேர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹைம் தேல்வியுடன் நோர்வே திரும்பியுள்ளார்.

இரு தரப்பையும் சந்தித்து சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் நோக்கில் கடந்த 24ம் திகதி திங்கட்கிழமை கொழும்பு சென்ற நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹைய்மைச் சந்திப்பற்கு முதல் இரண்டு நாட்களும் சிறீலங்காவின் அரசுத் தலைவர் சந்திரிகா குமாரதுங்க மறுத்து விட்டார்.

அரச தரப்பினருடன் பேசுவதற்கு முன்னர், கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்குப் புறப்படச் சற்று முன், இலண்டனிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் சொல்ஹெய்ம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்து கொண்டார்.


கொழும்பில் செவ்வாய்க்கிழமை காலை சிறீலங்காவின் தலைமை அமைச்சரையும் அன்று மாலை கண்டியில் அரசுத் தலைவரையும் சந்திப்பதற்கு சூல்ஹைம் காத்திருந்த போதிலும், இவ்விருவரையும் அவரால் சந்திக்க முடியாமல்போனது.

செவ்வாய்க்கிழமை மாலை கண்டியில் வைத்து சந்திரிகா சூல்ஹைய்மைச் சந்திப்பார் என்று அரசதரப்பால் சொல்லப்பட்டது. இந்தச் சந்திப்புக்கு கொழும்பில் இருந்து சூல்ஹைம் செல்வதற்காக விமானப் படையினரின் உலங்குவானூர்தியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும், கண்டியிலிருந்து சந்திரிகா கொழும்பு திரும்புவதால் அன்று இரவு கொழும்பில் அவரைச் சந்திக்க முடியுமென சூல்ஹைய்மிடம் தெரிவிக்கப்பட்டது. இதனால், தனது கண்டிப் பயணத்தைக் கைவிட்ட சூல்ஹைய்ம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு வரை இந்தச் சந்திப்புக்காக காத்திருந்தார்.

எனினும், அந்த அழைப்பு வராததால் புதன்கிழமை காலை சந்திரிகாவைச் சந்தித்து விட்டு வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்திக்கலாமென்றும் அவர் காத்திருந்தார். அப்போதும் அழைப்பு வராததால் அரச தரப்பினர் எவரையுமே சந்திக்காது அவர் புதன்கிழமை முற்பகல் மீண்டும் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளைச் சந்தித்தார். அந்தச் சந்திப்பின் பின்னர் உடனடியாகக் கொழும்பு சென்ற சூல்ஹைம் அன்று மாலையே சந்திரிகாவை சந்திக்கப் போவதாகக் கூறியிருந்தார். எனினும், அன்றும் அவரால் சந்திரிகாவை சந்திக்க முடியவில்லை.



வன்னி சென்று விடுதலைப் புலிகளை, நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹைம் சந்தித்தபோது...



இவ்வாறான நீண்ட இழுத்தடிப்புகளுக்குப் பின்னர் கடந்த வியாழக்கிழமை இரவே அரச தரப்பு சூல்ஹைமைச் சந்தித்தது. இந்தச் சந்திப்பில் பேச்சுக்கள் சம்பந்தமான திட்டவட்டமான முடிவை மாகாண சபைத் தேர்தல்கள் முடிவடை-ந்த பின்னரே, அதாவது ஜூலை மாதத்தின் பின்னரே தம்மால் தெரிவிக்க முடியும் என்று சந்திரிகா குமாரதுங்க எரிக் சூல்ஹைமிடம் கூறியதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை - இந்தச் சந்திப்புத் தொடர்பாக சிறீலங்கா அரசுத் தலைவரின் செயலகம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அந்த அறிக்கையில் கடந்த வியாழன் இரவு 8.45 மணியளவில் அரசுத் தலைவைரின் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது என்றும் எரிக் சொல்ஹெய்முடன் சிறீலங்காவிற்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் சந்திப்பின் போது உடனிருந்தாகவும் அரச தரப்பில் அரசுத்தலைவர் சந்திரிகாவுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எஸ்.பாலிககார ஆகியோர் பேச்சில் கலந்து கொண்டதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பதற்கான சாத்தியம் இல்லை என்கிறது ஐக்கிய தேசியக்கட்சி

சமாதானப் பேச்சுவார்த்தை உடனடியாக ஆரம்பிக்கப்படும் சாத்தியம் இல்லையென்று சிறீலங்காவின் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அவநம்பிக்கை தெரிவித்துள்ளது. இதனால் சர்வதேச நிதியுதவி தடைப்பட்டு பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படும் அறிகுறி தோன்றியிருப்பதாகவும் அது எச்சரித்துள்ளது.

அரசுத்தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சமாதானப் பேச்சுகள் தொடர்பாக அக்கறை காட்டியது சர்வதேச உதவிகளை அவசரமாகப் பெற்றுக் கொள்வதற்காகவே என்று கடந்த 26ம் திகதி புதன்கிழமை கூறிய பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையே காணப்படும் முரண்பட்ட கொள்கைகளால் சமாதானப் பேச்சுகளைத் தொடங்க முடியாத இக்கட்டான நிலை தோற்றுவிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அதிகாரபூர்வ அலுவலகத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவிக்கு வந்த பின்னர் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு நோர்வே அரசுக்கு சந்திரிகா அழைப்பு விடுத்தார்.

அந்த அழைப்புக்கு இணங்க நோர்வேத் தரப்பினர் இதுவரை மூன்று தடவைகளுக்கு மேல் இங்கு வந்து அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். தற்போதும் நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இங்கு வந்துள்ளார். புலிகள் தரப்புடன் பேசுவதற்காகக் கிளிநொச்சி சென்றிருக்கும் அவர், கொழும்பு திரும்பிய பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்க விருக்கின்றார். அப்போது அரசினதும், விடுதலைப் புலிகளினதும் தற்போதைய நிலைப்பாடுகளை அறிந்து கொள்ள முடியும் என நம்புவதாகத் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான திகதியை நிர்ணயிக்கும் விடயத்தில் சந்திரிகா திணறிக் கொண்டிருக்கிறார். அரசாங்கத்தின் முரண்பட்ட கொள்கைகள் காரணமாகவே இந்த நிலைமை தோன்றியுள்ளது. தற்போதைய நிலைமைகளை அவதானிக்கின்றபோது பேச்சுகளை ஆரம்பிப்பது மிகக் கடினமான காரியமாகவே தெரிகிறது. ஏனெனில், அரசாங்கத்தினால் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியாத நிலையில் புலிகள் பேச்சுக்கு முன்வருவது சாத்தியமற்றதொன்றாகும்.



பீரிஸ்

அதேசமயம் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் சர்வதேச உதவிகள் எதுவுமே கிட்டாமல் போகும் அச்சுறுத்தலை உதவி வழங்கும் அமைப்புகள் விடுத்திருக்கின்றன. நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக வீழச்சி கண்டு வருகின்றது. விலைவாசிகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. எமது ஆட்சிக் காலத்தில் மிகவும் கஷ்டப்பட்டுக் கட்டிவளர்த்த பொருளாதாரம் இரண்டு மாதங்கள் கூடக் கழியாத காலத்துக்குள் இன்றைய அரசு சீர்குலையச் செய்திருக்கின்றது. அரசு தவறான திசையொ-ன்றை நோக்கிச் செல்ல முற்படுகிறது. அதனால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளால் பாதிக்கப்படுவது எமது நாட்டின் அப்பாவி மக்களே ஆவர் என்றும் அவர் அங்கு கூறினார்.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# முட்டுப்பட்டு நிற்கும் சமாதான முயற்சி!

தனது முயற்சியில் சற்றும் மனம் தளராத எரிக் சூல்ஹைம் மீண்டும் கொழும்பு சென்று காத்திருந்து சிறீலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரணதுங்காவை ஒருவாறாகச் சந்தித்து விட்டுத் தனது நாடு திரும்பினார்.

சமகாலத்தில் மிகவும் பொறுமையுள்ள மனிதர் யார் எனக் கேட்டால், நோர்வேயின் சிறப்புத் தூதுவர் திரு. எரிக் சூல்ஹைமைத்தான் குறிப்பிடவேண்டும்.

கடந்த 24ம் திகதி திங்கட்கிழமை கொழும்பிற்கு வந்த எரிக் சூல்ஹைம் சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து விட்டே கிளிநொச்சி வந்து விடுதலைப் புலிகளைச் சந்திக்கவிருந்தார். சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முக்கியமான சில முடிவுகளையும் சனாதிபதியிடம் பெற்று, அதனை விடுதலைப் புலிகளிடம் தெரிவித்து விடுதலைப் புலிகளின் சம்மதத்தோடு தீர்க்கமான ஒரு பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கவும், இரு தரப்பினராலும் நிலைப்பாடுகள் குறித்த அறிக்கையொன்றினை வெளியிடவும் அவர் எண்ணங் கொண்டிருந்தார். ஆனால், அன்று


சந்திரிகா

அவர் சனாதிபதியைச் சந்திக்க முடியவில்லை. அல்லது, சனாதிபதி அவரைச் சந்திக்க விரும்பவில்லை. செவ்வாய்கிழமையும் முயன்று பார்த்துவிட்டுப் புதன்கிழமை கிளிநொச்சிக்கு வந்தார். விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் சுமார் இரண்டு மணிநேரம் கலந்துரையாடினார். கலந்துரையாடிவிட்டு வெளியே வருகையில் ஊடகவியலாளரிடம் உற்சாகம் குறைந்த சிரிப்பொன்றை உதித்தார். எப்போது சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் எனக் கேட்டதற்கு, அதற்கு சில காலம் தேவைப்படும் எனச் சொன்னார். தமிழ்ச்செல்வன் அவர்களுடன் கலந்துரையாடிய விடயங்கள் குறித்த செய்திகளுடன் அன்று மாலையே சனாதிபதியைச் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் அவர் கூறினார்.

எனினும், அவர் நினைத்தபடி அன்று மாலை சனாதிபதியை அவரால் சந்திக்க முடியவில்லை. அரசாங்கத்தில் பலருடன் தொடர்பு கொண்டு சனாதிபதியைச் சந்திக்க முயன்றபோதும் சாதகமான பதில் கிடைக்கவில்லை. பலத்த பிரயத்தனங்களின் பின்னர். வியாழக்கிழமை இரவு சனாதிபதியைச் சந்தித்து கலந்துரையாடினார்.

நிரந்தர தீர்வு குறித்துப் பேசுவதற்கு முன்பாக வடக்கு கிழக்கில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஒன்று அமைக்கப்படவேண்டும் என்கிற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை சனாதிபதியிடம் அவர் தெளிவாக எடுத்துக் கூறினார்.

இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசுகின்ற அதே நேரத்தில் நிரந்தரத்தீர்வு குறித்தும் பேசுதல் அவசியம் என்கிற சனாதிபதியின் கொள்கையில் எவ்விதத்தளர்வும் காணப்படவில்லை என்றே அறியமுடிகிறது. எரிக் சூல்ஹைமிடம் அவர் இதனை நீண்ட நேரம் வலியுறுத்தியதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

தனது இந்தக் கருத்தினை முடிந்த முடிவாகக் கூறித் தற்போதைய சூழ்நிலையை குழப்பிக்கொள்ள விரும்பாத சனாதிபதி சந்திரிகா, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது என அறிவித்துள்ளார்.


இரு தரப்பினருக்குமிடையில் சரியானதோர் இணக்கப்பாடு ஏற்படாமல் எவ்வாறு பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகப்போகிறதென்கின்ற கேள்விதான் இப்போது எல்லோர் முன்னாலும் உள்ளது. பேச்சுவார்த்தைகள் என்பது காலத்தைக் கடத்திச்செல்லும் ஒரு தந்திரோபாயமாக அமைவதை விடுதலைப் புலிகள் விரும்பவில்லை. 1994ம் ஆண்டு சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசுடன் சமாதானம் பேசிய அனுபவங்கள் விடுதலைப் புலிகளுக்கு ஓர் எச்சரிக்கையுணர்வினை ஏற்படுத்தியுள்ளமை யதார்த்தமான ஒன்றே. அன்று சந்திரிகா இருந்த பலமான நிலையில் இன்று இல்லை. நிரந்தரத்தீர்வு நோக்கிய பயணம் மிகுந்த சிக்கல் மிக்கதாகவே இருக்கும். பேச்சுவார்த்தைகளின் போது சந்திரிகா தனித்து எந்தவொரு முடிவையும் எடுக்க முடியாதபடி ஒரு தொங்கு நாடாளுமன்றத்தையே அவர் நடாத்திக்கொண்டிருக்கின்றார்.

இந்த நிலைமைகளை நன்கு ஆராய்ந்து பார்த்துவிட்டே விடுதலைப் புலிகள் ஒரு நிலைப்பாட்டை எடுத்தனர். நிரந்தரத்தீர்வு ஒன்று எட்டப்படும் வரை போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இவை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு வடக்கு கிழக்கிற்குப் பூரண அதிகரமுள்ள இடைக்கால நிர்வாக அமைப்பொன்று அவசியம். எனவே புலிகளால் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக அமைப்பொன்று அவசியம். ஆகவே புலிகளால் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை பற்றிப்பேசுவதும் அது நடைமுறைப் படுத்தப்படுகின்ற சூழ்நிலையில் நிரந்தரத்தீர்வு குறித்துப் பேசுவதும்தான் சாத்தியமானதும், பொருத்தமானதும் என நோர்வே அனுசரணையாளர்களூடாக விடுதலைப் புலிகள் தெளிவாக எடுத்துக்கூறிவிட்டனர்.

*நிரந்தரத்தீர்வு நோக்கிய பயணம் மிகுந்த சிக்கல் மிக்கதாகவே இருக்கும். பேச்சுவார்த்தைகளின் போது சந்திரிகா தனித்து எந்தவொரு முடிவையும் எடுக்க முடியாதபடி ஒரு தொங்கு நாடாளுமன்றத்தையே அவர் நடாத்திக்கொண்டிருக்கின்றார்.*

*ஆகவே புலிகளால் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபை பற்றிப்பேசுவதும் அது நடைமுறைப் படுத்தப்படுகின்ற சூழ்நிலையில் நிரந்தரத்தீர்வு குறித்துப் பேசுவதும்தான் சாத்தியமானதும், பொருத்தமானதும் என நோர்வே அனுசரணையாளர்களூடாக விடுதலைப் புலிகள் தெளிவாக எடுத்துக்கூறிவிட்டனர்.*

புலிகளின் இந்த பிரதானமான நிலைப்பாட்டை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாவிட்டால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவது எவ்விதத்திலும் சாத்தியமில்லை. சனாதிபதியுடன் கலந்துரையாடிவிட்டு மீண்டும் கிளிநொச்சிக்கு வந்து விடுதலைப் புலிகளைச் சந்திப்பதாகவே எரிக் சூல்ஹைமின் நிகழ்ச்சி நிரல்


எரிக் சூல்ஹைம்

அமைந்திருந்தது. ஆனால், புலிகளிடம் தெரிவிப்பதற்கு சாத்தியமான செய்திகளெவையும் இல்லாத நிலையில், அவர் மீண்டும் நோர்வே திரும்பினார்.

இனி, யூலை 10ம் திகதிக்குப் பின்னரே, அதாவது மாகாணசபைத்தேர்தல் முடிவுற்ற பின்னரே, நோர்வே அனுசரணையாளர்கள் இருதரப்பினரையும் சந்திக்க வாய்ப்புகள் கிடைக்கும். இந்நிலையில், தற்போதய அரசின் பங்காளிகட்சியான ஜே.வி.பி. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையைக் கடுமையாக எதிர்த்துவருகின்றது. அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவே கூடாதெனப் பிக்குகள் தலைமையிலான ஜாதிக ஹெல உறுமய கூறிவருகிறது. மாகாண சபைத் தேர்தல் முடிந்த பின்னரும் சந்திரிகா எவ்வாறு இந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்திச் செல்லப்போகிறார் என்பது கேள்விக்குறிதான்!

இதேவேளை, திங்கள் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமை

**வன்னியிலிருந்து விவேக்**

தாங்கும் நாடுகளின் கூட்டத்தீர்மானம் சமாதானம் ஏற்பட்டாலேயே உறுதியளிக்கப்பட்ட 45 ஆயிரம் கோடி ரூபா உதவி வழங்கப்படும் என்பதை வலியுறுத்தும். இனிமேல் புலிகளைப் பேய்க்காட்டி, காய் நகர்த்துவதென்பது சந்திரிகா அரசிற்கு இயலாத காரியமாகவே இருக்கப்போகிறது. தமது ஆட்சியதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வது, பேரினவாதிகளையும் சமாளித்துக்கொள்வது, சமாதானத்தையும் எவ்விதமாவது கையாள்வது, உலக நாடுகளிடம் உதவிகளையும் பெற்றுக்கொள்வது போன்ற எல்லா காரியங்களையும் சமகாலத்தில் வெற்றி கொள்ள வேண்டுமானால் சந்திரிகா மந்திரவாதியாக மாறவேண்டும் அல்லது இந்தத்தீவில் ஏதெனுமொரு அற்புதம் நிகழ வேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி ஆட்சிக்கு வந்தபின்பு நோர்வே அனுசரணையாளர்களுக்கு அழைப்பு விடுத்தமையும், நோர்வே குழுவினர் பல தடவைகள் புலிகளையும் அரசாங்கத்தையும் சந்தித்துக் கலந்துரையாடியமையும், பல இணக்கப்பாடுகள் இருதரப்பினரிடையும் காணப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளிவந்தமையும் மளமளவென நடந்தேறிய விடயங்கள். எல்லாம் இப்போது பிரதானமான ஓர் இடத்தில் வந்து முட்டுப்பட்டு நிற்கின்றன. இனிவரப்போகும் நகர்வுகள் மிகஇறுக்கமானவைகளாகவே அமைப்போகின்றன என்பதுமட்டும் உண்மை.




விசேட விலைக் கழிவு

RHYTHM

Website rhythmentertainment.com

- Tamil, English, Hindi Movies for Sale
- Tamil, English, Hindi Movies for Rent
- Tamil, Hindi Audio Cd's, Audio Cassette

790 Harrow Road, Wembley, HA0 3EL
Tel : 02089049040
Fax: 02089049070
e-mail
info@rhythmentertainments.com

- Telephone Cards
- Party Shop
- Video Filming
- Photography

ஈழமுரசு
ஐரோப்பா
POOBALAM WEEKLY

# நடேசனின் கொலை உணர்த்தும் செய்தி

கிழக்கின் மூத்த ஊடகவியலாளர் ஜி.நடேசன் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி பேரதிர்ச்சியைத் தந்தது. ஜி.நடேசன் தமிழ் மக்களுக்கு எதிராக சிறீலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தாக்குதல்களையும் அடாவடித் தனங்களையும் தனது எழுத்தால் வெளிக்கொண்டுவந்த ஒரு துணிச்சலான ஊடகவியலாளர். கிழக்கு மக்களின் பல்வேறு அவலங்களையும் தனது எழுத்தின் மூலம் அவர் வெளியுலகின் கவனத்திற்கு கொண்டுவந்திருக்கின்றார். கடைசியாக அவர் வீரகேசரி வாரவெளியீட்டில் எழுதிய பத்தி கட்டுரையில் கூட கிழக்கில் நடக்கும் கபடத்தனமான படுகொலைகளுக்கு எதிராக குரல் கொடுத்திருந்தார்.

ஏற்கனவே பல தடவைகள் கொலைப் பயமுறுத்தலுக்கும் கொலை முயற்சிக்கும் உள்ளான அவர் தொடர்ந்தும் துணிந்து தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தன் மையை உலகிற்கு எடுத்துரைப்பதில் பயமின்றி செயற்பட்டவர். அவரது இந்தப்படுகொலை சிறீலங்கா அரச படைகளின் கட் டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்றிருப்பது முக்கியமாக கவனிக் கப்படவேண்டிய ஒன்றாகும். குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட் டில் அரச படைகளின் அடாவடித்தனங்களை அம்பலப்படுத்திய ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் சுட்டுக்கொல்லப் பட்டது போலவே நடேசனும் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார். நடேசனின் கொலை உண்மைகள் வெளிவராமல் தடுக்க வேண் டும் என்ற நோக்கம் கொண்ட மக்கள் விரோத குழுக்களின் கோழைத்தனமான செயலைத்தான் எடுத்துக்காட்டுகின்றது.

இந்தக்கொலை நிச்சயமாக நிமலராஜனின் கொலையைப் போல சிறீலங்கா அரச படைகளின் துணையின்றி அல்லது அவர்களின் வழிநடத்தலின்றி நடந்திருப்பதற்கான சாத்தியக்கூறு கள் இல்லையென்றே சொல்லவேண்டும்.

கிழக்கில் அண்மைய நாட்களாக கல்விமான்களையும், தமி ழர் நலன் விரும்பிகளையும் குறிவைத்து அழித்து ஒரு குழப்ப நிலையைத் தோற்றுவிக்க தமிழர் விரோத சக்திகள் முயன்று வருகின்றன. இந்த அடிப்படையிலே தான் அண்மையில் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் தம்பையா அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். தற்போது நடேசன் இந்த கொலைகார கும்பலின் இலக்காகியிருக்கிறார்.

இந்தக் கொலைகள் மூலம் தமிழ் மக்களின் தேசிய ஆன்மா வைச் சிதைத்து அவர்களை பிளபுபடுத்தி ஒரு இராணுவ வெற் றியை சாதிப்பதே இவற்றின் சூத்திரதாரிகளின் குறிக்கோளாகும். ஊடகவியலாளர்களை அழிப்பதன் மூலம் அல்லது கல்விமான் களை அழித்தொழிப்பதன் மூலம் ஒரு இனத்தின் ஆன்மாவை சிதைத்துவிட முடியும் என்று கனவு கண்டவர்கள் எல்லாம் கடந்தகாலத்தில் மிகப்பெரிய தோல்வியையே சந்தித்திருக்கின் றார்கள்.

சிறீலங்கா அரசு கபடத்தனமான முறையில் இவ்வாறான கொலைகார கும்பல்களை வளர்த்துவிடுவதும் அவற்றின் செயற் பாடுகளை இராணுவ தந்திரோபாய நடவடிக்கைகள் என்று மறைமுகமாக நியாயப்படுத்த முனைவதும் தற்போதுள்ள போர் நிறுத்த உடன்பாட்டிற்கும் அமைதி முயற்சிக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாகும்.

வடக்கில் நிமலாரஜன் கொலை மற்றும் மிருசுவில் படுகொ லைகள் நடந்த காலத்தில் அங்கு பணியாற்றிய இராணுவக் கடும் போக்காளரான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கிழக்கு மாகாண இராணுவ விவகாரங்களுக்கான சிறப்பு ஒருங் கிணைப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்தக் கொலைகள் தொடர்வது தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந் தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கிழக்கை வடக்கில் இருந்து பிரிப்பதற்கு இந்தக் கொலைக் கலாச்சாரத்தை அரசு ஒரு கருவியாக பயன்படுத்துமாக இருந் தால் நிச்சயமாக அது இந்த அரசுக்கு கிடைகக்கூடிய மிகப் பெரிய தோல்வியாகவே இருக்கும்.

ஜி.நடேசனின் கொலையை நாம் வன்மையாக கண்டிப்பது டன் இதில் சம்பந்தப்பட்ட கோழைத்தனமான கொலையாளி களை இனம்கண்டு சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்றும் சிறீலங்கா அரசை கேட்டுக்கொள்கிறோம்.

# ஜி.நடேசனுக்கு `நாட்டுப்பற்றாளர்' பட்டம் வழங்கி கௌரவிப்பு

(31.05.04)

மூத்த ஊடகவியலாளர் ஜி.நடே சனுக்கு `நாட்டுப்பற்றாளர்' பட்டம் வழங்கி விடுதலைப் புலிகள் கௌர வித்துள்ளனர். இலங்கையிலும் சர்வதேச நாடுகளிலும், ஈழத்தமி ழரின் துன்பங்களை நடுநிலை வகித்து, பத்திரிகை தர்மத்தை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்த அமரர் ஜி.நடேசன் அவர்க ளுக்கே, விடுதலைப் புலிகள் இப் பட்டத்தை வழங்கி கௌரவித்துள் ளனர்.

இதுதொடர்பாக அரசியற்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், யுத்த, சமாதான காலங்களில் இன் னல்களை அனுபவித்த தமிழ்மக்க ளின் வாழ்வியல் துன்பங்களையும், விடுதலையுடன் கூடிய இயல்பு வாழ்க்கைகளில் மக்கள் கொண்ட ஏக்கங்களையும் உள்ளூரிலும், உலக நாடுகளிலும் பரப்புரை செய்து, தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கும் அதன் உட்கட்டுமான வளர்ச்சிக் கும் பணியாற்றிய அமரர்.ஜி.நடே சன் அவர்களுக்கு தமிழீழ விடுத லைப் புலிகள் `நாட்டுப்பற்றாளர்' என்னும் நிலையை வழங்கிக் கௌர வித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

# எரிக் சூல்ஹைம்–அன்ரன் பாலசிங்கத்துடன் சந்திப்பு பிரெசெல்ஸ் மாநாட்டில் அரசுக்கு அழுத்தம்?

அமைதிப் பேச்சில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலை தொடர்பாக நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சூல்ஹைம் இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களை இலண்டனில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகின்றார். இச்செய்தி எழுதும் வரை பேச்சுவார்த்தை தொடர்வதாகவும், சிறீலங்கா அரசின் நிலைப்பாடு தொடர்பாக எரிக் சூல்ஹைம், அன்ரன் பாலசிங்கம் அவர்களுடன் விரிவான கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டுள்ளதாகவும் இலண்டனில் இருந்து எமது செய்தியா ளர் தெரிவித்தார்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களுடனான சந்திப்பின் பின் பெல்ஜியத் தலைநகர் பிரெசெல்சில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் எரிக் சூல்ஹைம் கலந்துகொள்ள இருக்கின்றார். இந்த மாநாட்டில் அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சட் ஆர்மிட்டேஜ், ஜப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் உட்பட பல நாட்டுப் பிரதிநிதிக ளும் கலந்துகொள்ள உள்ளனர். இலங்கையில் தற்போதுள்ள நெருக்கடி நிலைகள் பற்றியும் சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்தும் இந்த மாநாட்டில் ஆராயப்படும் என்றும் நோர்வேத் தரப்புக்கு நெருக்கமான வட்டாரங்கள் எமக்குத் தெரிவித்தன.

இந்த மாநாட்டின்போது விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு செல்வதற்கான ஒரு அழுத்தத்தை சிறீலங்கா அரசிற்கு மேற்குலக நாடுகள் கொடுக்கும் என்றும் விடுதலைப் புலிகளுடன் பேசினால் மட்டுமே உறுதியளித்தபடி இலங்கைக்கான நிதியுதவி வழங்கப்படலாம் என முன்நிபந்தனை கூட விதிக்கப்படலாம் என்றும் எதிர்பார்ப்பதாக அந்த வட்டாரங்கள் எமக்குத் தெரிவித்தன.

# கிழக்கில் தொடரும் கொலைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பில் இன்று காலை இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட மூத்த ஊடகவியளாளர் ஜி.நடேசனின் கண்மூடித்தனமான படுகொலையை வன்மையாகக் கண்டித்துள்ள விடுதலைப் புலிகள் இது தொடர்பாக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.


கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விடுதலைப் பலிகளின் அரசியல்துறையின் நவப்பணியகத்தில் இருந்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியத்தின் எழுச்சிக்கும் அதன் உட்கட்டுமான வளர்ச்சிக்கும் உரிய உழைப்புக்களை மேற்கொண்டு அயராது பாடுபட்டவர் தனது எழுத்துத் துறையால் தமிழ்த்தேசியத்தின் கூர்மைப்படுத்தலுக்கு ஓயாது அறை கூவல் விடுத்தவர் அற்புதமான கருத்துக்களை முன்வைத்தவர் தமிழ்த்தேசியத்திற்கு மாறான நடவடிக்கைகளை யும் கருத்துக்களையும் வன்மையாக மறுதலித்தவர். தமிழினத்தின் விடுதலைக்கான விடுதலைப்போராட்டத்தின் நியாங்களை எழுத்துத்துறையால் வலியுறுத்தியவர்.

இனத்தின் விடுதலைக்கான நியாங்களை வலுப்படுத்தும் ஆணித்ரமான கருத்துக்களையும் தமிழனத்தின் போராட்டத்திற்கு வலுவூட்டும் புள்ளிவிபரங்களையும், தரவுகளையும் அவ்வப்காலங்களில் தனது ஆக்கங்கள் மூலம் வெளிப்படுத்தியவர் நிகழ்காலத்தோடு எதிர் காலத்தை இணைத்து தமிழ் சமூகம் சுதாகரித்துக் கொள் வதற்கான அறிவுறுத்தல்களையும் சுட்டிக்காட்டுதல்களையும் மேற்கொண்டு ஊடகவியலாளனுக்குரிய சிறந்த பண்பிணை கொண்டவர்.

யுத்த, சமாதான காலத்தில் இன்னல்களை அனுபவித்த தமிழ் மக்களின் வாழ்வியல் துன்பங்களை விடுத லையுடன் கூடிய இயல்பு வாழ்க்கைக்காக மக்கள் கொண்ட ஏக்கங்களை உள்ளூரிலும் உலக நாடுகளிலும் வெளிக்கொண்டு வந்ததன் மூலம் சர்வதேசத்தின் நம்பிக்கை குரலாக விளங்கியவர். தமிழ்த்தேசிய தலைமை யின் கிழ் மிகுந்த மதிப்பும் பற்றுதியும் நம்பிக்கையையும் பெற்றவர் அந்த தலைமையின் நம்பிக்கைக்குரிய தகமைகளை மக்கள் மத்தியில் வெளிப்படுத்தி தமிழ்த்தேசிய தலைமையின் கீழ் மக்கள் அணிதிரள வேண்டிய வரலாற்று அவசியத்தை மக்களுக்கு உணர்த்தியவர். உண்மை நியாயம் என்பவற்றின் பக்கமாக அசையாது நிலையெடுத்து நின்றவர் ஆபத்துக்கள் எதிர்நோக்கிய போதும் தனது நிலையில் இருந்து சிறிதும் மாறுபடாது வரலாற்றில் தான் வரித்த பாத்திரத்தை முழுமைபடுத்தியவர்.

கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் தமிழ்மக்களின் நேசசக்திகள் கொல்லப்படுவது கொடுஞ்செயலாகும் சமாதானம் நிலவிவரும் இக்காலத்திலும் இத்தகைய கொலை நடவடிக்கைகள் மூலம் சமாதானத்திற்கெதிரான சக்திகள் தமது அடாவடித்தனங்களை மேற்கொண்டுவருகிறார்கள் இந்நடவடிக்கையானது இத்தீவில் வாழும் மக்களை மீண்டும் இன்னலுக்குள் உள்ளாக்கும் வரலாற்றுக்காலத்திற்கே இட்டுச்செல்லும்.




எனவே இந்நிலையை கருத்தில் எடுத்து அரச படைகளும் அப்படைகளுடன் இணை ந்து செயற்படுபவர்களும் இக்கொலை களை நிறுத்திக்கொள்வதே இக்காலத் தின் கட்டாயமாகும்.

மூத்த ஊடகவியலாளர் ஜி.நடேசன் அவர் களின் இழப்பினால் தாழாது துயறுற்றி ருக்கும் குடுப்பத்தினருக்கு ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் பிரிவு அவர் குடும்பத்திற்கு எவ்வளவு தாக்கத்தையும், சோகத்தையும் ஏற்படுத் தியதோ அதேயளவுக்கு பத்திரிகை உலகிற்கும் எமக்கும் எமது தேசத்தின் வரலாற்றிற்கும் ஏற்படுத்தியிருக்கிறது.

# இந்தியாவில் தடை நீடிப்பு துரதிஷ்டவசமானது விமானப்படை எம்மிடம் இருப்பது உண்மை


## - தமிழ்ச்செல்வன்



தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையினை இந்தியா நீடித்துள்ளமை துரதிஷ்டவசமான நிகழ்வாகும் என்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் கடந்த 26ம் திகதி புதன்கிழமை செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த தமிழ்ச்செல்வன் புலிகளை இந்தியா அங்கீகரித்துத் தார்மிக ஆதரவினை வழங்கவேண்டும் என்பதே ஒட்டுமொத்தமான தமிழ் மக்களின் உணர்வும், எதிர்பார்ப்புமாகும். ஆனால் இதற்கு மாறாகத் தடையை இந்தியா நீடித்துள்ளமை துரதிர்ஷ்டவசமானது என்று குறிப்பிட்டார். இந்தியாவில் புதிய அரசாங்கம் பதவி ஏற்றுள்ளது. அந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் பொறுத்தே எதிர்காலத்தில் தாம் இந்திய அரசு தொடர்பாக விமர்சனங்களைக் கூற முடியும் என்றும் அவர் அங்கு கூறினார்.

விடுதலைப் புலிகளிடம் விமானப்படை மற்றும் விமானம் இருப்பது உண்மை. விமான ஓடுபாதை இருப்பதும் உண்மை. இது நீண்ட காலத்துக்கு முன்னர் கட்டி எழுப்பப்பட்டதாகும் என்றும் தமிழ்ச்செல்வன் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். விடுதலைப் புலிகளிடம் விமானம் உண்டா? முல்லைத்தீவுப் பகுதியில் அது பறந்ததா? எனச் செய்தியாளர் ஒருவர் கேட்டபோது அரசாங்கமும், படைத்தரப்பும் காலத்துக்கு காலம் கூறும் விடயம் இது. விடுதலைப் புலிகளிடம் விமானப் படையிருப்பது வெளிப்படையான விடயம் இது புதிய விடயமல்ல. புதிய விடயமாக கேள்வி எழுப்புவதுதான் புரியாத புதிராகவுள்ளது என்றும் அவர் கூறினார்.

# மட்டு. மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்



தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தொடர்ச்சியாகப் போராட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றனர். கடந்த வாரம் பழுகாமம் கண்டுமணி வித்தியாலயம், முனைத்தீவு சக்தி வித்தியாலயம், கோவில் போரதீவு வித்தியாலயம், வெல்லாவெளி பிரதேசச் செயலக மண்டம் ஆகிய இடங்களில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இடம்பெற்றன.

மாவடி முன்மாரிக் கோட்டை அரசியல்துறைப் பொறுப்பாளர் உதயராஜ் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில், மட்டக்களப்பு-அம்பாறை பிராந்திய அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மாவடி கோட்ட முன்மாரி இராணுவத் தளபதி ரமணன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

தற்போதைய அரசியல் நிலமையில் சமாதான நடவடிக்கைகள் தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்பட்டதுடன், அங்கிருந்த பொதுமக்கள் கேட்ட கேள்விகளுக்கும் அரசியல்துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள் விளக்கமளித்தார்கள்.

தேசியத் தலைவரின் வழிநடத்தலில் நம்பிக்கை வைத்து விடுதலையை முன்னெடுக்க வேண்டுமென்றும் தேச விரோத சக்திகளும், தென்னிலங்கை ஊடகங்கள் சிலவும் பொய்யான பிரச்சாரங்களை மேற்கொள்வதாகவும், அதனைப் பொதுமக்களை நம்ப வேண்டாமென்றும் இக்கருத்தரங்கில் உரையாற்றிய கௌசல்யன் தெரிவித்தார்.

# சந்திரிகாவின் பேச்சாளர் வன்னி சென்று திரும்பினார்?

சிறீலங்காவின் அரசுத் தலைவர் சந்திரிகா குமரதுங்காவின் பேச்சாளரும் புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸ் கடந்த 27ம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சிக்குச் சென்று திரும்பியிருக்கிறார்.

கடந்த 25ம் திகதி செவ்வாய்கிழமை யாழ்ப்பாணத்துக்குச் சென்ற ஹரீம் பீரிஸ் அன்று மாலையே கொழும்பு திரும்ப ஏற்பாடாகியிருந்தது. எனினும், வன்னி நிலைமையை அறிவதற்காகக் கடைசி நேரத்தில் அவர் கொழும்பு திரும்புவதைத் தவிர்த்துவிட்டு யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்தார் என்றும் வியாழன் காலை அவர் ஏ-9 வீதியூடாக கிளிநொச்சிக்குச் சென்றார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

முகமாலையில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலையில் இருந்து தமிழீழ காவல்துறையின் விசேட வாகன அணி ஹரீம் பீரிஸுக்குப் பாதுகாப்பு வழங்கியது. கிளிநொச்சியில் அவர் சென்ற சகல இடங்களிலும் பின்னர் புளியங்குளம் காவலரண் வரைக்கும் அவர்கள் பாதுகாப்பு வழங்கினர். ஹரீம் பீரிஸ், கிளிநொச்சி செயலகம், வெண்புறா நிறுவனம், மனித நேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவு ஆகியவற்றுக்குச் சென்று அங்குள்ளவர்களுடன் கலந்துரையாடினார்.

# வீட்டுச்சுவர் இடிந்து விழுந்ததில் தாயும் குழந்தையும் மரணம்

வவுனியாவிலுள்ள செக்கட்டிப் பிளவு என்னும் பகுதியில மழை காரணமாக வீட்டுச் சுவர் இடிந்து விழுந்ததில் தாயும் பிள்ளையும் இறந்துள்ளனர். கடந்த 27ம் திகதி வியாழக்கிழமை நடந்த இந்த சம்பவத்தில் மேலும் மூன்று பிள்ளைகள் காயம் அடைந்துள்ளனர்.

இந்தச்சம்பவத்தின் போது கனகலிங்கம் திவ்வியா(7) கனகலிங்கம் லூாசியா(30) ஆகியோர் இறந்துள்ளனர் கனகலிங்கம் லூாசியாவின் மற்றய பிள்ளைகளான க.சிந்துஷா(5) க.அலக்ஷனா(4) க.பகீரதன்(3) ஆகியோர் காயம் அடைந்து வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் பகீரதன், அலக்ஷனா ஆகியோர் மேலதிகச் சிகிச்சைக்காக கண்டிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்


இதேவேளை, வவுனியா ஓமந்தை பகுதியில் கடந்த 27ம் திகதி இடம்பெற்ற வீதி விபத்தில் டேவிட் ஜேசுதாசன் (34) என்பவர் உடல் சிதைந்து உயிரிழந்துள்ளார். வவுனியாவிலிருந்து மாலை 5 மணியளவில் ஓமந்தைப் பகுதியை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த கண்டர் வாகனம் ஒன்று எதிர் திசையில் உந்துருளியில் வந்து கொண்டிருந்த அவர் மீது மோதியுள்ளது. இவ்விபத்தில் அவர் அந்த இடத்திலேயே உடல் நசிந்து இறந்துள்ளார். இறந்தவரின் சடலத்தை வீதியின் ஒதுக்குப் புறமாகப் போட்டுவிட்டு வாகனத்தில் வந்தவர்கள் தப்பி ஓடியுள்ளனர்.

# கோதுமை மா அத்தியாவசியப் பொருளாக பிரகடனம்

கோதுமை மா கடந்த 26ம் திகதி புதன்கிழமை நள்ளிரவு முதல் அத்தியாவசியப் பொருட்களில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பிறிமா நிறுவனத்தின் தேவைக்கேற்ப கோதுமை மாவின் விலையை அதிகரிக்க முடியாதென்று சிறீலங்காவின் வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கோதுமை மாவின் விலையை உயர்த்துவதாயின், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையிடம் அனுமதி பெறப்பட வேண்டும். 2001ம் ஆண்டு அரசாங்கத்திற்கும் பிறிமா நிறுவனத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் சில சரத்துக்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இதன்படி மிகவும் குறைவான விலைக்கு எந்தவொரு நிறுவனத்திற்கும், கோதுமை மாவை இறக்குமதி செய்து விநியோகிக்க அனுமதி வழங்கப்படும். நுகர்வோரைப் பாதுகாக்கும் நோக்கிலேயே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஆசிக்குளத்தில் தம்பையாவின் இறுதிக் கிரியை



கடந்த 24ம் திகதி திங்கட்கிழமை மட்டக்களப்பில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட கிழக்கு பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் குமாரவேல் தம்பையாவின் இறுதிக் கிரியைகள் 26ம் திகதி புதன்கிழமை மாலை அவரது சொந்த ஊரான வவுனியா ஆசிக்குளம் இந்து மயானத்தில் நடைபெற்றது. அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த பூதவுடலுக்கு மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், அதிகாரிகள், மதத் தலைவர்கள் உட்பட பெரும் திரளானவர்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள். இறுதிச் சடங்கிலும் பெரும் திரளானவர்கள் கலந்து கொண்டனர்.

# இராணுவ புலனாய்வுப்பிரிவினர் புலிகளின் பகுதிக்குள் ஊடுருவல்

சிறீலங்கா இராணுவ விசேட புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 15 பேர் கொண்ட குழு, மட்டக்களப்பிலுள்ள தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவியிருப்பதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர். அதிவிசேட பயிற்சிகளைப் பெற்ற இந்த அணியினர், கடந்த 25ம் திகதி செவ்வாய்கிழமையே தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவியதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இக்குற்றச்சாட்டை, சிறீலங்காப் படைத்தரப்பு முற்றாக மறுத்துள்ளது.


லாச்சப்பலில் ஒரு புதிய உதயம்

தரமான கூடவே சுவையான
இறைச்சித் தெரிவுகளுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்
லாச்சபலில் யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை

5, Rue Perdonnet, 75010 Paris.
Métro - La Chapelle / Gare du Nord
Tél: 01 40 05 92 91

எமக்கு வேறு கிளை நிறுவனங்கள் இல்லை

யாழ்ப்பாணம் இறைச்சிக்கடை
YALPPAANAM BOUCHERIE

ஆட்டு இறைச்சி - மாட்டு இறைச்சி
கோழி இறைச்சி
மான் இறைச்சி - மரை இறைச்சி
காட்டுப் பன்றி - காட்டுக் கோழி
இன்னும்...! இன்னும்...! பலவகை.

Pub-Fr

# சிங்கள மக்களை மீண்டும் அழிவுக்குத் தள்ளப்போகும்

# ஜே.வி.பி.யின் அரசமைக்கும் கனவு!



ஒருவகையான புரட்சியின் மூலமே அரசாங்கத்தில் பிரதான பங்காளிகளாகி இன்று அரசாங்கத்தையே கொண்டு நடத்தும் மிகப்பெரும் சக்தியாக மாறி விட்டதாக ஜே.வி.பி. தனக்குத்தானே புகழாரம் சூட்டியிருக்கின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற கூட்டமைப்பில் ஜே.வி.பி. அங்கம் வகிப்பதனால் ஜே.வி.பி. அரசாங்கம் என்று கூறினாலும் சரியானதுதான் என ஜே.வி.பி.யின் அமைச்சர்கள் அவ்வப்போது சிங்கள மக்கள் மத்தியில் கூறிவருகின்றார்கள். இவர்கள் கூறுகின்ற புரட்சி எத்தகையது என்ற கேள்வி அரசியல் ஆய்வாளர்களிடையே எழுகின்றது. சுருக்கமாகக் கூறுவதானால் ஜே.வி.பி. தற்போது அரசாங்கத்தை எப்படி நடத்துவது என்ற ஓர் அரசியல் பயிற்சியை சிறீலங்காச் சுதந்திரக்கட்சியோடு சேர்ந்து எடுத்து வருகின்றது என்றே கூறலாம். ஜே.வி.பி. ஒருபோதும் அரசாங்கத்தை அமைக்கும் அளவிற்குப் பெரும்பான்மைப்பலம் பெற்றதில்லை. ஆகவேதான் பெரும்பான்மைப்பலம் பெற்ற, அதே வேளை அரசாங்கம் ஒன்றை காலத்திற்கு காலம் அமைத்து வந்த பிரதானமான அரசியல் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை ஜே.வி.பி. அமைத்திருக்கின்றது.

இந்த அரசாங்கத்தில் ஜே.வி.பியைச் சேர்ந்த 39 உறுப்பினர்கள் இருக்கின்றனர். இன்னும் ஒருவருடத்தில் தேர்தல் நடந்தால் தனித்துப்போட்டியிட்டுக் கிட்டத்தட்ட 80 ஆசனங்களைக் கைப்பற்றலாம் என்ற யோசனை ஜே.வி.பிக்கு இருக்கின்றது. அதனாலேதான் ஒரு வகையான புரட்சியின் மூலம் அரசாங்கத்தில் பிரதான பங்காளிகளாக மாறிவிட்டோம் என்று ஜே.வி.பி. கதை விடுகின்றதுபோல் தெரிகின்றது. அவ்வாறானதொரு நிலை ஏற்பாட்டல் சிறீலங்கா சுதந்திரக்கட்சியை மூன்றாவது இடத்திற்குத் தள்ளிவிட்டு அவர்களின் ஆதரவுடன் ஒரு பெரும்பான்மை அரசாங்கத்தை அமைப்பதுதான் ஜே.வி.பியின் எதிர்பார்ப்புப்போல் தெரிகின்றது. இவர்கள் கூறுகின்ற புரட்சி அதனையே வெளிப்படுத்துகின்றது. ஜே.வி.பி. ஒரு காலத்தில் புரட்சியில் ஈடுபட்டுத் தங்களைத் தாங்களே படுமோசமாக அழித்துக்கொண்டவர்கள் அல்லது அழிக்கப்பட்டவர்கள் எனலாம். யாருக்கு எதிராகப் புரட்சி செய்தார்களோ யாரால் அழிக்கப்பட்டார்களோ அவர்களோடு சேர்ந்துதான் இன்று ஜே.வி.பி. ஆட்சிக்கட்டிலை பிடித்திருக்கின்றது. இது எல்லோருக்கும் தெரிந்த நிகழ்வுதான். எதிர்காலத்தில் அரசாங்கத்தைத் தனியே அமைப்பதற்கான ஓர் அரசியல் பயிற்சியை ஜே.வி.பி தற்போது எடுத்து வருகின்றது என்பது நிதர்சனமாகும்.

இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். நாடு பொருளாதார அபிவிருத்தியை அடைய வேண்டும் என்ற பொதுப்படையான நோக்கங்கள் அல்லது தேசிய நலன்கருதிய சிந்தனைகள் ஜே.வி.பிக்கு மூன்றாம் பட்சமாகவே இருக்கின்றது. நாடு எக்கேடு கெட்டாலும் இந்த அரசியல் பயிற்சியை முடித்துக்கொண்டு பௌத்த தேசியவாத மாக்ஸிச கலப்புக்கொண்ட அரசாங்கம் ஒன்றை நிறுவவேண்டும் என்பதில் ஜே.வி.பி. உறுதியாகவே இருக்கின்றது. புரட்சி மூலம் ஆட்சிக்கு வந்திருப்பது எமது ஆரம்பகட்ட நடவடிக்கை என்றுகூறி மீண்டும் ஒரு புரட்சிக்குத் தயாராகுங்கள் என அறைகூவுகின்றனர். இது, மக்களை மீண்டும் ஜே.வி.பி. ஏமாற்றுகின்றது என்பது வெளிப்பட்டு நிற்கின்றது.

சாதாரணமாக புரட்சி என்ற சொல் பொதுவான மாறுதலைத் தூண்டுகின்ற வழிமுறைகளையும் மாறுதலின் நோக்கத்தையும் விளக்குகின்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றது. விரிவான முறையில் மார்க் ஐவர் விளக்கம் கூறுகின்றபடி, நிலைபெற்ற ஒழுங்கு முறையை வன்முறையில் தகர்த்தெறிகின்ற செயலில் இறங்காமல் அரசாங்கத்தில் ஒரு முடிவான மாற்றம் கொண்டு வருதல் என்ற பொருளும் கொள்ளலாம். சுருக்கமாக கூறுகையில் அரசாங்கத்தில் குறிப்பிட்ட மாறுதல் கொண்டுவர பின்பற்றப்படும் வழிமுறையே புரட்சி என்று கொள்ளலாம்.

> *ஜே.வி.பி. ஒருபோதும் அரசாங்கத்தை அமைக்கும் அளவிற்குப் பெரும்பான்மைப்பலம் பெற்றதில்லை. ஆகவேதான் பெரும்பான்மைப்பலம் பெற்ற, அதேவேளை அரசாங்கம் ஒன்றை காலத்திற்கு காலம் அமைத்து வந்த பிரதானமான அரசியல் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை ஜே.வி.பி. அமைத்திருக்கின்றது.*

ஆகவே ஜே.வி.பி. கூறுகின்ற புரட்சி என்ன? சகல சமூகங்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அரசாங்கத்தில் மாறுதலை ஏற்படுத்துவதா? அல்லது இன வன்முறையைத் தூண்டி அதன் மூலம் அரசாங்கத்தை அமைப்பதா? தற்போதைய நிலையில் பூரணமான சமஷ்டி முறையொன்றை ஏற்படுத்தி தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கூடிய வகையில் சிறீலங்காவின் அரசாங்க முறையில் மாற்றம் தேவை. அவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்துவதுதான் ஜே.வி.பியின் புரட்சியா? புரட்சி என்பது இருவகைப்படுகின்றது. ஒன்று தேசிய நலஞ்சார்ந்த நல்ல மாற்றங்களுக்கான கிளர்ச்சியைக் குறிக்கும். மற்றையது சர்வாதிகாரத்திற்கான அல்லது அடக்குமுறைக்கான வன்முறைகளையும் குறிக்கும். 1970களில் 1980களில் ஜே.வி.பி. ஏன் கிளர்ச்சி செய்தது என்பதற்கான பொருள் விளக்கம் இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஜே.வி.பியின் தற்போதைய உறுப்பினர்களுக்கும் குறிப்பாக விமல் வீரவன்ச, ரில்வின் சில்வா போன்றோருக்கும் அது தெரியுமா என்பது சந்தேகமே. அவர்கள் அப்போது ஏன் கிளர்ச்சி செய்தார்கள் என்பதற்கான காரணங்களைத் தேடிக்கண்டு பிடிப்பதற்கான நேரத்தை செலவிடாமல் இவர்கள் தற்போது கூறுகின்ற புரட்சிபற்றிப் பொருள் விளக்கம் தேடுவது அவசியமாகும்.

ஏனெனில், மாக்ஸிசம், லெனின்வாதம் என்றெல்லாம் பீரங்கிப்பிரசாரங்களில் தற்போது இறங்கியிருக்கின்றார்கள்.

> *1970களில் 1980களில் ஜே.வி.பி. ஏன் கிளர்ச்சி செய்தது என்பதற்கான பொருள் விளக்கம் இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஜே.வி.பியின் தற்போதைய உறுப்பினர்களுக்கும் குறிப்பாக விமல் வீரவன்ச, ரில்வின் சில்வா போன்றோருக்கும் அது தெரியுமா என்பது சந்தேகமே. உண்மையாகவே 1970, 1980 களில் ஜே.வி.பி.யின் புரட்சிக்கு ஆதரவு வழங்கி அழிவைக்கண்ட சிங்கள மக்கள், அதனை விட மிகப்பெரும் அழிவு ஒன்றை ஜே.வி.பி என்ற சட்டரீதியான அரசாங்கத்தின் மூலமாக எதிர்காலத்தில் எதிர்கொள்ளப்போகின்றார்கள் என்பதை ஜே.வி.பியின் தற்போதைய புரட்சி என்ற கோஷம் கட்டியம் கூறுகின்றது.*

லெனின் ரஷ்யாவை உருவாக்கியது போன்று புதிய சிறீலங்காவை உருவாக்குவதே தமது குறிக்கோள். அதற்காகவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற அரசாங்கத்திற்குள் இருந்து கொண்டு புரட்சி செய்கின்றோம் என ஜே.வி.பி கூறுகின்றது. சிங்கள மக்களும் அதனை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு ஜே.வி.பிக்கு செல்வாக்கு உயர்ந்துகொண்டே போகின்றது. ஆகவேதான் உண்மையான புரட்சி பற்றிய விளக்கம் அல்லது அதன் பயன்பாடு பற்றிச் சிங்கள மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். ஜே.வி.பியின் புரட்சி எதுவாக இருந்தாலும் அது பற்றி தமிழ்மக்கள் கவலை கொள்ளத் தேவையில்லை அரசியல் அமைப்பை அல்லது அரசாங்க அமைப்பு முறையை பலாத்கார மூலமாகவோ அல்லது அரசியல் அமைப்பிற்கு முரணான செயல்கள் மூலமாகவோ மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு புரட்சியை பயன்படுத்தினால் அது வரவேற்கக்கூடியது.

பிரெஞ்சுப்புரட்சி பிரான்சில் ஏதேச்சாதிகாரத்தை மாற்றி அதற்கு பதில் மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய ஆட்சிமுறையைக் கொண்டு வந்தது. 1917 நடந்த ரஷ்யப்புரட்சி அரசாங்கத்தின் நோக்கத்தையும் அரசாங்கத்தை இயக்கி வந்த அனைவரையும் மாற்றியமைத்தது. ஜோன் மன்னனின் ஏதேச்சாதிகாரத்தை மாற்றி தொழிலாளர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் உருவாக்கப்படும் ஆட்சியை இப்புரட்சி ஏற்படுத்தியது. புரட்சி என்பது சட்டரீதியில் இயங்குகின்ற அரசாங்கத்தில் வலிமையை பயன்படுத்தி அவ்வலிமையைப் பயன்படுத்துவோர் அரசின் உண்மையான குறிக்கோள் என்று வாதிடும் ஒரு மாற்றத்தைக் கட்டாயமாகக் கொண்டுவர விளையும் முயற்சி என்று லாஸ்கி கூறுகின்றார். ஆகவே ஜே.வி.பி. லாஸ்கி கூறுகின்ற இந்தப்புரட்சியைச் செய்யப்போகின்றதா அல்லது தமிழர்களுக்கு எதிரான தமது உணர்ச்சியின் வேகத்தை வைத்து ஒரு சதி, ஒரு கிளர்ச்சி, ஒரு கலகம் போன்றவற்றை செய்யப்போகின்றதா? புரட்சி என்பதன் மறுபக்கத்தை உள்நாட்டுப்போருக்கான ஒழுங்குபடுத்தல் என்றும் அழைக்கலாம்.

புரட்சியின் முதற்கட்டம் அதிகாரத்தைக் கைப்பற்றி அதன்மூலம் நடைமுறைகளில் இருக்கும் வழிவகைகளில் மாறுதல் காண்பது. இரண்டாவது கட்டம் அவ்வதிகாரத்தை நீண்டகாலம் நிலை நிறுத்தி அதன் மூலம் மாற்றியமைத்த புதுவழிமுறைக்கு ஒரு ஸ்திரத்தன்மையை அளிப்பது. சில புரட்சிகள் இவ்விரு கட்டங்களுக்கும் அப்பாற் செல்வதில்லை. ஆனால் ஜே.வி.பி. கூறுகின்ற புரட்சியானது இந்த இரு கட்டங்களுக்கும் அப்பாற்பட்டே செல்லப்போகின்றது. ஒரு குறிப்பிட்ட ஆட்சியாளர்களை மாற்றியமைக்க புரட்சியாளர்கள் ஒன்றிணைகின்றனர். அவ்வாறுதான் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை மாற்றியமைக்க ஜே.வி.பி. என்ற புதுவிதமான புரட்சியாளர்களுடன் சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஒன்றிணைந்தது. லக்சியின் கூற்றுப்படி ஆட்சியாளர்களை மாற்றியமைக்க ஒன்றிணைந்த புரட்சியாளர்களிடையே பின்னர் பிரிவுகள் எழுவது இயல்பானது என்கிறார். அந்த வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் தற்போது பிரிவினை ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் மார்க் ஐவர் என்பவரின் கருத்துப்படி ஏதோ ஒரு தேவைக்காக இணைந்த புரட்சியாளர்களிடையே பிரிவினை ஏற்படும் போது அதனை மக்கள் இனங்கண்டு கொள்ளாவிட்டால் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கே ஆபத்து என்கின்றார். 'அவ்வாறானதொரு நிலைதான் தற்போது சிறீலங்காவில் ஏற்பட்டிருக்கின்றது. தங்களுடைய சுயவாழ்வை ஒரு புரட்சி எவ்வண்ணம் பாதிக்கின்றது என்பதை தெரிந்துகொள்ளமாலேயே மக்கள் பொதுவாகப் புரட்சிக்கு ஆதரவு வழங்குகின்றனர் என்று மார்க் ஐவர் குறிப்பிட்டிருப்பதும் சிங்கள மக்களுக்குப் பொருத்தப்பாடாகின்றது.

ஜே.வி.பிக்கு மக்கள் ஆதரவு வழங்குகின்றமை அதனையே கோடிகாட்டுகின்றது. உண்மையாகவே 1970, 1980 களில் ஜே.வி.பி.யின் புரட்சிக்கு ஆதரவு வழங்கி அழிவைக் கண்ட சிங்கள மக்கள், அதனை விட மிகப்பெரும் அழிவு ஒன்றை ஜே.வி.பி என்ற சட்டரீதியான அரசாங்கத்தின் மூலமாக எதிர்காலத்தில் எதிர்கொள்ளப்போகின்றார்கள் என்பதை ஜே.வி.பியின் தற்போதைய புரட்சி என்ற கோஷம் கட்டியம் கூறுகின்றது.

– கொழும்பிலிருந்து **ஊரோடி**

# பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவி யாருக்கு?

**- சுபத்ரா -**

முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவை, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த புதன்கிழமை ஒரு பிரதி அமைச்சராக நியமித்தார். ஒரு முன்னாள் பிரதமருக்குச் சாதாரண பிரதி அமைச்சர் பதவியா என்று யாரும் வாய்பிளக்கத் தேவையில்லை. ஏனென்றால் இந்தப்பிரதி அமைச்சர் பதவியானது - நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி பதவிக்கு முன்னால் அசாதாரணமானதாக மதிப்பிடப்படும் பிரதமர் பதவியை விடவும் சக்திவாய்ந்தாகவே கருதப்படுகிறது.

அதுதான் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவியாகும். முன்னர் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர்களாக இருந்தவர்கள் பெற்ற பிரபலமும், அவர்கள் அதிகாரத்தைக் கையாண்ட விதத்தையும் உணர்ந்தவர்கள், இது எத்தனை சக்தி வாய்ந்த பதவி என்பதை நிச்சயம் புரிந்து கொண்டிருப்பார்கள். பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக ரத்னசிறி விக்கிரமநாயக்காவைச் சனாதிபதி சந்திரிகா நியமிக்கப்போகிறார் என்று கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னரே ஊகங்கள் வெளியாகியிருந்தன. இதனால் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் பதவியேற்பு ஆச்சரியமோ, அதிர்ச்சியோ தரக் கூடியதொன்றல்ல. ஆனால் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக ரத்னசிறி விக்கிரமநாயக்கவை ஏன் சனாதிபதி சந்திரிகா தெரிவு செய்தார்? எதிர்பார்க்கப்பட்டது போல முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தைக்கு ஏன் இந்தப்பதவி வழங்கப்படவில்லை என்பன இப்போது முக்கிய கேள்விகளாகியிருக்கின்றன.



ரத்னசிறி

2001ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட ஜெனரல் அநுருத்த ரத்வத்த பொதுஜன ஐக்கிய முன்னிலையின் சார்பில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டார். ஆனால் அவருக்கு இந்த முறை தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பையோ, தேசியப் பட்டியலிலோ சனாதிபதி சந்திரிகா இடம் கொடுக்கவில்லை. இதற்குக் காரணம் - 2001ம் ஆண்டுத் தேர்தலின்போது உடதலவின்னவில் 10 முஸ்லிம் இளைஞர்களைச் சுட்டுக் கொன்றதான வழக்கில், ஜெனரல் ரத்வத்தையும் அவரது புதல்வர்களும் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்ததான குற்றச்சாட்டாகும்.

இந்தச் சம்பவத்தால் ஜெனரல் ரத்வத்தைக்கு மட்டுமன்று, சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. முஸ்லிம்களின் ஆதரவை இழக்க வேண்டிய நிலை ஏற்படுமா என்று அஞ்சியே சனாதிபதி சந்திரிகா சென்ற தேர்தலில் ஜெனரல் அநுருத்த ரத்வத்தையைத் தேர்தல் களத்தில் இறக்கவில்லை.

இதேபோன்று முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவுக்கும் தேசியப்பட்டியலில் கூட இடம் அளிக்கப்படவில்லை. ரத்னசிறி விக்கிரமநாயக்கவைத் தவிர்க்க முடியாத ஒரு கட்டத்தில்தான் சனாதிபதி சந்திரிகா பிரதமராக நியமித்தார்.

பிரதமர் பதவியில் அமர்பவர் தனக்குப் போட்டியாக வந்துவிடக் கூடாதென்பதில் மிகுந்த அக்கறையுடன் இருந்த சனாதிபதி சந்திரிகா, வயதால் தளர்ந்து போயிருந்த தனது தாயாரான சிறீமாவோ அம்மையாரைப் பிரதமராக்கினார். 2000ம் ஆண்டு தேர்தல் முடிந்த கையோடு - சிறீமாவோ காலமானதையடுத்து ஆட்சிக்கு வந்த பொது ஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு ரத்னசிறி விக்கிரம நாயக்காவைப் பிரதமராக்கினார். இவர் தனக்குப் போட்டியாக வந்து விடமாட்டார் என்ற கணிப்பில்தான் சந்திரிகா இவ்வாறு நடந்து கொண்டார்.

ஆனால் ரத்னசிறி விக்கிரமநாயக்க பிரதமராகப் பதவி வகித்த காலத்தில் சிறுபான்மையினருக்கு எதிராக வெளியிட்ட கருத்துக்களும், யுத்தத்தின் மூலம் புலிகளையும் தமிழ் மக்களையும் அழிக்கப் போவதாக நிகழ்த்தியவுரைகளும் அவரை ஒரு வல்லமையானவராக சிங்களவர்களின் மத்தியில் இனங்காணப்பட்டது.

சென்ற தேர்தலில் சிறுபான்மையினரின் ஆதரவு முக்கியம் என்பதால் - சிறுபான்மையினரின் ஆதரவைப் பாதிக்கச் செய்யக்கூடியதென உணர்ந்தே ஜெனரல் ரத்வத்தையையும், ரத்னசிறி விக்கிரமநாயக்கவையும் தேர்தலில் இருந்து ஒதுக்கி வைத்திருந்தார்.

ஆனால் தேசியப்பட்டியலில் கூட இந்த இருவரினதும் பெயர்கள் விடுபட்டபோது சர்ச்சைகள் எழுந்தன. அப்போது, இந்த இருவரும் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள். தேர்தலின் பின்னர் இதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. தேர்தலுக்குப் பின்னரும் கூட இந்த இருவரையும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக - தேசியப் பட்டியல் மூலம் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், ஜெனரல் அநுருத்த ரத்வத்தைக்கு மீண்டும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவி வழங்கப்படும் என்றும் செய்திகள் வெளிவந்தன.

ஆனால் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் பதவி விலகி - புதிதாக மூவர் பதவியேற்றபோதும் - அதில் ஜெனரல் ரத்வத்தைக்கு இடமளிக்கப்படாததுடன், முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்குப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியைச் சனாதிபதி சந்திரிகா வழங்கியிருக்கிறார். ஜெனரல் அநுருத்த ரத்வத்தையைச் சனாதிபதி சந்திரிகா ஏன் இந்தளவுக்கு ஒதுக்கி வைத்திருக்கிறார் என்ற கேள்வி இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. தனது மாமனாராகிய ஜெனரல் ரத்வத்தைக்குப் பிரதி அமைச்சர் பதவியை மட்டுமன்றி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைக் கூட வழங்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

இங்கேயும் சனாதிபதி சந்திரிகாவின் சுயலாப மேலீட்டைக் காண முடிகின்றது. இப்போதைய நிலையில் சனாதிபதி சந்திரிகாவுக்கு, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியில் யார் அமர்த்தப்பட வேண்டும் என்பது முக்கியத்துவமில்லை. ஏனென்றால் இது சமாதான காலம். இந்தச் சூழலில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவி எந்த வகையிலும் முக்கியத்துவமானதன்று. படைகளைத் தயார் நிலையில் வைத்திருப்பதைவிட வேறெந்தப் பெரிய வேலையும் இப்போது இல்லை.

**இப்போதைய நிலையில் சனாதிபதி சந்திரிகாவுக்கு, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியில் யார் அமர்த்தப்பட வேண்டும் என்பது முக்கியத்துவமில்லை. ஏனென்றால் இது சமாதான காலம்.**

யுத்தச் சூழல் ஒன்று ஏற்பட்டால் மட்டுமே அதைச் சமாளிக்கப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பம்பரமாகச் சுழல வேண்டும். அதற்கு ரத்னசிறி விக்கிரமநாயக்க பொருத்தமானவரே என்பதை - ஒருவருட பிரதமர் பதவிக்காலத்தில் அவர் சிறுபான்மையினருக்கு எதிராகச் செயற்பட்ட விதத்தின் மூலம் நிரூபித்திருந்தார்.

இப்போதைய சூழலில் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்குப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவியை வழங்கியதில் எந்தச் சர்ச்சையும் இல்லை. ஆனால் ஜெனரல் அநுருத்த ரத்வத்தையை மட்டும் சனாதிபதி சந்திரிகா ஏன் ஒதுக்கிவைத்திருக்க வேண்டும்? இதற்கு இப்போது நிறையவே காரணங்கள் இருக்கின்றன.



சந்திரிகா

ஜெனரல் ரத்வத்த 1994ம் ஆண்டு முதல் 2001ம் ஆண்டு வரைப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக இருந்து தமிழ் மக்களுக்கு எதிரான தீவிர போரை நடத்தி - பெரும் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டவர்.

புலிகளைப் பொறுத்த வரையில் ஜெனரல் ரத்வத்தை ஒரு விரும்பத்தகாத - வெறுக்கத்தக்க மனிதராகவே பார்க்கப்படுபவர். இப்படிப்பட்ட ஒருவரை இப்போதைய சூழ்நிலையில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக்கினால் புலிகளின் வெறுப்பையும் அவநம்பிக்கையையும் சந்திக்க நேரிடும்.

இப்போதுள்ள சூழலில் சனாதிபதி சந்திரிகாவுக்கு ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்வதென்பதே முதலாவது நோக்கமாக இருக்கிறது. ஜே.வி.பி யுடன் சேர்ந்து சிறுபான்மை அரசை அமைத்தாலும் - இது நிச்சயமான, நிலையற்ற அரசு என்பதை சந்திரிகா தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார்.

தனது கூட்டணியில் ஜே.வி.பியோ - ஜே.வி.பி சார்பானவர்களோ பலம் பெற்றுவிடக் கூடாதென்பதிலும் - அதேவேளை தனது ஸ்திர நிலையைப் பேணிக்கொள்ள வேண்டும் என்பதிலும் சனாதிபதி சந்திரிகா மிக உறுதியாக இருக்கிறார். புலிகளுடன் பேச்சு நடத்தி அமைதியான சூழலைத் தொடரச் செய்வது, புலிகளின் ஆதரவு, நன்மதிப்பைக் கொண்டு ஆட்சியை உறுதி செய்து கொள்வது, தேசிய அரசு ஒன்றை நிறுவி அரசியல் யாப்பை மாற்றி தனது அரசியல் எதிர்காலத்தை உறுதி செய்து கொள்வது, இவையெல்லாம் சனாதிபதி சந்திரிகாவின் இப்போதைய இலக்கு.



ரத்வத்தை

முஸ்லிம் காங்கிரஸில் பிளவை ஏற்படுத்திச் சிறுபான்மை அரசை ஓரளவுக்குக் காப்பாற்றிக் கொண்டாலும் இதை நிலையாகப் பேணுவது உறுதியல்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பு 22 ஆசனத்துடன் இருக்கும் நிலையில் இவர்கள் எதிர்க்கட்சியுடன் இணைந்து கொள்ளாமல் தடுப்பதற்குப் புலிகளுடன் நல்லுறவை ஏற்படுத்தச் சந்திரிகா முற்படுகிறார். இதேவேளை, ஐ.தே.கவுடன் சேர்ந்து தேசிய அரசாங்கம் அமைக்கும் முயற்சியிலும் சந்திரிகா தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார். இப்படி தனது அரசியல் எதிர்காலத்தைத் தொடர்ந்து ஸ்திரமான நிலையில் தக்க வைத்துக் கொள்வதற்காக ஜெனரல் அனுருத்த ரத்வத்தையை இப்போதைக்கு ஒதுக்கி வைத்திருக்கத் தீர்மானித்திருக்கிறார்.

ஆனால் ரத்வத்தை எத்தனை காலத்துக்கு இப்படி ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பார் என்பதற்கு உறுதியில்லை. மகிந்த ரஜபக்ஷவையும் ஜே.வி.பி.யையும் ஓரம்கட்ட, சந்திரிகா முற்படும்போதோ, தமிழரையும் புலிகளையும் அடக்கி ஒடுக்க சந்திரிகா நினைக்கும் போதோ ஜெனரல் ரத்வத்தை மீளவும் எழுச்சி பெறுவார். அத்தகைய தருணங்களில் சந்திரிகா தனது மாமனாரான ரத்வத்தையைத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்துவார் என்பதில் மட்டும் சந்தேகம் இல்லை.


# ராஜீவ் கொலை விசாரணைக் குழுவின் பதவிக் காலத்தை நீடிக்க பரிந்துரை

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பான விசாரணைக் குழுவின் பதவிக் காலத்தை மேலும் நீடிப்பதற்கு இந்தியாவின் தலைமை அமைச்சர் மன்மோகன் சிங்கிற்கு மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜுன் சிங் பரிந்துரை செய்துள்ளார்.

கடந்த ஆட்சியின்போது இது குறித்து விசாரிப்பதற்கு எம்.எம்.டி.ஏ. என்னும் பன்முக விசாரணை அமைப்பு ஒன்று அமைக்கப்பட்டது. இதன் பதவிக்காலம் இந்த மாதம் 31ம் திகதியுடன் முடிகிறது. இந்நிலையில், இந்த அமைப்பிற்குக் காலநீடிப்பு வழங்குவதற்கு அர்ஜுன்சிங் முடிவுசெய்துள்ளார். இதற்கான ஒப்புதலைப் பெறுவதற்காக அவர் தலைமை அமைச்சர் மன்மோகன் சிங்குக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

பதவியேற்ற இரு நாட்களில் பாடவிதானங்கள் குறித்தோ வரலாற்று பாடம் தொடர்பாகவோ நிகழ்ச்சித் திட்டம் எதனையும் அர்ஜுன் சிங் முன்வைக்கவில்லை. ஆனால், ராஜீவ் கொலைப் பின்னணிச் சதி தொடர்பாக விசாரணை நடத்தவேண்டுமெனப் பிரதமர் மன்மோகன் சிங்கைக் கேட்டிருக்கிறார்.

திடீரென விசாரணை செய்யுமாறு அர்ஜுன் சிங் கேட்பதற்குக் காரணமாக அமைந்ததென்ன? தி.மு.க.வுக்கு எதிராகக் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்குப் பல்தரப்பு ஒழுங்குமுறை கண்காணிப்பு நிலையம் எதனையும் கூறவில்லை என்பதை கடந்த புதன்கிழமை அர்ஜுன் ஏற்றுக் கொண்டுள்ளார்.



ஆயினும், கடந்த அரசாங்கம் பல்தரப்பு ஒழுங்குமுறைக் கண்காணிப்பு நிலையத்தை தனக்குச் சாதகமான முறையிலேயே இயங்கச் செய்தது. ஆதலால், 'இதன் பதவிக்கால -த்தை நீடிக்க வேண்டும். இறுதி அறிக்கை மற்றும் குற்றப் பத்திரிகையை அந்த அமைப்பு வெளியிட வேண்டும்', என்று அர்ஜுன் சிங் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக இச்செய்தியைப் பிரசுரித்திருக்கும் இணையத்தளம், இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர் மிஸ்ராவோடு தொடர்பு கொண்டபோது, மத்திய புலனாய்வுப் பிரிவின் ஒரு பிரிவே பல்தரப்பு ஒழுங்குமுறைக் கண்காணிப்பு நிலையமாகும். தற்போது விசாரணைகளில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. குற்றப் பத்திரிகை வெளிவரும் சாத்தியத்தை நான் நிராகரிக்கவில்லை' என்று அவர் கூறியுள்ளார்.

சர்ச்சைக்குரிய ஜெயின் அறிக்கையைத் தயாரித்த முன்னாள் டில்லி மேல் நீதிமன்ற நீதிபதி மிலால் சரத் ஜெயின் இந்த விடயம் குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை. 'காங்கிரஸ் தனது மனதை மாற்றியுள்ளதாகத் தெரிகிறது. தமிழ் ஈழத்துக்கான தனது ஆதரவை தி.மு.க. மீண்டும் தெரிவிக்க ஆரம்பித்தால் திரும்பவும் நெருக்கடியைச் சந்திக்க வேண்டிவரும்', என்று அவர் கூறினார். பல்தரப்பு ஒழுங்குமுறை கண்காணிப்பு நிலையப் பணிகளுக்குப் புத்துயிர்ப்பளிக்க வேண்டுமென அர்ஜுன் சிங் கேட்டுள்ளமை குறித்து ஜெயினிடம் கேட்கப்பட்டபோது, 'பல்தரப்பு ஒழுங்குமுறைக் கண்காணிப்பு நிலையத்தின் செயற்பாடு குறித்து எனக்குத் தெரியாது. ஆதலால், நான் கருத்துக் கூற விரும்பவில்லை. டில்லி அரசியல் முற்றிலும் மாறிவிட்டது. இதனைப் பற்றி என்னால் எதனைக் கூற முடியும்?' என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

1998இல் ஜெயின் ஆணைக் குழு, திராவிட முன்னேற்றக் கழகத்தைக் குற்றஞ்சாட்டியதன் பின்பு பல்தரப்பு ஒழுங்குமுறைக் கண்காணிப்பு நிலையம் உருவாக்கப்பட்டது. ஜெயின் ஆணைக் குழுவின் குற்றச்சாட்டைப் பயன்படுத்தியே குஜ்ராலின் அரசாங்கத்தைக் காங்கிரஸ் பதவி கவிழ்த்தது. குஜ்ராலின் அரசில் தி.மு.க. பங்காளியாக அச்சமயம் இருந்தது. இப்போது தி.மு.க. காங்கிரஸின் நேச அணியாகும். தி.மு.க. உறுப்பினர் சுப்புலட்சுமி ஜெகதீசன் பல்தரப்பு ஒழுங்குமுறை கண்காணிப்பு நிலையத்தின் விசாரணைக்குட்படுத்தப்பட்டவர். அவர் தற்போது அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக டி.என்.டிக்சிற் நியமனம்

இந்தியப் படையினர் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்திருந்த காலப்பகுதியில், சிறீலங்காவுக்கான இந்தியத் தூதுவராகக் கடமையாற்றிய டி.என்.டிக்சிற், புதிய காங்கிரஸ் அரசாங்கத்தால் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய இராஜாங்க அமைச்சில் மிகவும் அதிகாரம் வாய்ந்த பதவியாகக் கருதப்படும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பொறுப்பில் இதுவரை இருந்த பிரஜேஸ் மிஸ்ரா, காங்கிரஸ் கட்சியிடம் ஆட்சி கைமாறியதும் இராஜினாமாச் செய்ததை அடுத்தே, டி.என்.டிக்சிற் நியமிக்கப்பட்டுள்ளார்.





ராஜீவ் காந்தி தலைமை அமைச்சராக இருந்தபோது, இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா அதீத நாட்டம் காட்டுவதற்குச் சிறீலங்காவின் அப்போதைய அரசுத் தலைவராக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன டி.என்.டிக்சிற் மூலமாகவே தனது திட்டங்களை நிறைவேற்றினார்.

ஈழத்தமிழர்களின் உரிமைக்காகப் போராடும் விடுதலைப் புலிகள் அமைப்பை, ஈழத் தமிழர்களின் ஆதரவைப் பெறாத ஒரு பயங்கரவாத அமைப்பு என்று சர்வதேச அரங்கில் பிரச்சாரம் செய்துவந்த டி.என்.டிக்சிற் விடுதலைப் புலிகள் விடையத்தில் இந்தியா இழைத்த தவறையும் ஒப்புக் கொண்டிருந்தார். இந்தியப் படையினரை இலங்கைக்கு அனுப்பியதால் ஏற்பட்ட விளைவுகளை நன்கு அறிந்த டி.என். டிக்சிற், இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியாவின் நிலை எவ்வாறு இருக்கப்போகிறது என்பதை தீர்மானிக்கும் ஒருவராக இருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா முழு ஆதரவு வழங்கும்

*- தலைமை அமைச்சர் மன்மோகன் சிங் தெரிவிப்பு*




மன்மோகன் சிங்

'இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் நடாத்திவரும் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு இந்தியா முழுமையான ஆதரவு வழங்கும்' என்று இந்தியாவின் புதிய தலைமை அமைச்சராகப் பதவி ஏற்றுள்ள மன்மோகன் சிங் கூறியுள்ளார். தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்ற மன்மோகன் சிங்கிற்குச் சிறீலங்காவின் தலைமை அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துத் தொலைபேசியில் உரையாடியபோதே, அவர் இந்த உறுதிமொழியைத் தெரிவித்ததாக இந்திய வெளியுறவுப் பேச்சாளர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான விரிவான பொருளாதார ஒப்பந்தம் உருவாக்குவது குறித்தும் இருவரும் ஆராய்ந்ததாக அப்பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாடு விடுதலைப் படையின் தலைவர் இளவரசன் கைது

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட தமிழ்நாடு விடுதலைப் படையின் தலைவர் சுப.இளவரசனும், அவருடைய நண்பர் சகாதேவன் என்பவரும் தமிழ்நாடுச் சிறப்புப் பிரிவுப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



ஈரோடு மாவட்டத்தில் சந்தன வீரப்பன் பதுங்கியுள்ள மாதேஸ்வரன் மலைப் பகுதியில் இவர்கள் கடந்த 24ம் திகதி திங்கள் நள்ளிரவு கைது செய்யப்பட்டுள்ளதாகத் தமிழ்நாடு சிறப்புக் காவற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர் மீதும், இவரது கூட்டாளிகள் மீதும் மொத்தம் 78 வழக்குகள் உள்ளன. 1999ம் ஆண்டில் கைது செய்யப்பட்டுத் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இளவரசன், தண்டனைக் காலம் முடிந்து வெளியே வந்தவுடன் தலைமறைவாகிவிட்டார். வீரப்பனைச் சந்திப்பதற்கான தொடர்புகளை ஏற்படுத்த, சில நாட்களாக இந்தக் காட்டுப் பகுதிக்குள் இவர்கள் தங்கியிருந்ததாகத் தெரிகிறது. இது தொடர்பாக கிடைத்த ரகசிய தகவலையடுத்து இப்பகுதியை அதிரடிப்படை முற்றுகையிட்டது.

இந்த இடம் கர்நாடக, தமிழக எல்லையில் காவிரி ஆற்றுப் பகுதியில் உள்ளது. வீரப்பனும் இந்தப் பகுதியில் தான் இருக்கவேண்டும் என அதிரடிப்படை கருதுகிறது. இதையடுத்து அங்கு தேடுதல் வேட்டை தீவிரமாக நடந்து வருகிறது. இந்தப் பணியில் கர்நாடக அதிரடிப்படையும் ஈடுபட்டுள்ளது.

கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவை அவரது வீட்டில் இருந்து கடத்திச் செல்ல 4 பேரை வீரப்பனுடன் அனுப்பி வைத்து உதவியதாக இளவரசன் மீது ஒரு வழக்கு உள்ளது. கடந்த ஆண்டு யூன் மாதம் தமிழர் விடுதலை இயக்கத்தைத் தமிழக அரசு தடை செய்தது. அத்தோடு சுப.இளவரசனைக் கண்டதும் சுட்டுப்பிடிக்க உத்தரவிடப்பட்டது. இதையடுத்து சுப.இளவரசன் தலைமறைவானார். கடந்த சில மாதங்களிற் பல தடவைகள் அவர் காவற்துறையின் பிடியில் இருந்து தப்பினார். ஒரு தடவை, அவர் சிக்கிவிட்டதாகவும்,

காவற்துறையினர் அவரை சுட்டுக் கொல்லத் திட்டமிட்டதாகவும் தகவல் வெளியானது. சுப.இளவரசனின் சொந்த ஊர் ஆண்டிமடம் அருகே உள்ள வல்லம் கிராமம் ஆகும். தந்தை பெயர் பாலசுப்பிரமணியன். தாய் சுப்பம்மாள். 4 சகோதரர்களும். ஒரு தங்கையும் உள்ளனர். வளவெட்டி குப்பம் கிராமத்தைச் சேர்ந்த கவிதா என்ற பெண்ணை சுப.இளவரசன் திருமணம் செய்துள்ளார். கவியரசன் என்ற மகன் உள்ளான்.

இதேவேளை, கடந்தவாரம் விசாரணைக்கு இவர் கொண்டு வரப்பட்டபோது, தன்னை ஒரு மாதத்திற்கு முன்னரே கைது செய்துவிட்டதாகவும், காவற்துறையினரின் காவலில் தன்னை வைப்பதற்கு அனுமதிக்க வேண்டாம் எனவும் இளவரசன் நீதிபதியிடம் கூறியதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

# RESTAURANT HARIHARAN

## குறைந்த விலையில் சிறந்த உணவுகள்

25 அல்லது 50 சாப்பாடுகள் உடனுக்குடன் தயார் செய்து கொடுக்கப்படும்

**இறைச்சிச் சாப்பாடு**


- பிரியாணிச் சோறு
- ஆட்டிறைச்சிக் கறி
- கோழிக்கறி
- கத்தரிக்காய்க் கறி
- பருப்பு
- வெங்காயச் சம்பல்
- கோழிப் பொரியல்
- நண்டு வறை
- Salade ஜெலி பலவகை கலர்கள்

**சைவச் சாப்பாடு**

1. Basumathi அரிசியில் சோறு
3. கத்தரிக்காய் கறி
4. கரணைக்கிழங்கு பிரட்டல் கறி
5. பருப்பு பால் கறி
6. கோவா அல்லது வெங்காயப்பூ சுண்டல்
7. வெங்காயச் சம்பல்
8. அச்சாறு
9. வடை
10. பாயாசம்
11. அப்பளம்
12. மிளகாய்ப் பொரியல்
13. வாழைக்காய் பொரியல்

**சிற்றுண்டிகள்**

| | |
|---|---|
| வடை | 00€50 |
| Rol | 00€60 |
| Samusa | 00€60 |
| Samusa மரக்கறி | 00€60 |
| கடலைவடை | 00€50 |
| பகோடா | 4€70 |
| மிக்சர் | 5€20 |
| கேசரி | 00€50 |





**அன்பளிப்பு**

* 200 சாப்பாடுக்கு 20 சாப்பாடு இலவசம்
* 300 சாப்பாடுக்கு 30 சாப்பாடு இலவசம்

**அன்பளிப்பு**

* 500 சாப்பாடு எடுத்தால் T.T.N தொலைக்காட்சி பார்ப்பதற்கான ஒரு அட்டை அன்பளிப்பு
* பிறந்தநாள் கொண்டாட்டமாக இருந்தால் - பிறந்தநாள் நடைபெறுபவரின் பிறந்தநாள் வாழ்த்து T.T.N இல் இலவசமாக எம் மூலம் ஒளிபரப்பப்படும்.

- 100 க்கு மேல் சாப்பாடு எடுத்தால் இல்லம் தேடி கொடுக்கப்படும்
- எம்மிடம் சாப்பாடு எடுத்தால் சாப்பாடு பரிமாறும் சில்வர் தட்டுக்களை நாங்கள் தருவோம். (500 சாப்பாட்டுக்கு 500 தட்டு)
- கறிகள் போடும் சில்வர் பாத்திரங்கள் எம்மிடம் வாடகைக்கு உண்டு

**உரிமையாளரின் நேரடி கவனிப்பில் இன்றே நாடுங்கள்**

# ஹரிகரன்

**20, Rue Perdonnet, 75010 Paris. M°: La Chapelle.**
**Telephone: 01 42 09 06 30 / Portable: 06 67 14 46 39 - Mahendran**

# இந்தியாவின் சொந்த தயாரிப்பில் பறந்த முதல் பயணிகள் விமானம்




இந்தியாவின் முதல் பயணிகள் விமானம் "சரஸ்" பெங்களூரில் நேற்று (29.05.04) நடந்த பரிசோதனையில் வெற்றிகரமாக பறந்தது. பெங்களூரில் உள்ள தேசிய விமான ஆய்வுக்கழகம், 14 பேர் அமர்ந்து பயணம் செய்யக் கூடிய "சரஸ்" என்ற குட்டி விமானத்தை வடிவமைத்து தயாரிப்பதில் 1991ம் ஆண்டு இறங்கியது. இந்த திட்டத்தை நிறைவேற்றுவதில் 1998ம் ஆண்டு முட்டுக்கட்டை விழுந்தது. பொக்ரான் அணு குண்டு சோதனை காரணமாக இந்தியா மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்தது. இதனால் விமான வடிவமைப்பு பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. பொருளாதாரதடை நீக்கப்பட்டதை தொடர்ந்து விமான கட்டுமான பணிகள் 2001ம் ஆண்டு தொடங்கின.

5118 கிலோ எடை கொண்ட இந்த விமானத்தில் 2 இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. சரஸ் விமானத்தின் வெள்ளோட்டம் நேற்று காலை பரிசோதனை தொடங்கியது. விமானி கே.கே.வேணுகோபால், 'விங் கமாண்டர்' மகான் ஆகிய இருவரும் விமானத்தை செலுத்தி பரிசோதனை செய்தார்கள். சுமார் 20 நிமிட நேரம் விமானம் வெற்றிகரமாகப் பறந்தது. 8 ஆயிரம் அடி உயரத்தில் 150 "நாட்டிக்கல்" மைல் வேகத்தில் அந்த விமானம் பெங்களூரை சுற்றி வந்தது. துரித தபால் சேவைக்கும், அதிகாரிகள் பயணம் செய்வதற்கும் இந்த விமானம் பயன்படும்.

இதேவேளை இந்திய விமானப் படை தளபதி எஸ்.கிருஷ்ணசாமி கூறுகையில், பெங்களூர், எலகங்கா விமான நிலையத்தில் விமானப் படை விமானிகளுக்கு பயிற்சி அளிக்க 8 சரஸ் விமானங்களை வாங்க திட்டமிட்டு இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## இதன் இலக்கு எது?



இந்தியாவில் புதிய ஆட்சி அமைக்கப்பட்டுள்ள நிலையில், பாகிஸ்தான் தனது புதிய நடுத்தர அணுவைத் தாங்கிச்செல்வல்ல ஏவுகணையை கடந்த 29ம் திகதி சோதனைக்கு உட்படுத்தியது. 'ஹோரி' என்று பெயரிடப்பட்டுள்ள இவ் ஏவுகணை, தனது இலக்கான 900 கிலோ மீற்றர் வரை சென்று, சோதனை முயற்சியை வெற்றியாக்கியுள்ளது.

இச் சோதனை முயற்சி குறித்து கருத்துத் தெரிவித்த பாகிஸ்தானின் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் சாகுவட் சுல்தான், 'இது ஏவுகணையின் தொழில்நுட்பத்திறனைப் பரிசோதிப்பதற்காக மேற்கொண்ட சோதனையே தவிர இதற்கு வேறு காரணங்கள் எவையும் இல்லை. காலத்திற்கு காலம் இவ்வாறான ஏவுகணைகள் சோதனைக்கு உட்படுத்தப்படும்' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிடம் ஏற்கனவே 2000 கிலோமீற்றர்கள் வரை சென்று தாக்கவல்ல 'சாகீன்' என்ற ஏவுகணை இருப்பது குறிப்பிடத்தக்கது.



## ஈரானில் மீண்டும் நில அதிர்வு

ஈரான் நாட்டின் மத்திய மற்றும் வடக்குப்பகுதியில் கடந்த வாரம் கடும் பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. இதனால் ஆலமவுண்ட், குஷ்வின், மசாந்தரான் ஆகிய பிராந்தியங்களில் உள்ள 80க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிக்கப்பட்டன. அந்த பகுதிகளில் இருந்த மலைப்பாதை வீதிகளில் வெடிப்புகள் ஏற்பட்டன. பாறைகள் உருண்டு வாகனங்கள் மீது விழுந்தன. ஏராளமான கட்டடங்கள் இடிந்து விழுந்தன. 30 முதல் 50 சதவீத கட்டடங்கள் சேதம் அடைந்து விட்டன.

இந்த பூமி அதிர்ச்சியில் இடிபாடுகளில் சிக்கி 45 பேர் பலியாகி இருக்கிறார்கள். 400க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். மீட்பு பணி இடைவிடாது நடந்து வருகிறது. பூமி அதிர்ச்சியின்போது ஏராளமான வாகனங்கள் மண்ணில் புதைந்தது. வாகனங்களுடன் சேர்ந்து 20 பேர் வரை மண்ணில் புதைந்ததாகவும் சாவு எண்ணிக்கை மேலும் உயரும் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை, ஜப்பான் நாட்டின் வடகிழக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் நேற்று (29.05.04) திடீர் நில நடுக்கம் ஏற்பட்டது. அது 5.9 ரிக்டர் அளவில் பதிவானது. தலைநகர் டோக்கியோவிலும் லேசாகப் பூமி குலுங்கியது. ஆனால் இந்த நிலநடுக்கத்தினால் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இதுஇவ்வாறிருக்க, மியான்மர் நாட்டின் (பர்மா) வடமேற்கு மாகாணமான ஏக்ஹீனி பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு புயல் கடுமையாகத் தாக்கியது. சூறாவளி காற்றுடன் கடும் மழை பெய்தது. இதில் 2350 வீடுகள் இடிந்தன. கடலுக்கு மீன் பிடிக்க சென்றவர்கள் படகுகளுடன் நீரில் மூழ்கினார்கள்.

இந்த புயலுக்கு 100 பேர் இறந்தார்கள். சாவு எண்ணிக்கை இருமடங்காக உயரலாம் என்று அஞ்சப்படுகிறது. சுமார் 20 ஆயிரம் பேர் வீடு இழந்து தவிக்கிறார்கள். புயலால் தகவல் தொடர்பு அடியோடு பாதிக்கப்பட்டதால் சேத விவரம் முழுமையாக வெளிவரவில்லை. சுமார் 10 தினங்களுக்குப் பிறகே புயல் தாக்கிய விவரமும் வெளி உலகுக்குத் தெரியவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸ் பாடசாலைகளில் வன்முறை அதிகரிப்பு




பிரான்ஸ் முழுவதிலுமுள்ள பாடசாலைகள், கல்லூரிகள், மற்றும் பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு இடையில் நடைபெறும் வன்முறைச் சம்பவங்கள் 2003-2004 கல்வியாண்டில் 10 வீதத்தால் அதிகரித்துள்ளதாகப் பிரபல பிரெஞ்சு நாளேடான லிபரேசன் தெரிவித்துள்ளது பாரிஸின் புறநகர் பகுதிகளை உள்ளடக்கிய வேர்சாய் கல்வி மாவட்டத்தில் பாலர் பாடசாலைகளிலிருந்து பல்கலைக் கழகங்கள் வரை இந்த வன்முறை அதிகரிப்பு ஒரு பொதுப் போக்கில் காணப்பட்டதாகவும், இந்தக் கல்விமாவட்டத்திலுள்ள குறிப்பிட்ட சில பிரதேசங்களில் இது 32 வீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டதாகவும் அந்த நாளேடு தெரிவித்துள்ளது.

நாடு தழுவிய அளவில் 2001-2003க்கு உட்பட்ட இரண்டு கல்வியாண்டுகளில் குறைந்திருந்த வன்முறைச் சம்பவங்கள் இந்தக் கல்வியாண்டில் அதிகரித்திருப்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும் அந்த நாளேடு சுட்டிக் காட்டியுள்ளது. பிரான்ஸ் கல்வி அமைச்சு இதை ஒத்துக் கொண்டுள்ள போதிலும் இது ஒரு சிறிய அதிகரிப்பே என்று கூறியுள்ளது.

2001ற்கும் 2003ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட 2 கல்வி ஆண்டுகளில் மட்டும் நாடு தழுவிய அளவில் மாணவர்கள் சம்பந்தப்பட்ட 72 ஆயிரம் வன்சம்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் ஆசிரியர்களைத் தாக்கியது, சக மாணவர்களைக் கத்தியால் குத்தியது, துப்பாக்கியால் சுட்டது என்பனவும் அடங்கும்.

## ரி.ஜி.வியில் புகைபிடிக்கத் தடை

பிரான்சின் அதிவேகத் தொடருந்தான ரி.ஜி.வியில் புகை பிடிப்பதற்கு தடை விதிப்பதென்று அந்த நாட்டு தொடருந்துச் சேவை நிறுவனமான SNCF தீர்மானித்துள்ளது. இந்தத் தடை எதிர்வரும் டிசம்பர் மாத நடுப்பகுதியில் இருந்தே நடைமுறைப் படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த தொடருந்துகளில் உள்ள புகை பிடிக்கும் பெட்டிகளில் பயணம் செய்வதற்கு பயணிகள் அதிகளவுக்கு விரும்பாததும், இந்தப் பெட்டிகளில் விடப்படும் புகை, புகை பிடிக்கத் தடைசெய்யப்பட்ட பெட்டிகளுக்குப் பரவுவதால் அதில் பயணம் செய்யும் பயணிகள் சிரமத்துக்குள்ளாவதும் இந்த முடிவுக்குக் காரணம் என்று SNCF நிறுவனம் தெரிவித்துள்ளது.



ஏற்கனவே பாரிசிலிருந்து இலண்டனுக்குச் செல்லும் யூரோ ஸ்டார் மற்றும் பெல்ஜியம் நெதர்லாந்து அகிய நாடுகளுக்குச் செல்லும் தலீஸ் அதிவேக விரைவுத் தொடருந்துகளில் புகைபிடிப்பதற்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுவிட்டது குறிப்பிடத்தக்கது.


நேசன் Cash and Carry




இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் கடலுணவு வகைகள் உடன் மரக்கறிவகைகள் தொலைபேசி அட்டைகள் மற்றும் தமிழ் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
இலங்கை இந்தியா பசுமையான மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், பதப்படுத்தப்பட்டுள்ள உணவுகள், பழவகைகள், V.D.O C.D க்கள் விற்பனைக்கும், வாடகைக்கும் மற்றும் உங்களுக்கு தேவையான பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

217, The Broadway, Southall, Middiesex, UB1 1NB - Tel: 020 3574 4018 Fax: 020 8574 4035 Mobile: 07904100201

# பத்திரிகையாளர் கோபுவிற்கான கௌரவிப்பும், அவரது மூன்று நூல்களின் அறிமுகவிழாவும்

பத்திரிகை உலகில் கோபு என்றழைக்கப்படுகின்ற மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம் அவர்களின் மூன்று நூல்களின் அறிமுக விழாவும், அரை நூற்றாண்டுகாலமாக தொடரும் அவரது பத்திரிகைப்பணியைப் பாராட்டுமுகமாக அவருக்களிக்கப்பட்ட கௌரவிப்பு நிகழ்வும் கடந்த 27ம் திகதி வியாழக்கிழமை மாலை, கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.




இவர் எழுதிய 'ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை', 'அந்த ஒரு உயிர் தானா உயிர்?', 'பத்திரிகைப்பணியில் அரை நூற்றாண்டு' ஆகிய மூன்று நூல்களின் அறிமுகவிழாவில் இவரை கௌரவிக்குமுகமாக ஈழநாதம், நமது ஈழநாடு பத்திரிகை நிறுவனங்களால் இரு தங்க விருதுகளும் வழங்கப்பட்டன. 1953ம் ஆண்டு வீரகேசரியில் இவர் தனது பத்திரிகைப்பணியைத் தொடரங்கினார். பின்னர், ஈழநாடு, ஈழமுரசு, ஈழநாதம், செய்திக்கதிர், தினக்திர் சரிநிகர் ஆகிய பத்திரிகைகளிலும் பணிபுரிந்தார். இவர் எழுதிய 'ஈழமண்ணில் ஓர் இந்தியச்சிறை' என்கிற நூல் ஜீனியர் விகடனில் முன்னர் தொடராக வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. 'எஸ்.எம்.ஜி', 'ஊர்சுற்றி' போன்ற புனைப்பெயர்களிலும் இவர் எழுதி வருகின்றார்.


இவருக்கான இந்த நிகழ்வு மேற்படிமண்டபத்தில் புலிகளின்குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக, தமிழீழத் தேசியக்கொடியினை அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் திரு. சோ.தங்கன் அவர்கள் ஏற்றினார். பொதுச்சுடரினைக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தி.இராசநாயகம் அவர்கள் ஏற்றினார். மங்கல விளக்கினைக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு.ரமேஷ் மற்றும் போராளி அறிவன் ஆகியோர் ஏற்றினர். தொடர்ந்து வரவேற்புரையினை ஈழநாதம் பிரதம ஆசிரியர் திரு. பொ. ஜெயராஜ் நிகழ்த்தினார். நூல்களுக்கான மதிப்பீட்டுரைகளை ஊடகவியலாளர் திரு.விவேக், விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்த, ஆய்வுரையினை அரசியல் ஆய்வாளர் திரு. மு.திருநாவுக்கரசு நிகழ்த்தினார். பதிலுரையினை திரு. கோபு அவர்களும் நன்றியுரையினை நமது ஈழநாடு பிரதம ஆசிரியர் திரு. ராதையனும் நிகழ்த்தினர்.




தங்கவிருதுகளைத் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரனும், அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் திரு.சோ.தங்கனும் வழங்கினார். இந்நிகழ்விற்கு, பத்திரிகை, இலக்கியத்துறை சார்ந்த பெரும் எண்ணிக்கையானோர் வருகை தந்து சிறப்பித்தனர்.

# காலம் கரைகிறது

கி.பி.அரவிந்தன்


சிவகுமாரன்

**1.**

காலம் கரைகின்றது.
நீ இன்னமும் மணம்
பரப்புகிறாய்.
வண்ணக் குழையலென
காட்சிப் புலன்கள்.
வானவில்லின் நிறம் பிரிக்கும்
அணுத்துணிக்கைகள்.
நண்பா,
உந்தன் நிறம் எது?
சுடர்கின்றாய்..

மரவள்ளித் தோட்டத்தில் நீ
வீழ்ந்து கிடந்தாய்.
செம்மண் பாத்திக்கு
நீர் பாய்ந்து கொண்டிருந்தது.
தோட்ட வெளிக்கு
எல்லையிட்டிருக்கும்
பனைகளின் பின்னே
ஊரின் புறத்திருந்து விழிகள்
உன்னை மொய்த்திருந்தன.
துப்பாக்கிகளின் முற்றுகை
உடைத்து
மதியச் சூரியன்
உன்னைத் தொடுகிறான்.
சயனைட் குப்பிக்கு
உன்னை ஒப்படைத்துவிட்டு
சிரிக்கிறாய்.
மிளகாய் புகையிலை
வாழையில் எல்லாம்
உந்தன் சிரிப்பலை படிகின்றது.

முதல் வித்து நீ.
முன்னறிவித்தவன் நீ.

சாத்வீகப் பாதையில்
சந்தி பிரித்தாய்.
கால வெளியில்
சுவடுகள் பதித்தாய்.
காலக் கரைவிலும்
உந்தன் சுவடுகள்.

**2.**

நண்பா,
இப்படியும் காலம் வந்தது.
கறையான் புற்றில் கருநாகங்கள்.
அசோகச் சக்கர நாற்காலி
அமர்ந்து
தேச பரிபாலனம்.
மரவள்ளிச் செடிகளும்
கண்ணீர் உகுத்தன.
அமிலச் கரைசலில்
உந்தன் சுவடுகள் எரித்தனர்.
முள்முடிகளை மக்கள்
தலைகளில் அறைந்தனர்.
துளிர்களைக் கிள்ளியும்
மலர்களைப் பிய்த்தும்
இரத்த நெடியினைத்
துய்த்து நுகர்ந்தனர்.

நண்பா,
நீ என்ன சொன்னாய்.
கருவிகள் கையெடு
களைகளை அகற்று
அப்படித்தானே!
இவர்களோ,
வயல்களுக்குத் தீ வைத்து
வரப்பினில்
தானிய மணிகள் பொறுக்கினர்.
இந்தக்காலம் அந்தகாரமானது.
பேய்களும் பேய்க்கணங்களும்
பூதங்களும் என
நர்த்தனம் புரிந்தது.

ஆயினும்,
உனது சிரிப்பின் அலைகள்
ஆழ்ந்து விரிந்து
எங்கெங்கும் பரவி
வெட்ட வெட்டத்
தழைத்தது.

நண்பா,
உந்தன் இளவயதில்
உயிரை வெறுக்கவும்
சயனைட் குப்பியை
உயிரெனக் கொள்ளவும்
செய் அல்லது செத்துமடியென
பிரகடனம் செய்யவும்
எவை உன்னை உந்தியதோ
இன்னமும் அவை
அப்படியே உள்ளன.
உந்தன் ஒளிரும் சுவடுகளும்
எம்மெதிரே விரிகின்றன.

1990605

(சிவகுமாரனின் 15வது ஆண்டு நினைவு நாளின் போது எழுதப்பட்டது.)

TRISTAR ALLIANCE

வீட்டுக் காப்புறுதி, மருத்துவக் காப்புறுதி, வாகனக் காப்புறுதி, ஆயுட் காப்புறுதி, அனைத்துக் காப்புறுதிகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

TRISTAR ALLIANCE

தமிழில் உரையாடி உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் மேலும் விமானச் சீட்டுக்களை குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளவும்

BYBA TOURISME

18, Rue Démarquai, 75010 Paris
Tél: 01 42 09 06 66 / Fax: 01 42 09 15 05
Métro: Gare du nord
www.tristarassurance.com

Pub-Fr-40

## அங்கம் 10

# அசோகா ஹொட்டலில் நடந்த கொடூரம் துரையப்பா அரங்கில் வெளிவராது போகுமா?

புலிகளை மூன்று நாட்களில் மடக்கிவிடலாம் என்று ஜூலை 1987இல் சுந்தர்ஜி தெரிவித்த கருத்தையும், அந்த உறுதியான கருத்தின் அடிப்படையிலான நம்பிக்கையையும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தின என்பதில் ஐயமில்லை. இந்த ஒப்பந்தத்தில் சுந்தர்ஜியின் இராணுவ நிலைப்பாடு செலுத்திய ஆதிக்கத்தை டிக்சிற்றின் நூல் உறுதி செய்வதை வாசகர்கள் ஏற்கனவே படித்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். புலிகளை எளிதில் முறியடிக்கலாம் என்ற எண்ணம் சுந்தர்ஜி மனதில் எப்படி எழுந்தது என்று தெரியவில்லை. ஒப்பந்தம் கைச்சாத்தாகுமுன்பே தமிழர் வாழும் வடக்குக் கிழக்கிற்குள் நன்கு ஊடுருவி நிலையெடுத்த றோ உளவமைப்பினர் வழங்கிய தவறான தகவல்தான் சுந்தர்ஜியைப் புலிகளின் பலம் பற்றிய தவறான முடிவுக்குத் தள்ளியிருக்கலாம்.

அன்றும் சரி இன்றும் சரி ஈழத்தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான புலிகளை ஓரங்கட்டிவிட்டு ஜெயவர்த்தனாவும் ராஜீவ்காந்தியும் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட விடயம் பற்றிக் கூறவேண்டிய இன்னுமொரு தகவல் இருக்கின்றது. சம்பந்தப்பட்ட மக்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் ஒதுக்கிவிட்டு ஒப்பந்தம் செய்வது ஓர் இந்திய இராசதந்திரப் பாரம்பரியம். இந்தியாவும் - பாகிஸ்தானும் காஸ்மீர் சம்பந்தமாக கைச்சாத்திட்ட 1972ம் ஆண்டு சிம்லா ஒப்பந்தத்திலும் காஸ்மீர் மக்களின் சம்மதம் பெறப்படவில்லை. சிம்லா ஒப்பந்தத்தில் இந்திரா காந்தியும் சுல்பிகார் அலி புட்டோவும் தத்தம் நாடுகள் சார்பில் ஒப்பமிட்டனர். ஆனால் கஸ்மீர் மக்கள் பற்றிய சிந்தனை ஒருவருக்கும் எளவில்லை. 1987 ஒப்பந்தத்திற்கும் 1972 ஒப்பந்தத்திற்கும் இடையில் இந்த மட்டில் வேறுபாடு கிடையாது. இரு ஒப்பந்தங்களும் தோல்வி கண்டதற்கும் அடிப்படைக் காரணம் ஒன்றுதான்.

1983 அளவில் தொடங்கிய இந்தியாவின் இலங்கைத் தலையீடு 1987இல் நேரடித் தலையீடாக மாறியது. தெற்கு ஆசியாவின் பிராந்திய வல்லரசு என்ற ஒற்றை ஆதிக்க உரிமையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அமைதி நிலைநாட்டும் நோக்குடன் இறங்கிய இந்தியா தானே முழு அளவு அமைதிச் சீர்குலைப்பை



வரதராஜப்பெருமாள்

நடத்தியது. 72 மணி நேரத்தில் யாழ்ப்பாணத்தை பிடிப்பேன் என்று சூளுரைத்த சுந்தர்ஜி, 45 நாட்களின் பின் யாழ். நகர் வந்தடைந்தார். அந்தளவோடு போர் முடிவடையவில்லை. வெளியேறும் வரை போர் தொடர்ந்தது. மக்கள் மீது தாக்குதல் நடத்தினால் புலிகள் வலுவிழப்பார்கள் என்ற நோக்கில் இந்திய இராணுவத்தினர் பொதுமக்கள் படுகொலையில் ஈடுபட்டனர். குறைந்தளவு கணக்குப்படி 6,000 வரையிலான ஈழத் தமிழர்கள் கொல்லப்பட்டனர். பாலியல் வல்லுறவுகளை மிகவும் தாராளமாக இந்தியப் படைகள் நடத்தினர். பொருட்களைக் கொள்ளையடித்தல் அவற்றைக் கப்பலில் ஏற்றி இந்தியா கொண்டு செல்லல் போன்ற கருமங்களும் ஓசைப்படாமல் நடத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் வரை முன்னேறுவதற்கு எடுத்த 45 நாட்களில் 320 ஜவான்கள் கொல்லப்பட்டனர் என நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இலைமறை காய் போல் நிலைகொண்டிருந்த றோ உளவாளிகளும் அவர்களுக்கு உதவிய ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப் தேச விரோதிகளும் வழிகாட்டல் நடத்தியிராவிட்டால் ஜவான்களின் இழப்பு இன்னும் கூடுதலாக இருக்கும். மக்களை ஏதிலிகளாக்கிப் பொது இடங்களில் அடைத்து வைக்கும் திட்டம் இராணுவ நடவடிக்கை தொடங்க முன்பே தீர்மானிக்கப்பட்ட விடயம். நல்லூர் கந்தசாமி கோயில் போன்ற பொது இடங்களை றோ அமைப்பினர் பட்டப்பகலில் பார்த்துச் சென்றனர். இந்தி மொழியில் கோயிலை 'மந்திர்' என்று அழைப்பார்கள். யாழ். நகர மக்களை நல்லூர் மந்திர் கட்டடத்திற்குள்ளும், சுண்டிக்குளி ஆண் பெண் பள்ளிக்கூடங்களுக்குள்ளும் முடக்க வேண்டும் என்பதை றோ உளவாளிகள் தீர்மானித்தனர். யாழ். நகரின் சில முக்கிய கிறிஸ்தவ தேவாலயங்களும் இத் தேவைக்காகத் தெரிவு செய்யப்பட்டன.



1994ல் எழுதிய தனது நூலில் நண்பர் சுமன்திரா போஸ் *(States, Nations, Sovereignty : Sri Lanka, India and the Tamil Eelam Movement. Publishers Sage, New Delhi)* இந்தியப்படைகள் நடத்திய கொடுங்கோல் ஆட்சியைப் பின்வருமாறு விவரித்துள்ளார். 'அமைதிப்படையாக ஆரம்பித்த இந்தியப் படைப் பிரசன்னம் அச்சொட்டான ஆக்கிரமிப்புப் படையாக நாளடைவில் மாறியது. ஐ.பி.கே.எவ், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ் கூட்டாட்சியில் தமிழ் மக்கள் வாழ்வு அவலத்தின் எல்லைக்குச் சென்றது'.



**ஆராரோ...!**

**றோ றோவோ !**

( பேராசிரியர் இ.சிவசண்முகம் எழுதும் புதிய தொடர் )



தொடர்ந்து சுமந்திரா போஸ் கூறும் செய்தி அதிபயங்கரமாக இருக்கின்றது 'ஆட்கடத்தல்கள், பெரும் எண்ணிக்கையில் கைதுகள் விசாரணையின்றி மறைவான இடங்களில் தடுத்து வைத்தல்கள், பரவலான சித்திரவதைகள், நாளாந்தம் நடக்கும் எண்ணற்ற பாலியல் வல்லுறவுகள், கிராமப்புறங்களில் பயன்தரு விவசாய நிலங்களையும் பயிர்களையும் அழித்தல், மரங்களைத் தறித்து வீழ்த்துதல், மீன் பிடித்தலைத் தடுத்தல், எல்.ரி.ரியுடன் தொடர்புடையவர்கள் என்ற பெயரில் மக்களைச் சுட்டுக்கொல்லுதல் போன்ற நடவடிக்கைகளை அமைதிகாக்கும் படையினர் கிரமமாக நடத்தினர்'

புகைப்படங்கள், நம்பிக்கையான முறைப்பாடுகள் யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர்களின் ஒப்பங்கள் தாங்கிய மனுக்கள் ராஜீவ் காந்தி தலைமையிலான புதுடில்லி அரசுக்கு அனுப்பப்பட்டன. 'வேலிக்கு ஓணான் சாட்சி' என்ற பழமொழி போல் புதுடில்லி அதிகாரிகள் றோ அமைப்பினர் மற்றும் இராணுவப் புலனாய்வுத் துறையினர் போன்ற 'நடுவுநிலையாளரை' இது பற்றி அறிக்கை தரும்படி கேட்டனர். இதுவெல்லாம் எல்.ரி.ரி.ஈயின் பிரச்சார உத்திகள், இந்தியப் படைகள் மனித உரிமைகள் விடயத்தில் மிகவும் கவனமாக இருக்கிறார்கள் என்று அவர்கள் புதுடில்லி அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டினார்கள்.

யாழ். நகரின் கொமாண்டராக பதவி வகித்த பிரிகேடியர் காகொல்ன் *(Brig. KAHOLN)* ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் இப்படிக் கூறினார் 'இந்திய இராணுவத்தினர் தேவ தூதர்களோ, பேய் பிசாசுகளோ அல்லர். நாங்கள் மனிதர்கள். பாலியல் வல்லுறவுகள் மேற்கு நாடுகளிலும் நடக்கின்றனவே' இந்த அதிகாரியின் தத்துவ விளக்கம் புதுடில்லியின் காதுவரை சென்றதோ தெரியவில்லை. ஒக்ரோபர் 1988இல் ஐம்பது பேராசிரியர்கள் ஒப்பமிட்ட மனுவொன்று புதுடில்லிக்கு யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து அனுப்பப்பட்டது. இந்தியப்படைகள் நடத்தும் இனஅழிப்பைப் பட்டியலிடுவதோடு ஒரே வரியில் மிகவும் காத்திரமான செய்தி ஒன்றைத் துல்லியமாகத் தெளிவுபடுத்துகின்றது. 'இந்தியர்கள் வழங்கும் அமைதிக்கான உத்தரவாதம் பற்றித் தமிழர்கள் மிகவும் விழிப்பாக இருத்தல் வேண்டும்'.

இந்தச் சந்தர்ப்பத்தில் றோ உளவுப்படையினரின் காட்டுத் தர்பார் பற்றிச் சொல்லியாக வேண்டும். யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நிலைகொண்டிருந்த றோ அதிகாரிகள், படையினர் கைது செய்து கொண்டு வருபவர்களை விசாரணை செய்யும் பணியை மேற்கொண்டனர். இதற்கு *ஈப் பீக்கள்* என்று தமிழ் மக்களால் இகழப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். தேசவிரோதிகள் தம்மாலான உதவிகளை வழங்கினர். மார்சல் பெத்தேயிங் தலைமையிலான ஜேர்மன் படைகளுக்குச் சார்பான ஐந்தாம் படை அரசு பிரான்சின் விச்சி நகரில் இரண்டாம் உலகப்போர் காலத்தில் இயங்கியதை வாசகர்கள் அறிவார்கள். ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் அரசுகளை *விச்சி அரசு* என்று அழைப்பது உலக வழமை. அப்படியானதோர் அரசு யாழ்ப்பாணத்தில் இயங்கியதைத் தமிழ் மக்கள் மறக்க மாட்டார்கள். *விச்சி அரச* நிர்வாக மையமாக அல்ஜீரியா ஓட்டல் என்ற ஐந்து நட்சத்திர விடுதி பயன்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். தேசவிரோதிகள் ஆக்கிரமிப்பாளனோடு இணைந்து நடத்திய *விச்சி அரசு* அசோகா ஹொட்டலில் நடத்தப்பட்டது. சித்திரவதைகளும் பாலியல் வல்லுறவுகளும் படுகொலைகளும் இங்கு தாராளமாக நடத்தப்பட்டன. ராஜஸ்த்தானில் இந்தியாவின் கௌரவ விருந்தினராகப் பெரும் பொருட்செலவில் தங்கியிருக்கும் அண்ணாமலை வரதராஜப் பெருமாள், மறைந்த பத்மநாபா, இன்னுமொரு பிரபல நபர் ஆகியோர் அசோகா ஓட்டலில் ருத்திர தாண்டவம் ஆடினர்.



ஒரு சில வருடங்களுக்கு முன் துரையப்பா விளையாட்டரங்கிற்கு அண்மையில் மலசலகூடம் அமைக்கும் தொழிலாளர்கள் ஒரு பாரிய மனிதப் புதைகுழியைக் கண்டுபிடித்தனர். பல நூற்றுக்கணக்கான ஆண், பெண், சிறுவர், சிறுமிகளின் எலும்புக்கூடுகள் நிரம்பிய குழிகள் அடையாளம் காணப்பட்டன. இந்தி மொழியில் எழுதப்பட்ட சில இரும்புத் தகடுக

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

# வெகுமதி




அந்தப் பிராந்தியத்தில் கினுவா ஒரு பெயர்பெற்ற வேட்டைக்காரன். ஒரு துப்பாக்கியை எப்படி உபயோகிப்பது என்பது அவனுக்குத் தெரியாது. அவனது பிரதான ஆயுதமெல்லாம் கையால் தயாரிக்கப்பட்ட ஒரு வில்லும் அம்பும்தான். அவன் அம்பு எய்யும்போது மல்லாந்து தரையில் படுத்துக் கொள்வான். இடதுகாலை வில்லின் மீது மிதித்துக்கொண்டு காதுவரை நாணை இழுத்து அம்பு விடுவான். அம்பினால் இரண்டு மைலுக்கு அப்பால் நிற்கும் மிருகத்தைக் கூட வீழ்த்திவிடுவான். அவன் அம்புகளுக்கு நூற்றுக்கணக்கான மான்களும், கரடிகளும், பன்றிகளும் பலியாகியிருக்கின்றன. எண்ணற்ற சிறுத்தைப் புலிகளை அவன் வீழ்த்தியிருக்கிறான். ஆனால் வங்காள ராஜப்புலிகள் இரண்டே இரண்டை மட்டும்தான் அவனால் வீழ்த்த முடிந்திருக்கிறது. வங்காள ராஜப் புலிகளைக் கொன்றதற்காக உதவி கமிஷனர் அவனுக்கு வெகுமதியளித்துப் பாராட்டியிருக்கிறார்.

அன்று அதிகாலை, ஒரு புதிய வேட்டையுடன் அவன் உதவி கமிஷனர் பங்களாவிற்கு வந்தான். வில் அவனது தோளில் தொங்கிக்கொண்டிருந்தது.

மற்றொரு தோளில் கைக்கோடரி, இரண்டு மூன்று அம்புகள் அவன் கையிலிருந்தன. இந்தத் தோற்றத்துடன் கினுவாயைப் பார்த்த பங்களா பாராக்காரன், 'ஏய். இன்று என்ன வேட்டை?' என்று ஆர்வத்துடன் விசாரித்தான்.

அந்தப் பாராக்காரன் கினுவாவிற்கு நெருங்கிய நண்பன். அடிக்கடி வேட்டையுடன் வரும், கினுவாவிற்குக் கிட்டும் வெகுமதிகளில் அவனுக்கும் பங்கு கிடைக்கும். பாராக்காரனின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் தன் அழுக்குப் பற்களைக் காட்டிச் சிரித்தான் கினுவா.

அது அசட்டுச் சிரிப்பா அல்லது கேலிச் சிரப்பா என்று யாராலும் கூற முடியாது. கினுவாவின் முகத்தில் அசட்டுப் பல்லிளிப்புத் தோன்றி யாரும் பார்த்தது கிடையாது. அபூர்வமாக அவன் எப்போதாவது இப்படிப் பல்லைக் காட்டுவதுண்டு. அது அசட்டுச் சிரிப்போ அல்லது அழகு காட்டும் சிரிப்போ அல்ல. வெறுமனே ஒரு சிரிப்பு: அவ்வளவுதான்.

பாராக்காரன் திரும்பவும் கேட்டான்: 'ஏய், என்ன நான் கேட்கிறேன். பதிலைக் காணோம், இன்றைக்கு என்ன வேட்டை கொண்டு வந்திருக்கிறாய்?'

தன் துணியில் முடிந்து வைத்துள்ளதைச் சுட்டிக்காட்டி, அன்றுதான் ஒரு பெரிய வேட்டை கொண்டு வந்திருப்பதாகச் சைகை காட்டினான் கினுவா.

'புலியா?'

இல்லையென்பதற்கு அடையாளமாகத் தலையை மறுத்து அசைத்தான் கினுவா.

'அப்படியானால் சிறுத்தையா, கரடியா, அல்லது பன்றியா?'

கினுவா மறுபடியும் தலையை அசைத்து மறுத்தான்.

'பிறகு என்னடா அது, கினுவா?'

இவர்களின் பேச்சுக்குரல் கேட்டு கமிஷனர் சாஹெப் ஆவல் தெரிவித்ததும் கினுவா துணியை விலக்கி உள்ளிருந்த பொருளை வெளியே எடுத்தான்.

சற்று முன்பே வெட்டப்பட்ட ஒரு மனிதனின் தலை அது!

அவன் அதைச் சாஹெப்பின் காலடியில் வைத்தான்.

திகைத்துப்போன கமிஷனர் அதிர்ச்சியில் இரண்டு மூன்று அடிகள் பின்வாங்கினார். தன் இரண்டு கைகளையும் அவர் முன் நீட்டி, 'சாஹேப் பக்ஷீஸ்!' என்று கேட்டான் கினுவா.

சற்று நேரத்திற்குப்பின் தன் அதிர்ச்சியிலிருந்து மீண்டு, கினுவாவைக் காத்திருக்கும்படி சைகை காட்டினார் துணைக் கமிஷனர். பங்களாவினுள்ளே சென்று ஆயுதப் பொலிசாருக்கு டெலிபோன் செய்தார். கினுவாவைக் கைது செய்ய அவருக்கு வேறு எந்த வழியும் இல்லை. அம்பு, வில், கோடாரி இவற்றைத் தவிர அபாரமான உடல் வலுவும் பெற்றிருந்தான் கினுவா.

கினுவாவில் கைகளிலும் கால்களிலும் விலங்கிட்டுப் பொலிசார் அழைத்துச் சென்றபோது அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இவ்வளவு பாதுகாப்பாக அழைத்துச் செல்வதன் நோக்கம் என்ன? அடுத்தவர்களிடம் பேசும் வாய்ப்புக் கிட்டியபோது சுற்றியிருந்தவர்களிடம் அவன் விசாரித்தான். சிலர், அவனைத் தூக்கில் போடப் போகிறார்கள் என்றனர். அவனைக் கடலுக்கப்பால் கண் காணாத தேசத்துக்கு நாடு கடத்தப் போகிறார்கள் என்றனர் சிலர்.

அப்படியென்ன செய்யத்தகாத குற்றத்தை அவன் செய்துவிட்டான்? அவனுக்கு அதைப்பற்றி ஏதும் தெரியாததால் மற்றவர்களின் வார்த்தைகளுக்கு அவன் அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

ஒருநாள் துணைக் கமிஷனர் ஜெயிலுக்கு விஜயம் செய்தார். என்ன நடந்தது என்பது பற்றி அவர் அவனிடம் முழுதாகக் கேட்டறிந்தார். அவன் புலிகளையும் கரடிகளையும் மற்ற மிருகங்களையும் வேட்டையாடியபோது அவனுக்கு உடனடியாக வெகுமதி அளிக்கப்பட்டது. இப்போது அவன் ஒரு மனிதனைக் கொன்றுவிட்டான். இம்முறையும் அவனுக்குத் தகுந்த வெகுமதியளிக்கப்படவேண்டும். ஆனால் அதை ஐந்து பேர்கொண்ட ஒரு குழு கவனமாக ஆராய்ந்த பிறகே முடிவு செய்யப்படும் என்று கமிஷனர் அவனிடம் கூறினார். கினுவாவிற்கு மிகவும் மகிழ்ச்சியாகிவிட்டது. அவன் சந்தோஷமாகத் தன் மனநிறைவைத் தெரிவித்தான்.

ஒருநாள் அவன் மீது விசாரணை தொடங்கியது. அன்று தனக்கு வெகுமதி கிடைத்துவிடும் என்று அவன் நினைத்தான். அந்த நினைப்பால் உற்சாகமடைந்து நீதிபதியின் முன்பு நடந்ததை ஒன்றும் விடாமல் அவன் விவரித்தான். கோவிந்த சர்தாரை இந்த உலகத்திலிருந்து அனுப்புவது, அன்று அவனுக்கு எளிதான காரியமாக இருக்கவில்லை. பலபேர் அவரைக் கொல்வதற்குக் காத்துக் கிடந்தனர். ஆனால் யாராலும் அது முடியவில்லை. சர்தார் எப்போதுமே காரில்தான் செல்வார். பிறரை மோசம் செய்தும் துன்புறுத்தியுமே சொத்துச் சேர்த்தவர் அவர். அவர் ஒரு சைத்தான். எத்தனை பேரின் வாழ்க்கையை நாசமாக்கியிருக்கிறார்! எத்தனை பெண்களைக் கற்பழித்திருக்கிறார்! அதற்கு ஒரு முடிவே இல்லை. கினுவாவின் நிலங்களையும் மோசடியாக அவர் பறித்துக் கொண்டார். அன்றுமாலை கினுவாவின் மனைவியைக் கெடுக்க அவர் திட்டமிட்டிருந்தார். ஆனால் அங்கு எதிர்பாராமல் கினுவாவைப் பார்த்ததும் அவர் கார் வேகமாகப் போய்விட்டது. அவனிடமிருந்து தான் தப்பிவிட்டேன் என்று அவர் நினைத்தார். ஆனால் கார் சக்கரத்தின் மீது அம்பை எய்து அதை அசையாமல் நிறுத்திவிட்டான் கினுவா. பிறகு கோடாரியால் சர்தாரின் தலையை வெட்டிக் கையில் எடுத்துக்கொண்டு காட்டின் ஊடே இரவெல்லாம் ஓடிவந்தான். ஒரே மூச்சில் முப்பது மைல்களைக் கடந்து துணைக் கமிஷனரின் பங்களாவை அடைந்தான்.



கோவிந்த் சர்தார் சாதாரண ஆளில்லை. எப்போதுமே கையில் துப்பாக்கி வைத்திருப்பார். புலிகளையும் கரடிகளையும் கண்டு பயந்ததைவிட, அவரைக் கண்டுதான் ஜனங்கள் மிகவும் நடுங்கினர். புலிகளும், கரடிகளும் செய்த தீங்கைவிட மனிதர்களுக்கு அதிகமாகத் தீங்கிழைத்தவர் அவர். அவரைத் தீர்த்துக் கட்டுவதற்கு அவன் தைரியத்தை மட்டும் பயன் படுத்தியிருக்கவில்லை, புத்திசாலித் தனத்தையும் பயன்படுத்தியிருக்கிறான்.

சில வருடங்களுக்கு முன்னால், ஜபத் சிங்கின் தலையை வெட்டியதற்காக, தோராவிற்கு ஐநூறு ரூபாய் வெகுமதியளித்துப் பாராட்டிக் கௌரவித்தார் கமிஷனர் சாஹெப். ஜபத் சிங் ஒரு புரட்சிக்காரன். ஒரு வழியில் பார்த்தால் ஜபத்சிங் மிகவும் நல்லவன். அவன் எந்தப் பெண்ணையும் கற்பழித்ததில்லை, யார் சொத்தையும் பலாத்காரமாகப் பிடுங்கிக் கொண்டதில்லை. அவன் அரசாங்கக் கஜானாக்களைத்தான் கொள்ளையடித்தான். சில பொலிஸ்காரர்களைத்தான் கொன்றான். ஆனால் கோவிந்த் சர்தாரோ பயங்கரமான மனிதர். அவரைக் கொன்றதற்குக் கினுவாவிற்கு இன்னும் பெரிய வெகுமதி அளிக்கப்படவேண்டும்.

கினுவாவின் இந்தக் கோரிக்கையைக் கேட்ட அனைவரும் சிரிப்பில் வெடித்தனர்.

சிரித்துக்கொண்டே நீதிபதி கூறினார்: 'ஆமாம், தகுந்த வெகுமதியளிக்கப்பட வேண்டும்!'

அரசாங்க வக்கீல் சொன்னார்: 'உன்னை இங்குகொண்டு வந்ததே உனக்குச் சரியான வெகுமதி அளிப்பதற்குத்தான்!'

இந்த வார்த்தைகளில் கேலி எதையும் உணராத கினுவா, அவர்களின் கூற்றை உண்மையென்றே நம்பினான். ஏனெனில் நகைச்சுவை உணர்வு எதுவும் அவனுக்குக் கிடையாது. இயற்கையிலேயே அவன் உணர்ச்சிவசப்படாதவன். அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அப்படியென்றால் என்ன என்று அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவனை மீண்டும் ஜெயிலுக்குக் கொண்டு சென்றபோது, அவனுக்கு வெகுமதி வழங்கப்படும் நாள் நெருங்கிக் கொண்டிருப்பதாக அவனிடம் சொல்லப்பட்டது. அப்போதும், தான் ஒரு கிரிமினல் குற்றவாளி என்றும், அதனால் தனக்கு மரணதண்டனை வழங்கப்பட்டிருக்கிறது என்றும் அவனுக்குப் புரியவில்லை. ஜபத்சிங்கைக் கொன்றதும் கோவிந்த் சர்தாரைக் கொன்றதும் ஒன்றல்ல என்பதை அவன் எப்படி அறிவான்? இருவரில் ஒருவர் அந்தஸ்துமிக்கவர் என்பதும் இன்னொருவன் குற்றவாளி என்பதும் அவன் அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயம். சட்டத்தின் நுணுக்கங்களை அவன் மூளை எப்படிப் புரிந்துகொள்ளும்? அவன் வெறும் நாட்டுப்புறத்துத் தற்குறிதானே?

கினுவா தனக்குள்ளே சொல்லிக் கொள்கிறான்: 'ஜபத்சிங்கைக் கொன்றதற்குத் தோரா ஐநூறு ரூபாய் வெகுமதி பெற்றான். அதைவிடக் குறைந்த வெகுமதி எதையும் நான் ஏன் ஏற்றுக்கொள்ளவேண்டும்? அப்படிக் குறைத்துக் கொடுத்தால் அந்த வெகுமதியை மறுத்துவிட்டு, எனக்கு எதுவும் வேண்டாம் சாஹெப் தோராவைவிட அதிகம் பெறும் தகுதி எனக்கு இருக்கிறது என்று நான் சொல்லிவிடுவேன்'.

இருள் சூழ்ந்த அந்தத் தனிமையான சிறையில் அவன் அதிகம் யோசித்தான். அங்கு அவனுக்குப் பேசுவதற்கு யாரும் கிடைக்கவில்லை. அவனும் யாரிடமும் பேச விரும்பவில்லை. பரிசைப் பெற்றபின் வீட்டிற்குத் திரும்பிச் செல்வதைப் பற்றியே அவன் எண்ணமெல்லாம் இருந்தது.

இறுதியாக அவனைத் தூக்கில் போடும்நாள் வந்தது. அவனது இறுதி

ஒரியமொழியில்: பகவதிசரண் பாணிக்ராஹி
தமிழில்: தேவகி குருநாத்

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

சின்னவனின் வதிவிடம் பளை அல்லிப்பளை படகுத்துறையில் கடடையாற்றிக்கொண்டிருந்தான் எங்களைப் படகேற்றி மறுகரைக்கு அனுப்பி விடுவது தனது கடமையெனக் கொண்டவனாக எமக்குத்தானே அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுத்தந்து எனது மகளிடம் இருந்த சைக்கிளையும் தானே வாங்கி உருட்டிக்கொண்டு எங்களைத் தொடர்ந்து வரும்படி கூறிமுன்னே நடந்தான். அவனைப் பின்தொடர்ந்து எமது பொதிகளுடனும், சைக்கிள்களுடனும் நாம் சென்றோம். எமக்கு முன்னே வந்தவர்கள் வரிசையில் நிற்க நாம் அவர்களுக்கு முன்னர் செல்வது மனதுக்குள் குற்ற உணர்வாகத் தோன்றியது. எனினும் எனது இயலாமை வேளையில் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தத் தவறின் மேலும் கஸ்டப்படவேண்டிவரும் என்று என்னைச் சமாதானப்படுத்திக்கொண்டேன்.

மொத்தம் அன்றைக்கு நூற்றி ஐம்பது படகுகள் அல்லிப்பளையில் இருந்து மறுகரையான ஆலங்கேணிக்கு மக்களை ஏற்றிச் செல்லவிருப்பதாகப் பேசிக்கொண்டார்கள். அப்படியிருக்க எங்களுக்கு மூன்றாவது படகில் பயணிக்கக்கிடைத்தது அவலத்துக்குள் கிடைத்த அதிர்ஸ்டம் என்றுதான் கூறவேண்டும்.

எமது சைக்கில்கள் எல்லாம் பிறிதே தனி ஒரு படகில் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டு அப்படகும் இழுவைப் படகுகளுடன் இணைக்கப்பட்டது. எமது கடற்பயணம் ஆரம்பமாயிற்று. மழையிருட்டு. படகுகளின் இயந்திரச் சத்தங்களையும், கடல் இரைச்சலையும் தவிர வேறு எதுவும் கேட்கவில்லை.

அல்லிப்பளை இறங்குதுறையின் வெளிச்சங்கள் பின்நோக்கி நகர்ந்து புள்ளிகளாக மறைந்துகொண்டிருந்தன.

எமது படகிற்கு வலப் பக்கமாகத் தெரிந்த கடற்ரையில் புள்ளிகளாக மின்விளக்குகள் வரிசையாக எரிவது தெரிந்தன. அந்த வெளிச்சப் பொட்டுக்களைக் கண்டதும் மனதில் ஒருவிதத் திகில், ஏனெனில் அது பூநகரி நாகதேவன்துறை. அங்கிருக்கும் இராணுவ, கடற்படை முகாம்களின் வெளிச்சங்களே அவை.



அல்லிப்பளையினன் இறங்குதுறையில் விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் காவற்படகுகளையும், ஆயுதங்கள் சகிதம் அவற்றில் இருந்த கடற்புலிப் போராளிகளையும் கண்டிருந்தபடியால் முன்னைய நாட்களில் பயணித்தபோது இருந்த பயம் குறைந்திருந்தது. மழைகொட்டத் தொடங்கியது. அதற்குள் குடைபிடிப்பது சாத்தியமில்லை. குடையும் கைவசமில்லை. நாம் கொண்டுவந்திருந்த பிளாஸ்டிக் பாய் ஒன்றினை விரித்து கோழிச்செட்டைக்குள் இருக்கும் குஞ்சுகள் போல ஒருவரோடு ஒருவர் நெருங்கி ஒட்டிக்கொண்டிருந்தோம்.

படகிற்கு இடது கரையில் ஆனையிறவு முகாமும், வலது கரையில் நாகதேவன்துறை முகாமும் இரண்டிற்கும் நடுவே கடற்புலிகளின் காவலை மட்டும் நம்பி நாமும் பயந்து பயந்து படகுப்பயணம் மேற்கொண்டது மரணக் குலைக்குள் செல்வது போன்ற பயங்கர அனுபவத்தைக் கொடுத்தன.

> கடற்படைக் காடையர்கள் அவர்கள் பயணித்த படகின் மீது துப்பாக்கித் தாக்குதல் தொடங்கியதும் தன் மனைவியைக் கீழே தள்ளி மனைவிக்குக் கவசமாக தான் மேலே கிடந்திருக்கிறார்.

அதேவேளையில் கடலிலே இருந்து துள்ளிய கொய் மீன்கள் எமது படகின் உள்ளே விழுந்து துடிப்பதும். அவற்றைத் தூக்கி மீண்டும் கடலில் போடுவதுமான புதிய அனுபவத்தைப் பெற்றுக்கொண்டு பயணித்தோம். எனினும் வெளியே வீசிய காற்றும், கொட்டிய மழையும் அந்த மகிழ்ச்சியை முழுமையாக அனுபவிக்க விடவில்லை. எமது படகிற்கு இருபுறமும் கடற்புலிகளின் காவல் உலாப்படகுகள் அதிவேகமாக நீரைக் கிழித்துக்கொண்டு சுற்றித்திரிவது கண்களுக்கு நிழல்களாகத் தெரிந்தன. இந்தக் கடற்புலிகளின் காவல் இல்லாதபடியால் அன்று நிகழ்ந்த அவலமும் கூடவே நினைவுக்கு வந்தது.

என்னவளின் கழுத்தில் உள்ள தைரொயிட் சுரப்பிகளில் கான்சராம் உடனடியாக மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுங்கள் என்று யாழ். வைத்தியசாலையில் சொல்லிவிட்டார்கள். 1993ம் ஆண்டு பிறக்கவுள்ள கடைசிநாட்கள் அவை. 1992 டிசம்பர் 30ம் நாள் என்னவளை அழைத்துக்கொண்டு மடுக்கோவிலுக்குச் சென்றேன். அந்த மடுமுகாமில்தான் எனது மூத்தமகளும், மருமகனும் இருந்தனர். 31ம் திகதி அவர்களோடு என்னவளை வழி அனுப்பி விட்டேன். மறுநாள் வருடப்பிறப்பு என்னவள் கொழும்பில், பிள்ளைகளோ தாயும் தகப்பனும் இல்லாமல் தனிமையாக யாழ்ப்பாணத்தில். நான் நடுவழியில்.

பிறக்கின்றன ஆண்டு சோகத்துடன் பிறக்கப் போகின்றது. 1994ஆம் ஆண்டு பிறப்பின்போது என்னவள் உயிருடன் இருக்கமாட்டாள் என்று நான் நம்பினேன். அப்படியிருந்தும் நாம் குடும்பமாக வருடப்பிறப்பின்போது இருக்கக்கிடைக்கவில்லையே. மடு ஆலயத்தில் நிற்கவும் விருப்பமில்லை. அப்பொழுதுதான் அருந்தி. ஜேம்ஸ் பத்திநாதர் என் நினைவுக்குத் தோன்றின. ஒரு ஆன்மீகக் குருவாகவும், சகோதரனாகவும் அடுத்தவர் பிரச்சினையை அணுகக்கூடிய மனித நேயம் மிக்கவர். மனித நேயப் பணிக்கான பயிற்சிகளை வெளிநாடுகளில் சென்று படித்திருந்த அவர் அன்று மிகவும் பின்தங்கியிருந்த புதிய பங்காகிய முழங்காவில் ஆலயத்தில் இருந்து தனது பணியைச் செய்துகொண்டிருந்தார். அந்த நல்ல மனிதரோடு எனது புத்தாண்டு பிறக்கட்டும் என்று முடிவெடுத்தேன். எனவே முழங்காவில் சென்று மறுநாள் ஆலங்குளம் சென்று படகேறிப் பிள்ளைகளிடம் போவதாகத் திட்டம். நான் முழங்காவில் ஆலயத்தைச் சென்றடைந்தபோது ஜேம்ஸ் பத்திரநாதன் அடிகள் முற்றத்தில் புல்லுவெட்டிக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் அன்போடு வரவேற்றார். நேற்று கிளிநொச்சியில் என்னவளைக்கண்டு, அவளது நோயைக் கேள்விப்பட்டு, அவள் மீது அனுதாபப்பட்டு `போய் வாங்கோ தங்கச்சி` என்று தலை தடவி அனுப்பிவைத்தவர். எனவே எனது நிலைமை பற்றி விளக்கமளிக்கவேண்டிய தேவையிருக்கவில்லை. மனைவியோ பிள்ளைகளோ பக்கத்தில் இல்லாத நிலையில் அன்புடைய நெஞ்சத்தவர் ஒருவரோடு புத்தாண்டு பிறக்க வேண்டும் என்று விரும்பினேன்.

ஆயினும் இந்தப்புத்தாண்டு பிறக்கும் வேளையில் என்னவள் என்பக்கத்தில் இல்லையாயினும் உயிரோடு இருக்கிறாள். அடுத்த ஆண்டு பிறக்கும்போது அவள் உயிரோடு இருப்பாளா என்ற தயக்கம், துயரம், கண்கள் தூக்கமே தழுவாத நிலையில் 1993 ஆம் ஆண்டு விடிந்தது.

அன்றுகாலை எனக்கென்று ஒதுக்கப்பட்ட அறையில் இருந்து கதவைத் திறந்துகொண்டு வெளியே வருகின்றேன். அதேவேளையில் அடிகளாரும் தனது அறையின் கதவைத் திறந்துகொண்டு வெளியே வருகின்றார். என்னைக் கண்டதும் 'Happy New Year நாவண்ணன்` என்று கூறிக்கொண்டு என் கைகளைப் பிடித்தார். பதிலுக்கு என்னால் வாழ்த்துரைக்க முடியவில்லை. அதுவரை நெஞ்சினுள் அடைபட்டிருந்த துயரவெள்ளம் உடைப்பெடுத்து வந்தது போல் வாய்விட்டு அழுதுவிட்டேன். தொடர்ந்தும் அவர் முன்னால் நிற்க முடியவில்லை எனது அறைக்குள் சென்று கட்டிலில் விழுந்து குமுறிக் குமுறி அழுதேன். என் அழுகை அடங்க கொஞ்சம் நேரம் பிடித்தது.

பாகம் - 2

16




# வலிகாமம் இருந்து வன்னி வரை

## - கவிஞர் நாவண்ணன்

பின்னர் புத்தாண்டு வழிபாடுகள், பகல் உணவு அனைத்தையும் முடித்துக் கொண்டேன். ஜேம்ஸ் பத்திநாதன் அடிகளிடம் நான் கண்ட இன்னுமொரு சிறப்பு அம்சம். நான்வேறு எவரிடமுமே கண்டிராத உயர்குணம் எல்லோரையும் தன் சகோதரன், சகோதரியாகக் கொண்டு பழகுவது. தனது சமையற்காரரையும் தான் சாப்பிடும் மேசையில் தன்னோடு சமனாகி உட்கார்ந்து உணவுண்ணவைப்பது.

அன்று புத்தாண்டு நாளன்று கிளாலிபடகுச்சேவை இல்லை, விடுமுறை நாள். அன்றைய நாளையும் அங்கேயே கழித்தேன். ஜனவரி இரண்டாம் திகதி பகல் ஆலங்கேணியை நோக்கிப் பயனமானேன். நான் புறப்புடுமுன்னர் முழங்காவில் அரசியற்றுரைப் பொறுப்பாளரிடம் என்னை அழைத்துச்சென்று படகுப் பயணத்துக்கான முன்னுரிமைக் கடிதத்தை ஜேம்ஸ் பத்திநாதன் அடிகள் பெற்றுத்தந்திருந்தார். இப்பொழுது அவர் கிளிநொச்சி உருத்திரபுரம் எட்டாம் வாய்க்காலில் ஆரோபணம் இளைஞர் இல்லத்துக்குப் பொறுப்பாக இருக்கிறார் என்பதை அறிவேன். கிறிநொச்சிக்குப்போய் அவரிடமே முதலில் தஞ்சமடைவது என்பதே எனது முதல்நோக்கம்.



முழங்காவில் அரசியற்றுறைப் பொறுப்பாளரிடம் அவர் பெற்றுத்தந்த முன்னுரிமைக் கடிதத்துடன் ஆலங்கேணி படகுத்துறையை அடைகின்றேன். வழமையாக படகுச்சேவை ஆரம்பமாகும் நேரத்துக்கு அது ஆரம்பிக்கவில்லை. எனவே வெகுநேரத்தின் பின்னர் படகுச்சேவைக்குப் பொறுப்பாளரிடம் என்னிடமிருந்த முன்னுரிமைக் கடிதத்தைக் கொடுத்தேன். அக்கடிதத்தை வாங்கிப் படித்த அவர் கடிதத்தை என்னிடமே மீளவும் தந்துவிட்டு கடலையே பார்த்துக்கொண்டிருந்தார். `கடலிலே ஏதோ பிரச்சினை` என்று மெதுவாகக் கூறுவது என்காதுகளில் விழுந்தது. பின்னர் நடந்த சம்பவங்களை அறிந்தபோது உண்மை தெரிந்தது. அன்றும் படகுச் சேவை இடம்பெறவில்லை.

ஜனவரி இரண்டாம்நாள் கடற்புலிகளின் காவற்சேவை இடம்பெறவில்லை. ஆனால் படகுச் சேவையை மாலை 7.00 மணிக்கு ஆரம்பித்துவிட்டார்கள். படகுகள் கடலேரியின் நடுப்பகுதியை அடைந்தபோது திடுமென நாகதேவன் துறைப்பக்கம் இருந்து வந்த கடற்படையினர் படகுகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் நீச்சல் தெரிந்த சிலர் கடலில் குதித்து நீந்திக்கரையை அடைந்தனர். ஏனையோர் சுடப்பட்டும், கூரிய ஆயுதங்களால் வெட்டியும் கொலை செய்யப்பட்டனர். வேறுசிலர் காயப்பட்ட நிலையில் படகினுள்ளே கிடந்தனர்.

மூன்று படகுகளை தொடுகையில் கட்டி இழுத்துக்கொண்டு போயினர். தொங்கலில் கட்டியிருந்த படகு கட்டவிழ்ந்து கரையொதுங்கியது. அதில் அதிருஷ்டவசமாக உயிர்தப்பிய அறுபத்தெட்டுவயதான செல்லத்துரையென்பவர் கடலில் நடந்த கொடுமைகளைக் கூறினார்.

நோயாளியான அவரை அவரது துணைவிதான் கொழும்புக்குச் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார். கடற்படைக் காடையர்கள் அவர்கள் பயணித்த படகின் மீது துப்பாக்கித் தாக்குதல் தொடங்கியதும் தன் மனைவியைக் கீழே தள்ளி மனைவிக்குக் கவசமாக தான் மேலே கிடந்திருக்கிறார். அந்த நிலையிலும் செல்லத்துரைக்கு எதுவித காயமும் ஏற்படவில்லை. ஆனால் எப்படியோ அவரது துணைவியார் மீது துப்பாக்கி ரவை பாய்ந்து அவர் இறந்துவிட்டார்.

மேலும் புகையிலைச் சிப்பத்துடன் வந்த படகு ஒன்று கடற்படையினரால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டதாக நீந்தித் தப்பிவந்த ஒருவர் தகவல் தெரிவித்தார். ஆரம்பத்தில் கடற்படையால் கொலை செய்யப்பட்டவர்கள் ஒன்பதுபேர் என்றாலும், நாளடைவில் கரை ஒதுங்கிய சடலங்கள், காணாமற்போனவர்கள் என்ற கணக்கில் 52 பேர் அன்று கொல்லப்பட்டார்கள். இவற்றில் மொத்தம் 28 பேருடைய சடலங்கள் மட்டும் கரையொதுங்கின. நாளடைவில் கரையொதுங்கிய சடலங்கள் ஆணா பெண்ணா என்று அடையாளம் தெரியாத நிலையிலே காணப்பட்டன.

(தொடரும்)

# ஈ மீது கோபம் கொண்டார் அழிந்தன 80 இலட்சம் ஈக்கள்



உலகிலேயே அதிக மக்கள் தொகையுள்ள நாடு சீனாதான். அதற்காகத் தூங்குவதற்குக் கூட ஒரு துண்டு நிலமில்லையா..? அல்லது எதிர்கால நெருக்கடியை மனதில்கொண்டு, இப்போதே அதற்கான பயிற்சியை எடுக்கத் தொடங்கிவிட்டாரா இந்த சீன இளைஞர்..?

கடைகளில் யாரும் இல்லையென்றால், 'என்ன ஈ அடிக்கிறாயா?' என்று கேட்பார்கள். ஆனால், சீனாவைச் சேர்ந்த உணவு விடுதியின் உரிமையாளர் ஒருவர் ஈ அடிப்பதில் சாதனையே படைத்து விடுவார் போல் இருக்கிறது. ஹூஆ சிலின் என்ற இந்த உரிமையாளர் சுமார் பத்து ஆண்டுகளில் அடித்த ஈக்களின் எண்ணிக்கை மட்டும் 80 இலட்சத்திற்கும் அதிகமாம்! இவர் ஏன் ஈ அடிக்க வெளிக்கிட்டார்..?

அது ஒரு சுவராசியமான கதை... இவரது உணவு விடுதியில் வழமையாக உணவு உண்ணவரும் வாடிக்கையாளர் ஒருவரின் உணவில் ஈ ஒன்று இருந்ததால், உணவு விடுதியின் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துவிட்டார் அவர். இறுதியில் உரிமையாளர் பெருந்தொகைப் பணத்தை இழக்க வேண்டியதாகிவிட்டது. இதனால், வழக்குத் தொடுத்தவர் மீதல்ல, உணவில் விழுந்த ஈயின் மீது அவருக்கு ஆத்திரம் எழுந்தது! அன்றிலிருந்து ஈக்களைக் கொல்லத் தொடங்கினார். தான் கொல்வதுடன் நிற்காமல், தனது சொந்தப்பணத்தில் வேலைக்கு ஆட்களை அமர்த்தி, ஈக்களைக் கொல்ல வைத்தார். கொன்ற ஈக்களை அழிக்காமல் சேர்த்தும் வைத்துள்ளார். இதுவரை இவர் கொன்ற ஈக்களின் நிறை 40 கிலோ (அண்ணளவாக 80 இலட்சம் வரையானவை). மேலும் ஈக்களை இவரும் இவரது படையினரும் கொன்று வருகின்றனர். இவரது கோபம் எப்போது தீருமோ? ஈக்கள் கொல்லப்படுவது எப்போது நிற்குமோ தெரியவில்லை..!

## பலசும் பத்சும்

# பட்டம் பெற வயது தேவையில்லை



படம் பெறுவதற்கு வயது தேவையில்லை என்பதை அமெரிக்கப் பாட்டி ஒருவர் நிரூபித்துள்ளார். அமெரிக்காவின் புளோரிடா மகாணத்தில் உள்ள உஸ்பா பாப்சன் என்ற பாட்டி தனது 90வது வயதில் பட்டம் பெற்றுள்ளார். அமெரிக்காவின் புளோரிடா மகாணம், வெஸ்ட்பால்ம்பீச் நகரைச் சேர்ந்தவர் உஸ்பா பாப்சன். இவர் 11ம் வகுப்பு படிக்கும் போதே இவரது பெற்றோர் அவரை ஒரு விவசாயிக்குத் திருமணம் செய்து கொடுத்துவிட்டனர். இதனால் இவரது படிப்பு பாதியில் நின்று போனது. இதன் பின்னர் உஸ்பா பாப்சன் குழந்தைகள், பேரப்பிள்ளைகள் என்று குடும்ப வாழ்க்கையோடு ஐக்கியமாகி விட்டார். ஒருநாள் ஓய்வு நேரத்தில் அவர் படித்த நூல் ஒன்றில், 90 வயது தாத்தா ஒருவர் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பட்டம் பெற்ற விபரம் வெளியாகியிருந்தது. இது அவரை உத்வேகம் கொள்ளச் செய்தது. உடனடியாக வயது வந்தோர் உயர்நிலைப் பட்டயப்படிப்பு வகுப்பில் சேர்ந்து படித்தார். இப்போது பட்டமும் பெற்று விட்டார். பட்டத்துடன் அவர் காட்சியளிப்பதைப் படத்தில் காணலாம்.

# ஆணிப் படுக்கையில் பரதநாட்டியம்

பரதநாட்டியத்தில் சாதனைக்காகப் புறப்பட்டுள்ளார் மலேசியத் தமிழ்ப்பெண் ஒருவர். எஸ்.மாதவி என்ற 25 வயதான பெண் பத்தாயிரம் (10,000) கூரிய ஆணிகள் கொண்ட படுக்கையில் ஆடிச் சாதனைபடைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார். கடந்த வாரம் நடந்த நிகழ்வொன்றில் ஏழு பரதநாட்டியப் பாடல்களுக்குச் சுமார் 35 நிமிடங்கள் இந்த ஆணிப் படுக்கையில் ஆடிச் சாதனையும் படைத்திருக்கின்றார்.






தனது இம்முயற்சி குறித்து மாதவி கூறுகையில், 'ஒன்பது வயதில் நான் நடனம் கற்றுக் கொள்ளத் தொடங்கினேன். நடனத்தில் எதையாவது சாதிக்க வேண்டும் என்று விரும்புகின்றேன். எனக்குத் தெரியும் இது இலகுவானதல்ல என்று. இதனை நான் கற்றுக்கொள்ள முனைந்தபோது நான் வலியால் பெரிதும் அவதிப்பட்டேன். ஆனால் நான் நம்பிக்கை கொண்டிருந்தேன். இப்போது நான் நினைக்கிறேன், எதிர்காலத்தில் பரதநாட்டியத்தில் இந்த நடனமும் பிரபல்யமடையும் என்று' எனக் கூறியுள்ளார்.

# விண்வெளியில் புதிய கிரகம் கண்டுபிடிப்பு!

விண்வெளியில் புதிய கிரகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் ஸ்பிட்சர் (Spitzer) தொலைநோக்கி மூலம் இந்தக் கிரகம் அமெரிக்க விஞ்ஞானிகளால் கடந்த 27ம் திகதி கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சிக் கழகமான 'நாசா'வின் ஸ்பிட்சர் (Spitzer) டெலஸ்கோப் மூலம் விஞ்ஞானிகள் சூரியமண்டலத்துக்கு வெளியே 100க்கும் மேற்பட்ட கிரகங்களைக் கண்டுபிடித்துள்ளனர். ஆனால் அவை எல்லாம் 100 கோடி ஆண்டுகளுக்கு முந்தையது. பூமியும் அதன் அருகே உள்ள கிரகங்களும் 450 கோடி ஆண்டுகள் பழமையானவை.

இந்த விஞ்ஞானிகள் இப்போது புதிய கிரகம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். இது வயதில் மிகச்சிறியது. இதன் வயது ஒரு மில்லியன் ஆண்டுகள். அதனால் இதை இளைய கிரகம் என்றும், குழந்தைக் கிரகம் என்றும் சொல்கிறார்கள். இதுவும் சூரிய மண்டலத்துக்கு வெளியே உள்ள கிரகம் ஆகும்.

இது 420 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உள்ள கோகு டோ 4 (CoKu Tau 4) என்ற நட்சத்திரத்தை இளைய கிரகம் சுற்றி வருகிறது. அப்படி அது சுற்றி வரும்போதுதான் அதை விஞ்ஞானிகள் கண்டு பிடித்தார்கள். மேற்கண்ட தகவல்களை விண்வெளி விஞ்ஞானி டான் வாட்சன் தெரிவித்துள்ளார்.




இதுதான் அந்த ஒரு மில்லியன் வயதுகள் கொண்ட குழந்தைக் கிரகம்




## குறுங்கதை


### தாயகம்



கடற்கரை ஓரத்தில்
படகைப் பார்த்து நண்டு
கேட்டது:
'வண்ண வண்ண
மீன்களையெல்லாம்
பிடித்துக்கொண்டு
போனார்களே-எதற்கு?
படகு அசைவற்றிருந்தது.
பின்பு அது சொன்னது:
'அந்த மீன்களையெல்லாம்
சின்னஞ்சிறு கண்ணாடித்
தொட்டியில் அடைத்து வைத்திருக்கிறார்களாம்...'
'அப்புறம்?'
படகு சொன்னது: 'எட்டி எட்டி அலையைத் தேடுகிறதாம்
தொட்டியிலே கடல் மீன்.

*- காசி ஆனந்தன்.*

## கண்டுபிடியுங்கள்




### இவை எவற்றின் கால்கள்?

விடை அடுத்தவாரம்

## தகவல் முற்றம்

### திமிங்கிலங்கள்

திமிங்கிலங்களில் 8 வகைகள் உள்ளன. அவைகளாவன:
நீலத் திமிங்கிலம் -23 -25 மீட்டர்கள் நீளம் -எடை 110 -160 தொன்
பழுப்புத் திமிங்கிலம் - 14-15 மீட்டர்கள் நீளம் - எடை 30-40 தொன்
ஹம்பேக் திமிங்கிலம் - 12-15 மீட்டர்கள் நீளம் - எடை 25-40 தொன்
ஸ்பெர்ம் திமிங்கிலம் -12-18 மீட்டர்கள் நீளம் -எடை 13-44 தொன்
சைய் திமிங்கிலம் -14-20 மீட்டர்கள் நீளம் -எடை 14-17 தொன்.
ரைட்வகை -11-16 மீட்டர்கள் நீளம் -எடை 25-66 தொன்.
பிங்கிவகை - 8-10 மீட்டர்கள் நீளம் - எடை 7-10 தொன்.
பெலுக்கா - 4-5 மீட்டர்கள் நீளம் -எடை 14-15 தொன்.

## அறிஞர் முற்றம்

### சோமசுந்தரப் புலவர்

ஈழத்துக் குழந்தை இலக்கிய முன்னோடிகளில் முதலிடம் வகிப்பவர் தங்கத் தாத்தா என்று அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரா வார்.

ஈழத்துக் கவிதை வானில் விடிவெள்ளியாகத் திகழ்ந்த புலவர் அவர். 15 ஆயிரம் பாடல்களால் தமிழ்த்தாயை அலங்கரித்த பெருமைக்குரியவர்.



அவரது குழந்தைப் பாடல்கள் குழந்தைகளின் உள்ளங்களை மட்டுமன்றி வளர்ந்தோர் இதயங்களையும் வருடிச் செல்லும் வல்லமை மிக்கன. குழந்தைகளுக்காகக் குழந்தை உள்ளத்தோடு, குழந்தை மொழியில் குழந்தை உலகத்தை விளக்கும் பாடல்களே குழந்தைப் பாடல்களாகும்.

இந்த உண்மையைச் சோமசுந்தரப் புலவரின் பல பாடல்களில் நாம் காணலாம். தனது பெறற்கரிய பெருஞ் செல்வமான குழந்தையைத் தாயானவள் தன் மடி மீது இருத்திக் குதூகலத்துடன் பாடுவதாக அமைந்தது அவரது இந்தப்பாட்டு.

சாய்தா டம்மா சாய்ந்தாடு
தாமரைப் பூவே சாய்ந்தாடு

மாடப் புறாவே சாய்ந்தாடு
மானே தேனே சாய்ந்தாடு

கொஞ்சும் கிளியே சாய்ந்தாடு
குத்து விளக்கே சாய்ந்தாடு

மாணிக்க மலையே சாய்ந்தாடு
மரகத மணியே சாய்ந்தாடு

கட்டிக் கரும்பே சாய்ந்தாடு
கற்பகக் கொம்பே சாய்ந்தாடு

அன்பே இன்பே சாய்ந்தாடு
ஆச்சி மடியற் சாய்ந்தாடு


முன்னைய காலத்தில் இப்பாடலை ஈழத்தில் அறியாத தாய்மார்களே இல்லை எனலாம். அந்தளவுக்கு இந்தப் பாடல் பிரபல்யம் பெற்று விளங்கியது. மேலை நாட்டுக் கலாச்சாரப் படையெடுப்பின் தாக்கத்தால், இக்காலத் தாய்மார்கள் பலருக்கு இந்தப் பாடல் தெரியாமல் போய்விட்டது.

இதில் வரும் 'ஆச்சி மடியிற் சாய்ந்தாடு' என்னும் அடி ஈழத்தில் தாயை ஆச்சி என்ற அழைத்த வழக்குக்கு இன்றும் சான்றாக உள்ளது.

இத்தகைய குழந்தைப் பாடல்கள் மறக்கப்பட்டு வருவது கவலைக்குரிய ஒன்றாகும். குறிப்பாகப் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் இத்தகைய பாடல்களை அறிந்து கொள்வது அவசியமாகும்.

## அறிஞர் வாழ்வில்

### பூக்கள்



*மேனாட்டறிஞர் பெர்னார்டுஷா வண்ண மலர்களைப் பார்த்துக் களிக்கும் பழக்கம் உள்ளவர், இதற்காகவே அடிக்கடி அவர் பூஞ்சோலைகளை நாடிச் செல்லுவதுண்டு.*
*ஒருநாள் அவரிடம் அவர் நண்பர் ஒருவர் கேட்டார் 'பூக்களின் மேல் இத்தனை ஆசை கொண்டுள்ள நீங்கள் உங்கள் வீட்டில் ஏன், ஒரு பூத்தொட்டிகூட வைத்துக் கொள்ளவில்லை?'*
*அதற்கு பெர்னார்டு ஷா சிரித்தபடி இவ்வாறு பதில் சொன்னார்: 'எனக்குச் சிறு குழந்தைகளைப் பார்த்து ரசிப்பது கூடத்தான் நிரம்பப் பிடிக்கும் அதற்காக, அக் குழந்தைகளின் தலைகளைக் கிள்ளிவந்து வீட்டில் வைத்துக் கொள்ளவா முடியும்?'*

### கல்வி

கல்வி என்னும் ஒளிவிளக்கே!
எனக்கு அறிவு தந்த சுடரே!
என் வாழ்வில் இன்று இருள் இல்லை!
உனது பிறப்பிடம் தான் எங்கே!
உலகிற்கு இறைவன் தந்த
அருஞ்செல்வமே
கொடுக்கக் கொடுக்கக் குறையாது!
பெருகிச் செல்லும் அருங்கல்வியே!
உனக்கு முற்றுப்புள்ளியே இல்லை!

*– ஜே.ஜெயசீதா*

## கதை முற்றம்

### திடீரென வந்த புத்தி

முன்னொரு காலத்தில் தருமன் என்ற அரசன் தனது நாட்டை நல்ல முறையில் ஆண்டு வந்தான். ஒரு சமயம் அவனது நாட்டை விட்டுத் தப்பி ஓட முயன்ற அடிமை ஒருவனை வீரர்கள் கைது செய்து அரசன் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

அரசன் தன்னருகே இருந்த அமைச்சரைப் பார்த்து 'தப்பி ஓட முயன்ற இந்த அடிமைக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?' என்று கேட்டான். ஏற்கனவே அந்த அடிமை மீது பகைமை கொண்டிருந்த அந்தஅமைச்சன் 'அரசே! இவனுக்குத் தூக்குத் தண்டனை விதியுங்கள். இது தப்பிச் செல்ல முயலும் எல்லா அடிமைகளுக்கும் ஒரு பாடமாக அமையும்' என்று சொன்னான்.

இதைக் கேட்ட அரசன் திடுக்கிட்டான். அறிவுள்ள அந்த அடிமை 'அரசே நான் பெரிதாக எந்தக் குற்றமும் செய்யவில்லை. என்னை நீங்கள் கொன்று விட்டால் ஆண்டவனின் முன்னால் கொலைக் குற்றவாளியாக நிற்கவேண்டி வரும். என்னைக் கொன்ற பிறகு தங்கள் மீது பழி வராமல் இருப்பதற்கு நான் ஒரு வழி சொல்கிறேன்' என்றான்.

'அது என்ன வழி?' என்று கேட்டான் அரசன்.

'உங்கள் மீது கொலைப் பழி ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த இந்த அமைச்சரைக் கொல்வதற்கு, எனக்கு அனுமதி தாருங்கள், பின்னர் அமைச்சரைக் கொன்ற குற்றத்துக்காக எனக்கு மரண தண்டனை விதியுங்கள். அப்படிச் செய்தால் கொலைப் பழி உங்கள் மீது விழாது' என்றான்.

அதைக் கெட்ட அமைச்சர் நடுங்கிவிட்டார்.

'என் மீது கொலைப் பழி விழாமல் தடுத்த இந்த அடிமையை என்ன செய்யலாம்' என்று அரசன் அமைச்சரைக் கேட்டான்.

தன் தலையைக் காப்பாற்றுவதற்காக 'இறைவனுக்காக இவன் செய்த குற்றத்தை மன்னித்து இவனை விடுதலை செய்யலாம்?' என்று அமைச்சர் பதில் சொன்னார்.

தனது புத்திக் கூர்மையால் அந்த அடிமை விடுதலையானான்.

### விலங்குகளின் ஒலிகள்

அணில் - கீச்சிடும்
ஆந்தை - அலறும்
எருது - முக்காரம் போடும்
கரடி - கத்தும்
பசு - கதறும்
பல்லி - சொல்லும்
பன்றி - உறுமும்
குதிரை - கனைக்கும்
குருவி - கீச்சிடும்
கோழி - கொக்கரிக்கும்
தவளை - கத்தும்
பாம்பு - சீறும்
மயில் - அகவும்
யானை - பிளிறும்
சேவல் - கூவும்

*– ந.றபீலா*

# மிலேனியம் ஆண்டினிலே மிகையின்றி மிளிர்ந்த தளபதி

## லெப். கேணல் இரும்பொறை

தமிழீழத்தின் வளம் மிக்க தலைநகரான திருமலையினிலே எழில் கொஞ்சும் கிராமமான தம்பலகாமம் எனும் இடத்தில் சிவராசா பரமேஸ்வரி தம்பதியினருக்கு அருந்தவப் புதல்வனாய் 01.09.1972 இல் பிறந்தான் இவன். இவனுக்கு இவனது பெற்றோர் கலைச்செல்வன் எனும் பெயர் சூட்டினர். இவனுக்கு இரண்டு தங்கைகளும் மூன்று தம்பிமாரும் இருந்தனர். இவனைச் செல்லமாக எல்லோரும் செல்வன் என்றே அழைத்தனர். செல்வன், தான் பிறந்த மண்ணிலே கல்வியைத் தொடர்ந்தான். பள்ளிப் படிப்பினிலே சிட்டாய் மிளிர்ந்த கலைச்செல்வன் பெயருக்கு ஏற்றாற் போல் பல கலைகளிலும் சிறந்து விளங்கினான். சிறுவனாய் இருந்த போதும் கூடச் சிந்தித்துச் செயற்படும் ஆற்றல் இவனுடன் கூடப்பிறந்த குணங்களில் ஒன்றாயிருந்தது.

இவன் சகோதரர்களிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவன். யாரையும் நொடிப்பொழுது கூடப் பிரிந்திருக்கமாட்டான். அன்பால் பிணைக்கப்பட்ட இவனது குடும்பச்சக்கரம் அந்நியரின் பல கெடுபிடிகள் மத்தியில் சுழன்று கொண்டிருந்தது. எங்கும் சிங்களக் காடையரின் கொடூரம் தலைவிரித்தாடியதானது இவனது படிப்புக்கு முட்டுக்கட்டையாகவே இருந்தது. இதனால் செல்வன் தனது படிப்பை இடைநிறுத்தி விட்டான். ஆற்றல் கொண்ட இவனால் இந்தக் கெடுபிடிகளுக்குத் தீர்வுகாண முடியவில்லை. காலங்கள் சென்றிடச் சென்றிட இவனது மனதில் புதிய உணர்வு ஊற்றெடுக்கத் தொடங்கியது. தமிழ் மக்களின் சுதந்திரம் பறிபோவதை இவனால் பொறுத்திருக்க முடியவில்லை. ஒரு கூட்டுக்கிளியாக உறவுகளோடு சுற்றிச் சுற்றிப் பாசத்தோடு வாழ்ந்த செல்வன் புதிய பாதையில் செல்வதற்கு எண்ணினான். 1990ம் ஆண்டு காலப்பகுதியில் எதிரிக்கு நல்லதொரு பாடம் புகட்ட வேண்டும் என்ற தூய சிந்தையுடன் அண்ணன் பிரபாகரன் சேனையில் இணைந்து கொண்டான்.




சொந்தங்களை மறந்து சுற்றங்களைத் துறந்து சொந்த மண்மீட்புக்குப் புறப்பட்டான் செல்வன். திருமலை பெற்றெடுத்த வீரப்புதல்வனாய்த் தான் பிறந்த மண்ணிலே பல வீரசாதனைகள் படைத்தான். எதையும் சிந்தித்துச் செயலாற்றும் இரும்பொறை, பொறுப்பாளர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றிருந்தான். போராளிகளுடன் அன்பாகப் பேசிப்பழகும் இவன் அனைவர் (மத்தியிலும்) மனங்களிலுல் அழியா இடத்தைப் பிடித்தவனானான்.



போராட்ட ஆரம்பத்தில் தேசியத்தலைவரின் நெருங்கிய நண்பனாயிருந்து வரலாற்றில் அழியா இடம் பிடித்துக் கொண்ட சீலன் எவ்வளவு வீர சாதனைகள் புரிந்தாரோ அதற்கு நிகராய் செயற்பட்டவன் தான் இரும்பொறை. இவன் காலத்தின் தேவைக்கேற்ப 1993ம் ஆண்டின் முற்பகுதியில் கடற்புலிகள் அணியில் இணைந்து கொண்டான். கடலிலும் தரையிலும் எனப் பல பயிற்சிகள் பெற்றுக்கொண்டான், இவன். எதிலும் சளைத்தவன் இல்லை என்பதற்கேற்ப கனரகப் பயிற்சியிலும் சிறந்து விளங்கினான் இரும்பொறை. இவனது தனித்திறமையினால் கடலிலே கனோன் பயிற்சி ஆசிரியராய் நியமிக்கப் பட்டான். எல்லோருடனும் அன்பாகப் பழகும் நற்குணம் படைத்த இவன், பயிற்சி பெறும் போராளிகளுக்கு அன்பான அறிவான ஆசானாயும் விளங்கினான். பயிற்சியின் போது களைத்துச் சோர்வற்று இருப்பவர்களுக்கு அன்னையைப் போல் பரிவு காட்டுவான் இரும்பொறை.

இவன் பல கடற்சமர்களில் பங்கு கொண்டு தனது திறமைகளை வெளிக்கொணர்ந்தான். எச்சந்தர்ப்பத்திலும் தாமதிக்காமல் தீர்க்கமான

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

# என்னோடு நான்

## கந்தையா நவரேந்திரன்

மனிதன் எப்படி விமர்சனத்திற்கு முகம் கொடுக்கிறான் என்பதை அவதானிக்கும்போது, பெரும்பாலான மனிதர்கள் தாங்கள் ஏதோ குறைபாடு அற்றவர்கள் என்று தங்களுக்குள் தாங்களே இரகசியமாக நம்புகிறார்கள் என்று வெளிப்படையாகவே தெரிகின்றது. இந்த நம்பிக்கையைத் தம்முள் உணர்ந்தவர்களும், பணிவு காரணமாகவோ என்னவோ அதனை வெளியிடுவதில்லை. இத்தகைய குறைபாடற்ற மனிதர்கள் இருக்கும் இவ்வுலகில் இத்துணை குழப்பங்களும் குளறுபடிகளும் சீர்குலைவுகளும் காணப்படுவது ஒரு முரண்பாடாகத் தோன்றவில்லையா? வாழ்க்கையில் கடுஞ் சவால்களை எதிர்கொள்ளும்போது, சில நேரங்களில் நாம் குறைபாடற்றவர்கள் என்ற உணர்வு எம்முள் தோற்றினாலும், அவ்வுணர்வு வெகு விரைவாகவே எம்மாலேயே திரிபுபடுத்தப்பட்டும், மறுத்துரைக்கப்பட்டும் மிகவும் வசதியாக மறந்துவிடப்படுகிறது. மிகப் பணிவுடைய வேறு சிலர் தம்முடைய குறைகளை ஏற்றுக் கொண்டாலும் மிகவும் விரைவாகவே தங்களுக்காகத் தாங்களே அனுதாபப்பட்டுக்கொண்டு தப்புவதற்கு ஏதாவது நியாயங்களைக் கண்டு பிடித்துவிடுகிறார்கள். இதில் இருக்கும் சோகம் என்னவென்றால், எங்களது முழு நிறைவு பற்றிய எங்களது நம்பிக்கை, பிறர் மீது உள்ளதாக நாம் கருதும் குறைகளைப் பெரிது படுத்தவே உதவுகிறது. எங்களது, எங்களைப் பற்றிய இந்த கவன வழுக்கல் - ஒழுக்க வழுக்கல் - மற்றவர்களிடமும் சமுதாயத்திடமும் காணப்படுகின்ற குறைபாடுகளை மாற்றியமைக்கத் தூண்டுகிறது. இதனால் நாம் திறனாய்வாளர்களாகவோ, வெறு-ப்பு வேதாந்திகளாகவோ, பொது நலப்பண்பாளர்களாகவோ, ஆதரவுப் பசப்பாளர்களாகவோ, மூர்க்கப் புரட்சிக்காரராகவோ மாறுகின்றோம். இப்படிப்பட்ட வேடங்களைப் போட்டுத்தான் நாம் ஒவ்வொருவரும் மற்ற ஒவ்வொருவரையும் மாற்ற முனைகின்றோம். எனினும் அடிப்படையில் யாருமே மாறியதாக நாம் கேள்விப்படவில்லையே?

> மற்றவர்கள் தங்களுக்குள் எதனைத் துடைத்தழிக்க வேண்டும் என நான் விரும்புகின்றேனோ, அதனை முதலில் என்னுள் செய்யத் தொடங்க வேண்டும்.

அரசியல்வாதிகள், மதப்போதகர்கள், சித்தாந்தவாதிகள், குருமார், சமூகச் சீர்திருத்தவாதிகள், தத்துவஞானிகள், உளவியலாளர்கள், விஞ்ஞானிகள் என்று எல்லோருமே உலகைப் பற்றியும், சமுதாய நிலைகள் பற்றியும், ஏழைகள் பற்றியும், பட்டினி கிடப்போர் பற்றியும், சமுதாய அடிநிலை வகுப்பினர் பற்றியும் அக்கறை கொள்வதுபோல் தோன்றுகிறது. ஆனால் இந்த அவல நிலைகள் ஏன் ஏற்பட்டன என்பதையிட்டு யாருமே அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை.

எங்களது பேரவா, புகழார்வம், பதவிக்கான போட்டி - வேட்கை, பாதுகாப்பும் இன்ப நலத்துக்கான கட்டு மீறிய நாட்டம் ஆகியவைதான் இந்த ஏற்றத் தாழ்வை - ஒட்டா வேறுபாட்டை ஏற்படுத்தியது என்பதைப் புரியாதவர்களாக இருக்கின்றோம். எங்களது புறத்தை மாற்றி அமைக்கும் செயற்பாடானது, புறத்தின் நிலைக்கு அகமே காரணி என்ற யதார்த்தத்திலிருந்து எம்மைத் திசை திருப்புகிறது. அப்படியானால் அடுத்து வரும் சந்ததியின் முற்றுமுழுதாக பேரழிவுக்கான சூழ்நிலையை நாம் தாம் உருவாக்கிக்கொண்டு இருக்கிறோம் என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எங்கள் சமூகத்தில், வயது வந்தவர்கள் விலங்குகளைக் கொன்று தின்னுகிறவர்களாகவும், சிறுவயதினர் இரை விலங்குகளாகவும் மாறிவிட்டனர். இவ்வுலகம் வயது வந்தவர்களது உலகமாகவே உள்ளது. ஒவ்வொரு புதிய சந்ததியினதும் சமுதாயத்தை மோசமாக்குவதற்கான பொறுப்பை வயது வந்தவர்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் இப்பொறுப்பு தன் மீது சுமத்தப்படுவதை எந்தவயதுவந்த ஒருவரும் ஏற்கத்தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. எனினும், இனிவரும் சந்ததியினருக்காகவே தாங்கள் இத் திருத்தொண்டுகளைச் செய்ததாகவும் செய்துகொண்டிருப்பதாகவும் கூறிக்கொண்டு அதனை எண்பிப்பதற்காக அவர்கள் பெரும் முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டுள்ளார்கள்.

தொழிலதிபர்கள் பெருவாரியான பணத்தைப் பதுக்குகிறார்கள். பிறகு அவர்களே ஏழைகளின் துன்பத்தைத் துடைக்கவென நம்பிக்கை நிதியங்களை உருவாக்குகிறார்கள். இரசாயன நிறுவனங்கள் Thalidomide என்ற நோவாற்றும் மருந்தைப் பெரும்பாலும் பிள்ளைபேறு காலத்திற்காகக் காத்திருக்கும் தாய்மாருக்குக் கொடுப்பதற்காகச் சந்தைப்படுத்துகின்றன. பின்பு அவையே ஊனமுற்றோருக்கான நிறுவனங்களைத் திறக்கின்றன. அரசாங்கங்கள் நச்சு வாயுக்களையும், நுண்மங்களையும், அணு ஆயுதங்களையும் பெரும் அளவில் தயாரிக்கின்றன. பின்பு அவ்வரசாங்கங்களே பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடும் வழங்குகின்றன. இது, இரை விலங்குகளைக் கொல்லுவதற்கு முன்னர், அவற்றைக் கொல்லும் விலங்குகள் கடைசியாக அவற்றுடன் விளையாடும் விளையாட்டை ஒத்தது.

பிறர் மனங்களின் மீது, குறிப்பாக இளைய சந்ததியினரின் மனங்களின் மீது உளவியல் தீங்குகளைத் திணிப்பதிலேயே வயது வந்தவர்கள் இடைவிடாது கண்ணும் கருத்துமாய் ஈடுபட்டுக்கொண்டு இருக்கின்றனர். தன்னைப் பற்றியும் தனது குறைபாட்டற்ற தன்மை பற்றியும் தனக்குள்ளேயே பெருமிதப்பட்டுக்கொண்டிருக்கும் மனிதனால், சமுதாயத்தை அழிப்பதில், தான் ஆற்றிவரும் அல்லது வகுத்துவரும் பங்கினை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருப்பது ஏன் என்ற ஒரு நியாயமான கேள்வியை எம்மை நாமே கேட்கவேண்டும். எம்மைப் பார்த்து நாம் கேட்கும் கேள்வி, உலகைப் பார்த்து நாம் கேட்கும் கேள்வியாகவே இருக்கும். ஏனெனில், உலகமும் நாமும் வேறு வேறு அல்லவே? உலகமே நாம். நாமே உலகம். அகம் வேறு, புறம்வேறு என்று கிடையாது. புறத்தில் உலகில் காணப்படும் அவலங்கள் யாவும் எம் உள்ளத்தின் - எம் அகத்தில் இருந்து தோன்றியவைதான். எமது

## அகத்தின் வெளிப்பாடே புறம்

அகத்தில் உள்ள அசிங்கங்கள் எமக்கு உள்ளேயே மூடி மறைந்து கிடக்கின்றன. எம்மால் மிகவும் கெட்டித்தனமாக மூடி மறைக்கப்பட்டுக்கிடக்கும் எமது அகத்து அசிங்கங்கள் புறத்தில், பூதாகரமாக நர்த்தனம் புரிகின்றன. அந்த அகக் கோரங்களில் இருந்து தப்பிக்க - அல்லது அவற்றை அமுக்க - அடக்க - மனித மனம் கண்டு பிடித்தவைதான் அவனது கடவுள்களும், மந்திரங்களும், மதங்களும், பூசைகளும், ஜபங்களும், சடங்குகளும். சிறு பிள்ளைகள் பொம்மைகளை வைத்து விளையாடிய விளையாட்டை வயது வந்தவர்கள் வேறு விளக்கங்களைத் தனக்குத்தானே கொடுத்துக்கொண்டு விளையாடுகிறார்கள். குழந்தைகள் குழப்படி செய்யாமல் அடக்க-அவர்களது கவனத்தை வேறு திசையில் திருப்பப் பொம்மைகளைப் பயன்படுத்துவது போலத்தான், நாம் எமது அக, புற முரண்பாடுகளிலிருந்தும், மனச்சான்றின் தண்டனைகளிலிருந்தும், உலக மாயைகளிலிருந்தும் எமது கவனத்தை வேறு திசையில் திருப்ப கடவுட் பொம்மைகளைக்கண்டு பிடித்து விளையாடிக்களித்துக் கொண்டிருக்கிறோம். சில பிரிவினர் கருத்துப் பொம்மைகளோடும் விளையாடுகிறார்கள். பிசாசு குடிகொண்டிருக்கும் மனத்தின் அசைவுகளை நான் என்னுள்ளும் காண்கின்றேன். உலக அவலங்களுக்கும் நானும் பொறுப்பாளி என்பதை நான் மனதார ஏற்றுக்கொள்கின்றேன். மற்றவர்கள் தங்களுக்குள் எதனைத் துடைத்தழிக்க வேண்டும் என நான் விரும்புகின்றேனோ, அதனை முதலில் என்னுள் செய்யத் தொடங்கவேண்டும்.

இது ஒரு மிகப்பெரிய பயனுள்ள தொடக்கமாகும்.

# ஸ்ரீலங்கா அரசுக்கான வார இராசி பலன்

உலகத்து நவக்கிரகங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து பெல்ஜியம் என்ற நாட்டில் கூடி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்லும்படி நெருக்குவார்கள்.

எட்டாம் இடத்தில் புகுந்து அட்டமத்துச் சனியாய் வீற்றிருக்கும் ஜே.வி.பி. தொட்டதுக்கெல்லாம் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருக்கும். பத்தாம் இடத்து வியாழன் போல் பதியை விட்டுக் கிழப்பக் காத்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி முரண்பாடுகளைத் தூண்டிவிடும்.

'புத்தங் சரணங் கச்சாமி' சொல்ல வேண்டிய ஹெல உறுமய புத்த பிக்குகள் சனிக்கு ஏட்டிக்குப் போட்டியாக 'யுத்தங் சரணங் கச்சாமி' என்று ஏதாவது சொல்லித் தொலைப்பார்கள். மூன்றாம் இடத்துப் புதனாய் வந்து நாட்டு முற்றத்தில் இருந்த சந்திப்பு சந்திப்பு என்று தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த சூல்ஹைமை சமாளித்து அனுப்பிவிட்டாலும், பெல்ஜித்தில் ஒன்று கூடும் நவக்கிரகங்களின் தூண்டுதலால் அவர் மீண்டும் வரக் கூடும்.

தமிழர் தாயகத்துச் சூரியதேவன் எல்லாவற்றையும் பொறுமையோடு இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்.

கிழக்கில் புகை மூட்ட நினைத்தால் அது புயலாக மாறி அரசை ஆட்டங்காண வைத்துவிடும்.

எதற்கும் பலகல்ல ஐயாவைக் கண்டித்து வைப்பது நல்லது.

மொத்தத்தில் இவ்வாரம் சிக்கல்கள் நிறைந்ததாகவே காணப்படுகின்றது.

இவற்றுக்குப் பரிகாரமாக வன்னீஸ்வரம் சென்று முழுமனதோடு வேண்டுதல் செய்தால் சிக்கல்களில் இருந்து மீள வழி பிறக்கும்.

**– திருஞான சாஸ்திரிகள்**

# நகைச்சுவைத் துணுக்குகள் → வைஷாலி

குப்பை வண்டிக்குப் பின்னால் என் மனைவி ஓடிக்கொண்டே கேட்டாள், 'குப்பைக்கு நான் லேட்டாயிடிச்சா?'

அவள் பின்னாலே ஓடிக்கொண்டே சொன்னேன். 'இல்லை... ஓடிப்போய் குதி உள்ளே'

☺ ☺ ☺

ஆசிரியர்: குழந்தைகளே, ஒருவன் ஒரு கழுதையை அடிப்பதைப் பார்த்து அவனைத் தடுக்கிறேன். இந்த நல்ல குணத்தின் பெயரென்ன?

மாணவன்: சகோதர பாசம்.

☺ ☺ ☺

ஆசிரியர்: சாப்பாட்டுக்கு முன்பு, பிரார்த்தனை செய்கிறாயா?

மாணவன்: இல்லை, என் அம்மா நன்றாகச் சமையல் செய்வார்கள்.

☺ ☺ ☺

ஒருவர் – நான் வசதியாக உட்கார்ந்திருக்கும்போது, ஒரு பெண் நின்றுகொண்டிருந்தால் என்னால் பார்க்க முடியாது.

மற்றவர் – என்ன செய்வாய்?

ஒருவர் – என் கண்களை மூடிக்கொள்வேன்.

☺ ☺ ☺

### ஆண்களைக் கிண்டல் செய்யும் நகைச்சுவைகள்

ஆண்கள் ஏன் பெண்களை துரத்துகிறார்கள் (அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள எந்தவித எண்ணமுமில்லை என்றிருந்தாலும்)?

கார் எப்படியும் ஓட்டப் போவதில்லை என்று தெரிந்திருந்தாலும் நாய்கள் கார்களை துரத்திக்கொண்டு ஓடுவது போலத்தான்.

☺ ☺ ☺

கடவுளைப் பார்த்து ஆண் கேட்டான் 'ஏன் பெண்களை அழகாகப் படைத்திருக்கிறீர்கள்?'

கடவுள் சொன்னார் 'நீ பெண்ணை காதலிக்கத்தான்'

ஆண் கேட்டான் 'அப்புறம் ஏன் அவளை முட்டாளாகப் படைத்துவிட்டீர்கள்?'

கடவுள் சொன்னார் 'அவள் உன்னைக் காதலிக்கத்தான்'

☺ ☺ ☺

ஆசிரியர்: அமெரிக்கா எங்கே உள்ளது?

மாணவன்: தெரியாது சார்.

ஆசிரியர்: மேசையில் மேல் ஏறி நில்லுடா

மாணவன்: ஏறி நின்னா தெரியுமா சார்?

☺ ☺ ☺

ஆசிரியர்: மூன்றாம் உலகப்போர் வந்தால் என்ன ஆகும்?

மாணவி: (சோகமாக) வரலாறில் இன்னும் நிறையப் படிக்கவேண்டி இருக்கும்.

☺ ☺ ☺

ஒருவர் – சோ, லல்லு பிரசாத் யாதவ், சுப்ரமணிய சுவாமி இவர்களை வீரப்பன் கொண்டு போனால் யார் காப்பாற்றப்படுவார்கள்.

மற்றவர் – இந்தியா காப்பாற்றப்படும்

# தப்பும் வழி


படு புத்திசாலிகலான 4 எம்.பி.ஏ. படிக்கும் நண்பர்கள் இறுதித் தேர்வுக்குச் சற்று முன்னர் நன்றாக குடித்துவிட்டதனால் படிக்க முடியவில்லை. அடுத்த நாள் காலையில் துயரம் மிக அவர்கள் யோசித்து எப்படி தேர்வை 4 பேருக்காக மட்டும் தள்ளிப்போட முடியும் என யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

கை கால்கள், உடை எல்லாவற்றிலும் கிரீஸ், எண்ணெய் தடவிக்கொண்டு, தலைமுடியைக் கலைத்துக்கொண்டு பரீட்சை மண்டபத்துக்குள் நுழைந்தார்கள். 'அய்யோ டீன்' என்று கதறி டீனின் முன்னர், தங்கள் சோகக்கதையைச் சொன்னார்கள். நேற்று இரவு நகரத்திலிருந்து காரில் வரும்போது, வனாந்தரத்தில், கார் ரயர் பஞ்சராகி எந்தவித உதவியுமின்றி பல முயற்சிகளுக்குப் பின்னர் வெறும் காலில் நடந்து இப்போதுதான் வந்து சேர்வதாகப் புலம்பினார்கள். சில நாட்களுக்குப் பின்னர் தாங்கள் பரிட்சை எழுதுவதாகக் கேட்டுக் கொண்டாரகள். டீன், சரி என்று ஒப்புக்கொண்டு 3 நாட்களுக்குப்பின்னர் பரிட்சை என்று சொன்னார்.

நண்பர்கள் விழுந்து விழுந்து படித்து மூன்று நாட்களுக்குப் பின்னர் டீனிடம் சென்றார்கள். இது அசாதாரணமான கோரிக்கை ஆதலால், பரிட்சையும் அசாதாரணமாகத்தான் இருக்கும் எனக் கூறி, நான்கு மாணவர்களுக்கும் 4 வெவ்வேறு பரிட்சை அறைகளில், ஒரே கேள்வித்தாளைக் கொடுத்து பரிட்சை வைக்கப்போவதாகச் சொன்னார்.

கேள்வித்தாளில் முதல் கேள்வியாக 5 மதிப்பெண்களுக்கு ஒரு எளிய கேள்வி இருந்தது. மாணவர்கள் வெகு எளிதில் அதனை முடித்துவிட்டார்கள். அடுத்து 95 மதிப்பெண்ணுக்கு ஒரு கேள்வி இருந்தது.

'எந்த ரயர்?'



# இணைய வலம்

## அமெரிக்காவில் தமிழர் வாழ்க்கை

*- ஆசை ஆசைத்தம்பி*

இட்லி என்னடா தோசை என்னடா
அவசரமான உலகத்திலே
மெக்டானல்ட்ஸ் போகிறார் வாங்கித் தின்கிறார்
ஃப்ரெஞ்சு ஃப்ரைஸைத் தான் காருக்குள்ளே
ஃப்ரெஞ்சு ஃப்ரைஸைத் தான் காருக்குள்ளே

தாயும் தந்தையும் ராவும் பலலுமாய்
ஓடி உழைக்கிறார் பாரடா
இவர் பெற்ற பிள்ளைகள் தனித்து வீட்டிலே
இருக்கும் சேதியும் கேளடா
இருக்கும் சேதியும் கேளடா

தனித்து வீட்டிலே இருக்கும் பிள்ளைகள்
என்ன செய்கிறார் பாரடா
அவர் நிண்ட்டிண்டோவிலும் இண்டெர்
நெட்டிலும்
பொழுதைக் கழிக்கிறார் பாரடா
பொழுதைக் கழிக்கிறார் பாரடா

செல்வம் சேர்க்கவே இங்கு வந்ததாய்
என்றும் சொல்கிறார் கேளடா
இவர் மார்ட்டுகேஜையும் காரு லோனையும்
அடைப்பது எந்த நாளடா
அடைப்பது எந்த நாளடா

கொலஸ்டராலையும் கேலரீ யையும்
எண்ணிப் பார்க்கிறார் பாரடா
இவர் கருணைக் கிழங்கையும் முருங்கைக்
காயையும்
பார்த்து எத்தனை நாளடா
பார்த்து எத்தனை நாளடா

பத்து மைல்களோ நூறு மைல்களோ
பார்ட்டி என்றதும் பாரடா
இவர் ஒட்டு மொத்தமாய் குடும்பத்தாருடன்
ஓட்டிச் செல்கிறார் காரடா
காரோட்டிச் செல்கிறார் பாரடா


ஆண்டுக்கொரு முறை வீட்டு ஞாபகம்
வந்து விட்டதும் பாரடா
இவர் மூட்டை முடிச்சுடன்
சொந்த ஊரில் இருப்பாரடா
பெற்ற தாயையும் சுற்றத்தாரையும்
பிரிந்து வந்தவர் தானடா
இவர் பெற்ற பிள்ளைகள் பிரிந்து போகையில்
வருத்தப் படுகிறார் ஏனடா
வருத்தப் படுகிறார் ஏனடா

குழந்தை வளர்ப்பிலே தமிழுக்கிடமின்றி
ஆகிப் போனது ஏனடா
வட அமெரிக்காவில் வாழும் தமிழரின்
வாழ்க்கை முறை இதுதானடா
வாழ்க்கை முறை இதுதானடா

### யாரோ சொன்ன புன்னகை மொழிகள்

– கடைசியாகச் சிரிப்பவன் மெதுவாகச் சிந்திக்கிறான்

– நாஸ்திகத்துக்குப் போய்விடலாமா என்று யோசித்தேன். ஆனால் அதில் ரொம்பவும் குறைவாகவே விடுமுறை நாட்கள் இருக்கின்றன.



# றோலண்ட் கறோஸ்

முன்னணி வீரர்கள் பலரை இவ்வாண்டும் பின்தள்ளிவிட்டு நூற்றிப்பத்தாண்டு வரலாறு கொண்ட றோலெண்ட் கறோஸ் வெற்றிக் கிண்ணம் அரைக்காலிறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டது. கடந்த ஆண்டு சம்பியன்களான ஸ்பெயினின் யுவன் கார்லோஸ் பெரெரோ, பெல்ஜியத்தின் யுஸ்ரின் கெனிற்கார்டன் ஆகியோர் இரண்டாவது சுற்றில் முறையே இகோர் அன்றுவ் (ரஸ்யா) ரற்றினா கார்வின் (இத்தாலி) இடம் தோல்வி அடைந்தனர். 1999ம் ஆண்டு சம்பியனான அகசி முதற்சுற்றிலும் உலக தரத்தில் முதலிடம் வகிக்கும் றொயர் பெடரர் மூன்றாவது சுற்றிலும் வெளியேற்றப்பட்டனர். 1997ம், 2000ம் 2001ம் ஆண்டு சம்பியனான குஸ்ரவோ கூர்ற்றென் பெடறகுடனான மூன்றாவது சுற்ற ஆட்டத்தில் 6-4, 6-4, 6 -4 எனும் நிலையில் வெற்றிபெற்றுள்ளார். இரண்டாவது நிலை வீரரான அண்டிறொடிக்கை 125 நிலை வீரரான மூர்ரிஸ்(பிரான்ஸ்) 3-6, 6-3, 6-7 (5-7), 6-3, 6-2 எனும் நிலையில் தோற்கடித்தார்.

## ரெனிஸ்

**சாதனை**

ஆண்கள் பிரிவில் முதலாவது சுற்றில் கிளர்மோ சன்ரோறோ இடையான ஆட்டம் சாதனை படைத்து மறுநாள் முடிவுற்றது. முதல் நாள் ஆட்டத்தில் 4-6, 3-6, 7-6, 6-3 எனும் சமநிலையில் இருந்த இவர்கள் ஐந்தாவதும் இறுதியானதுமான செற்றில் 5.5 எனும் நிலையில் இருந்தபோது வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் மறு நாள்வரை ஒத்திவைக்கப்பட்டது. றோலன்ட் கறோல் சரித்திரத்தில் இதுவரை நீண்டநேர ஆட்டமாக கருதப்பட்ட 5 மணி 31 என்ற சாதனையை (1998 -குறோஜா -குனி) தாண்டிச் சென்றது. அடுத்த உலக சாதனையாக கடந்த இருபத்திரண்டு வருடங்களாக நிலைத்துவந்த 6 மணி 22 நிமிடம் (1982 -டேவிஸ்கிற்றை காலிறுதி ஆட்டம்-ஜோன் மக்என்றோ மற்ஸ்வில்லண்டர்) என்ற சாதனையையும் கடந்து 6-4, 6-3, 6-7, 3-6, 16-14 எனும் நிலையில் வெற்றிகொண்டார்.

ஜே. ஜே

---

2004ம் ஆண்டிற்கான ஐரோப்பிய முதன்மைக் கழகச் சம்பியன் பட்டத்தை போர்த்துக்கல்லின் எப்.சி. போர்த்தோ பெற்றுக்கொண்டது. கடந்த 26.05.2004 அன்று ஜேர்மனியின் ஜெல்சென்கிர்சென் நகரில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பிரான்சின் ஏ.எஸ். மொனாகோ அணியினை 3:0 எனும் நிலையில் வெற்றி பெற்று ஐரோப்பிய உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் நாற்பத்தொன்பதாவது முதன்மைக் கழக வெற்றிக்கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர். இவ்வாட்டத்தின் முதலாவது கோலினை (39வது நிமிடம்) அடித்த எப். சி.போர்த்தோ தாக்குதல் வீரரான பிரேசில் நாட்டைச் சேர்ந்த பத்தொன்பது வயதுடைய கார்லோஸ் அல்பேர்ரோ, இச்சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் அதி குறைந்த வயதில் கோல் அடித்த மூன்றாவது வீரர் ஆவார். காலிறுதி, அரையிறுதி ஆட்டங்களில் முறையே ஸ்பெயினின் றியல் மட்றிட். இங்கிலாந்தின் செல்சி அணிகளை பிரமிப்பூட்டும் வகையில் வெற்றிகொண்ட மொனாகோ அணி இவ்விறுதியாட்டத்தில் குறிப்பிட்டுக்கூறும் அளவிற்கு மிளிரவில்லை என்றே கூறலாம். ஆனால் போர்த்தோ அணியோ இங்கிலாந்தின் மன்செஸ்ரர், ஸ்பெயினின் லகுறோன் அணிகளை அசாதாரண நிலையிலேயே வெற்றிகொண்டு இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றிருந்தது. இவ்விறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்றதன் மூலம் போர்த்தோ அணி 18 மில்லியன் யூறோக்களையும்,

இரண்டாவது இடத்தைப் பெற்ற மொனாகோ 15.3 மில்லியன் யூரோக்களையும் பரிசுப் பணமாகப் பெற்றுள்ளது.

1987ம் ஆண்டு ஜேர்மனியின் வெயன் மியூனிச் அணியினை 2:1 எனும் நிலையில் வெற்றிகொண்டு முதன் முதலாக இவ்வெற்றிக் கிண்ணத்தை தம்வசமாக்கிய போர்த்தோ அணி, கடந்த ஆண்டு யு.இ. எப். ஏ கிண்ணத்தையும் வெற்றிகொண்டது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு தமது நாட்டின் சம்பியன் பட்டத்தையும், வெற்றிக் கிண்ணத்தையும் வென்ற இவ்வாண்?டும் சம்பியன் பட்டத்தையும் பெற்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளில் ஐந்து வெற்றிக்கிண்ணங்களை தமது அணிக்குச் சேர்த்த பெருமை பயிற்சியாளர் ஜோஸ் மொறினோவையே சாரும்.

ஒன்பது முறை இச்சுற்றுப்போட்டிக்கு தகுதிபெற்ற மொனாகோ அணி 1994ம், 98ம் ஆண்டுகளில் அரையிறுதி ஆட்டங்களில் இத்தாலியின் ஏ.சி. மிலான் யுவன்ரஸ்து துறன் அணிகளிடம் தோல்வி அடைந்திருந்தது. நடுவராகக் கடமையாற்றிய டென்மார்க் நாட்டைச் சேர்ந்த நெயில்சன் கடமையாற்றினார். இது இவரது நாற்பத்தைந்தாவது ஐரோப்பியக் கழகக் கிண்ண ஆட்டமாகும்.

# போர்த்தோ சம்பியன்







## நூற்றாண்டு ஆட்டங்கள்

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தினை முன்னிட்டு கடந்த 20ம் திகதி இரண்டு ஆட்டங்கள் (ஆண்கள், பெண்கள்) பிரான்சின் சென்டெனிசில் நடைபெற்றது. ஆண்கள் ஆட்டத்தில் கலந்துகொண்ட பிரேசில்-பிரான்ஸ் அணிகள் 1930ம் ஆண்டை நினைவு படுத்தும் வகையில் சீருடை அணிந்திருந்தனர். ஆட்டம் கோல்களற்ற சமநிலையில் முடிவுற்றது.

பெண்கள் ஆட்டத்தில் 2003ம் ஆண்டு உலகச் சம்பியனா்ன ஜேர்மனியை எதிர்த்து உலகத் தெரிவு அணி மோதியது. உலகத் தெரிவு அணி 3:2 எனும் நிலையில் வெற்றி பெற்றது. பெண்கள் உதைபந்தாட்டம் நூற்றாண்டை இன்னும் அடையவில்லை என்பது கவனத்திற்குரியது.

உலகத்திலே அதிகளவுக்குக் கடவுள் நம்பிக்கையுள்ள மக்கள் யார் என்று கணக்கெடுத்தால், முதல் வரக்கூடிய ஒரு பத்து இலக்கத்துக்குள் தமிழ் மக்களும் இருப்பார்கள்.

அதில் எத்தனையாவது இடத்தில் தமிழ்மக்கள் இருக்கிறார்கள் என்கின்ற ஆய்வு நமக்கு அவசியமில்லை. தமிழ் மக்கள் கடவுள் நம்பிக்கை மிக்கவர்கள் என்பதை மட்டும் பொதுக் கருத்தாக ஏற்றுக் கொள்ளலாம்.


இந்தக் கடவுள் நம்பிக்கை என்பது ஒவ்வொருவரின் தனிப்பட்ட கருத்தியல் சார்புத் தன்மையைப் பொறுத்த விடையம். அதில் நேரடியாகத்



# கோவில் உள்ள ஊர்களும் குடிசையே இல்லாத மக்களும்...

தலையிட்டு அவர்களின் மனதைப் புண்படுத்த வேண்டிய அவசியமும் இப்போது எமக்கில்லை.

நமது தாயகத்தில் தீவிரமான இந்துமத பக்தர்களாக இருந்தவர்கள் இங்கே வந்து அலேலூயா சொல்வதும் ஐயரைப் பார்ப்பது பாவம் என்று சொல்வதும் கூட அவர்களது தனிப்பட்ட விடையம். அதிலும் கூட இப்போதைக்கு நாங்கள் தலையிட



வேண்டியதில்லை. அதுவும் அவர்களது தனிப்பட்ட சுதந்திரம் என்று விட்டுவிடலாம்.

ஏனென்றால் எப்போது ஒரு மனிதன் தன்னம்பிக்கையை இழக்கிறானோ அப்போதுதான் அவன் தனக்கு மிஞ்சிய ஒரு சக்தியின் தேவையை நாடுகிறான். எப்போது அவன் அப்படி ஒரு சக்தி எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளும் என்று நம்புகிறானோ, அப்போதே அவன் தன்னை இழந்து விடுகிறான். தன்னை இழந்த மனிதனுக்குச் சுயபுத்தி என்பது இருக்காது. எனவே அவன் எப்போதும் சார்புநிலையில் கருத்தியல் ஆக்கிரமிப்புக்குச் சுலபத்தில் உள்ளாகக் கூடியவனாக இருப்பான்.

இங்கே சிவனா, முருகனா, அம்மனா, ஜேசுவா, மாதாவா, அல்லாவா என்ற பேதங்கள் நிரந்தரமானதல்ல. எந்தக் கோவிலுக்குப் போய் எந்தக் கடவுளை வணங்கினால், எந்தக் கடவுளுக்குக் கோவில் கட்டினால் அல்லது கோவில் கட்ட உதவினால், தங்களுக்கு லாபம் கிடைக்கும், தங்கள் குடும்பத்துக்கு நன்மை கிடைக்கும், நினைத்தது நிறைவேறும் என்று இலாபக் கணக்குப் போட்டுப் பார்த்துத்தான் ஒவ்வொருவரும் தங்களுடைய கடவுள் நம்பிக்கையைத் தீர்மானிக்கிறார்கள்.

இங்கே பிரான்சிலே சார்த் மாதா மற்றும் லூர்த்து மாதா ஆலயங்களுக்கும், ஜேர்மனியிலே கேவலார் தேவாலயத்துக்கும் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள், அதுவும் இந்துக்கள், வருடம் தோறும் சென்று வருவது இதற்கு நல்ல உதாரணமாகும்.

எனவே மதபேதங்கள், முரண்பாடுகள், கடவுள்களுக்கு இடையிலான வேறுபாடுகளுக்கு அப்பால், மனித நேயத்தோடு செய்யப்பட வேண்டிய சில விடயங்களைப் பற்றிப் பார்ப்பது நல்லதென்று நினைக்கிறேன்.

புலம் பெயர்ந்து வந்த தமிழர்கள் தாயகம் செல்லும்போது அவர்களை ஆச்சரியப்பட வைக்கின்ற விடயங்களில் கோவில்களும் ஒன்றாகும்.

**திரலோன்**

குறிப்பாக யாழ்பாணக் குடாநாட்டிலே உள்ள கோவில்கள் எல்லாம் கோபுரம், மண்டபம், தேர்முட்டி என்று மிகச் செழிப்போடு கண்ணைக் கவரும் வண்ணத்தோடு காட்சியளிப்பதைக் காணலாம்.

கடந்த 10 வருட காலத்தில் சிறீலங்காவில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரண்டு அரசாங்கங்களுமே கோவில்களைப் புனரமைப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்தன.

இது ஒன்றும் தமிழ் மக்கள் மீது கொண்ட கரிசனையால் செய்யப்பட்டதல்ல. மதத்தின் பேரால் மக்களைப் பிளவுபடுத்தி அவர்களின் விடுதலை உணர்வைச் சிதறடிப்பதுதான் சிறீலங்கா அரசின் பிரதான குறிக்கோள்.


கோவில் கட்டுவதற்கும் விடுதலை உணர்வுக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் நினைக்கலாம்.

கடந்த காலத்தில் கோவில்களைச் சார்ந்துதான் குடாநாட்டு சமூக அமைப்பின் இருப்பு தீர்மானிக்கப் பட்டிருந்தது. குடாநாட்டின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் காணி எல்லைக்காக நடந்த சண்டைகளும், கோவிலுக்காகக் கோவிலைச் சார்ந்து நடந்த சச்சரவுகளும் மோதல்களுமே அதிகமாக இருக்கும். தற்போது மறுபடியும் இந்தக் கோவில் கலாச்சாரத்தை முதன்மைப் படுத்தும்போது அங்கே மறுபடியும் சாதிச் சண்டைகளும், ஊர்ச் சண்டைகளும், பிரிவுச் சண்டைகளும் தூண்டிவிடப் படுகின்றன.



கோவில்களிலே கூட பெரியது சிறியது அந்தஸ்த்துள்ளது, அந்தஸ்த்தில்லாதது என்ற பேதங்கள் உருவாகிட்டன. ‘அவங்கடை கோயில் பெரிசா இருக்கு, எங்கடை கோயில் சின்னதா இருக்கு, நாங்கள் அவங்களை விடப் பெரிசாக் கட்ட வேணும், பணம் அனுப்புங்கோ’ என்று பலருக்கு ஊரிலிருந்து இங்கே தகவல் வருவதும் நாளாந்த நிகழ்வாகிவிட்டது.

ஊரில் இருக்கும் இடிந்துபோன பள்ளிக் கூடத்தைப் பற்றியோ, நூலகத்தைப் பற்றியோ, ஆதரவற்ற குழந்தைகள் பற்றியோ, வீடிழந்த ஏழை மக்கள் பற்றியோ யாரும் சிந்திப்பதில்லை.



தங்கள் ஊரில் உள்ள வளத்தைக் கண்டறிந்து, அதைப் பயன்படுத்தி ஒரு தொழில் முயற்சியை, உற்பத்தி முயற்சியை மேற்கொண்டால் பல குடும்பங்கள் பயன்பெறும், ஊர் முன்னேறும் என்ற பொது நோக்கு இன்னும் நம்மிடம் ஏற்படவில்லை.

‘வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்.
நெல்லுயரக் குடியுயரும்
குடியுரக் கோனுயர்வான்’...

இது ஔவைப்பாட்டி 2000 வருடங்களுக்கு முன் சொன்னது. முதலில் வயலின் வரம்பு உயர வேண்டும். அப்போதுதான் மழை நீர் அதிலே தங்கும். மழை நீர் தங்கினால்தான் நெற்பயிர் செழித்து வளரும். நெல் விளைச்சல் அமோகமாக இருந்தால்தான், மக்கள் நன்றாக இருப்பார்கள், மக்கள் நன்றாக இருந்தால் மன்னன் நன்றாக இருப்பான்.

இதே போலத்தான் ஊர் நல்லாயிருக்க வேண்டும் என்றால், ஊரிலுள்ள கோயில் குளம் எல்லாம் நன்றாக இருக்க வேண்டும் என்றால் நாடு நல்லாயிருக்க வேண்டும். எங்கள் தேசம் விடுதலையடைய வேண்டும். அந்த விடுதலைக்கான வரம்பை உயரத்திக் கட்டும் பணிக்கு நாம் உதவ வேண்டும். எப்படி ஒரு கோயிலைக் கட்டுவதற்கு உதவுவது ஆத்மார்த்தமாக எமக்குப் புண்ணியம் சேர்க்கும் என்று நாங்கள் நினைக்கின்றோமோ, அப்படி இலட்சக்கணக்கான மக்களின் துன்பங்களுக்கு விடிவைத் தரப் போகின்ற நாட்டு விடுதலைக்கு உதவுவதும் நமது ஆத்மார்த்த கடமை என்று நாங்கள் எண்ண வேண்டும்.

சித்திரை சிறுமாரி என்றாலும்கூட கோடை மழை வெயில் சுட்டெரித்துக்கொண்டு இருந்தது. நடுநிசியில் விமானம் தரையிறங்கியதால் அதிகாலையில்தான் விடுதியை அடையமுடிந்தது. நேர வித்தியாசம், காலநிலை மாற்றம், பிரயாணக் களைப்பு என்பவற்றால் என்னை மறந்து தூங்கிவிட்டேன். மதியம் திரும்பும்வேளை, அறையில் இருந்த அழைப்பு மணி காதடைக்கக் கத்தியது. மெதுவாக அதனை அமிழ்த்திவிட்டு, மீண்டும் நித்திராதேவியை இறுக்கக் கட்டி அணைத்துக் கொண்டேன். ஆனால் யன்னலூடாகக் கிளித்துக் கொண்டு வந்த சூரியக் கதிர்கள் என் உடலைப் பதம்பார்க்கத் தவறவில்லை. விருப்பமில்லாது கண்களை விழித்து யன்னல் ஊடாக் பார்க்க முனைகின்றேன். ஆனால் என் கண்கள் அகலத்

# வன்னியில் இருந்து...

திறக்க அந்த ஆதவனின் கதிர்களுக்கு விருப்பமில்லைப் போலும்... சுட்டெரிக்கும் வெயில், காற்றோடு கலந்து கனலாய்க் கொதித்தது. மாற்று வழியின்றி, காலைக் கடன்களை நேரம் தாழ்த்தி முடித்துவிட்டு காலநிலைகளுக்கு ஏற்றவாறு உடைகளை அணிந்துகொண்டு அறையைவிட்டு வெளியில் வந்து, விடுதியின் விருந்தினர் அறையில் அமர்ந்துகொண்டேன். கேட்டுக்கொண்தன்படி, பாலின்றி நல்ல ருசியான தேனீர் வழங்கப்பட்டது. பழைய நினைவுகளை மீட்டபடி தேனீரை அருந்திக்கொண்டு இருந்தேன்.

இருபது படுக்கை அறைகளுக்கு மேல் அந்த விடுதியில் இருப்பதாக அறிந்தேன். நல்ல தரமாகவும், துப்பரவாகவும் வைத்திருந்தார்கள். கூடவே வாடிக்கைகாரர்களை மிகவும் மகிழ்ச்சியாகவும், கவனமாகவும் பராமரிப்பதைக் காணமுடிந்தது. மேலும் அவ்விடுதி வெளிநாட்டில் வாழும் இலங்கைத் தமிழர் ஒருவரால் 92 கோடி ரூபாவுக்கு இரண்டு வருடத்திற்கு முன்பு வாங்கப்பட்டது என்பதை அறிந்தபோது, மனம் நெறுக்கென்று ஓர் இனந்தெரியாத பயத்தில் நிலைகுலைந்தது. இவ்வளவு பெரிய தொகைப் பணத்தை எவ்வாறு சேகரித்தார்கள் என்பதுதான் அந்த பீதியும், பயமும். ‘என்ன அண்ணை யோசிக்கிறியள்!’ என்று எனக்கருகில் இருந்த அந்த விடுதி நிர்வாகி மனநிலையைப் புரிந்தவராகக் கேள்வி எழுப்பினார். ‘இல்லை... இல்லை எங்கட ஆட்களும் இவ்வளவு பணத்திற்கு விடுதி வாங்குகிறார்களே!’ என்று ஆதங்கத்துடன் பதிலழித்தேன். ‘அண்ணை இது ஒரு சின்னக்காசு, எத்தனை வெளிநாட்டு தமிழர்கள் பல மில்லியன்களுக்கெல்லாம் பலமாடி மாளிகைகளைக் கொழும்பில் வாங்கியிருக்கிறார்கள்’ என்று அந்த மனேஜர் மிகவும் இலகுவாகச் சொல்லிவிட்டு.. ‘அண்ணை நீங்கள் எங்க இருந்துவாறீங்கள்?’ என்றால் அதற்கு நான் அவுஸ்திரேலியாவில் இருந்து வருகின்றேன் என்று பதில் கூறிமுடிக்குமுன்... ‘போய்க் கன காலமோ?’ என்றார். அதற்கு நான் ‘17 வருடங்களுக்குமேல் இருக்கும்’ என்று கூறினேன். ‘ஓ அப்ப பிறகென்ன நீங்களும் இவ்வாறு ஒரு கட்டடம் வாங்கலாம்’ என்று சிரித்தபடி கூறினார். நான் எதுவித சலனமுமின்றிப் புன்னகை செய்தேன்... என் புன்னகை அவருக்கு என்ன விளக்கத்தை கொடுத்ததோ நான் அறியேன். அவ்விடத்தைவிட்டு எழுந்து சற்று வெளியில் வந்தேன். என் மனத்தை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. எவ்வாறு இவ்வளவு தொகைப் பணத்தை இவர்கள் பிறநாடுகளில் உழைக்கின்றார்கள்.. என்றால் நம்ப முடியவில்லை. எனக்குத் தேவையில்லாத பிரச்சினை. மனத்தை மாற்ற முயற்சி செய்கின்றேன்.



திடீரென ஒரு வான் விடுதியின் முற்றத்தில் வந்து நின்றது. காவலர்கள், பணியாட்கள் போய் அவர்களை வரவேற்கின்றனர். ஓர் இளம் குடும்பம், கணவன் மனைவி, இரண்டு பிள்ளைகள். நால்வருக்குமாக ‘அந்த வான் விமான நிலையத்தில் இருந்து வந்திருக்கின்றது’ என்று சொல்லும்போது சேவகர்கள் வானின் பின் கதவைத் திறந்தார்கள். அந்த வானின் முக்கால்பகுதி பல்வேறுபட்ட விலையுயர்ந்த பொருட்களால் நிரப்பப்பட்டு இருந்ததைப் பார்க்க முடிந்தது. ஒரு பெட்டியில் புத்தகங்களையும், ஒரு பையில் உடுப்புக்களையும் போட்டுக்கொண்டு வந்திருக்கும் எனக்கு இது ஆச்சரியத்தைத் தந்ததில் வியப்பொன்றுமில்லை. வானில் இருந்து குடும்பத் தலைவன் முதலில் இறங்கினார். எறிக்கும் வெயிலில், அவர் காதில் இருந்த தோடும், கழுத்தில் இருந்த பட்டு சங்கிலியும், கைகளில் இருந்த நீலக் கல் அணிந்த தங்க மோதிரங்களும், கண்கள் கூசும்படியாக ஒளிர்ந்தன. சூரியக் கதிர்களோடு அந்த தங்க நகைகள் கடுஞ் சமராடுவதை அந்த பணியாளன் கண்ணிமை வெட்டாது பார்க்கின்றான். என் மனம் சற்றுக் கூச்சப்பட்டது. பின்னர் குடும்பத் தலைவியும், அவர்களின் பிள்ளைகள் இருவரும் வானைவிட்டு கீழே இறங்கினார்கள். நம்ப முடியவில்லை. அந்த மனிதன் ஒரு நகைக் கடையையே மொத்தவிலை கொடுத்துவாங்கித் தன் மனைவி மீதும் தன் இரு பெண்பிள்ளைகள் மீதும் குவித்திருக்கின்றான் போலும் என்று சொல்லத்தோன்றியது. அங்குள்ள காவல்காரன், சேவகர்களுக்கு இது ஒன்றும் புதிதாக இருந்திருக்காது. அவர்கள் இவ்வாறு எத்தனை காலத்தின் கோலங்களைச் சந்தித்து தரிசனம் செய்து இருப்பார்கள். ஆனால் நான் தேவையில்லாது சஞ்சலப்பட்டுக்கொண்டு இருப்பதை உணர்ந்திருந்தேன். இவர்கள் அளவோடு நகைகளைப் போடலாமே! ஏன் இவ்வளவு நகைகளை அணிந்து இருக்கிறார்கள். இது எவ்வளவு ஆபத்தானது. மேலும் இந்த நாட்டில் வரும் சாதாரண மக்களின் மனநிலையை இது எவ்வளவு தூரம் பாதிக்கும் என்றெல்லாம் என் மனம் சஞ்சலப்படுகிறது. விடுதியின் வரவேற்பு அறையில் ஒரு வயோதிப மாதுவும் ஒரு நடுத்தரப் பெண்ணும் நின்று யன்னல் ஊடாக இந்த வெளிநாட்டவர்களின் மீது தங்கள் பார்வையைக் குவிப்பதை அவதானித்தேன்.



அவர்கள் சத்திர சிகிச்சைக்காக யாழ்ப்பாணத்தில் இருந்து வந்திருப்பதை அவர்கள் சிறிய சம்பாசனை உணர்த்தியது. ‘அம்மா, அம்மா பாரண அதுகளின்ர கைகாலில் இருக்கிற நகைகளை!’ என்று அந்த நடுத்தர வயதுப்பெண் அந்த வயதாகிய மாதுவிடம் மெதுவாகக் கூறுவது என் காதுகளில் கேட்கிறது. ‘ஓம் மோன, அதுகள் வெளிநாட்டுக்காரர் போடுவினம்தானே!’ என்று பெருமூச்சு எறிந்தாள். என் நரம்புகளில் ஓடிக்கொண்டிருந்த இரத்தம் எல்லாம் ஒருதரம் வற்றிவிட்டதுபோன்ற ஒரு பிரமை எனக்கு. இப்படி எத்தனை பெருமூச்சுக்கள், அவலங்கள், வேதனைகள், சோதனைகள், இழப்புக்கள், மரணங்கள் என்பவற்றை எல்லாம் நம் மக்கள் இந்த மண்ணில் சந்தித்து இருக்கிறார்கள். சந்தித்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்தத் துயரம் தோய்ந்த இரத்தம் கலந்த வாழ்வுகளின் பேரில்தானே இந்த மானிடங்களெல்லாம் அந்நிய நாடுகளில் புகலிடம் கோரியவர்கள். தவிர்க்க முடியாதவாறு இந்த மண்ணோடு தம் வாழ்க்கையைப் பின்னிப் பிணைத்துவிட்ட இந்த மனித மனங்களை அந்த புலம்பெயர்ந்து, அந்நிய நாட்டில் அகதிகளாக, அடையாளம் அற்றவர்களாக வாழும் இந்த மானிடங்களால் புரிந்துகொள்ள முடியவில்லையே என்ற வேதனை உணர்வோடு மீண்டும் விடுதியின் அறைக்குள் முடங்கிக்கொள்கின்றேன்.

**பயணக் கட்டுரை**

பயணத்தால் சோர்ந்துவிட்ட என் உடலில் பசியில்லை. தண்ணீரைக் குடித்துவிட்டு மீண்டும் தூங்கிக்கொள்ள முயல்கின்றேன். தூக்கம் வரவில்லை. அன்று வெளியில் நடந்த சம்பவங்கள் மனதை அலைக்கழித்த வண்ணம் இருந்தன. அங்குள்ள கண்ணாடி மேசையில் அடுக்கி வைத்திருந்த புதினத் தாழ்களைப் புரட்டுகின்றேன். இலங்கைப் நாடாளுமன்றத் தேர்தல் களம் சுவாலைவிட்டு எரிந்து முடிந்து, சாம்பல் பூர்த்த திடலாய் அமைதியாய்க் கிடந்தது. அங்குமிங்குமாகச் சிறு சிறு புகை மண்டலங்களைத் தவிர வேறு இல்லை. மனம் பின்னோக்கிப் பாய்கிறது.

இம்முறை சந்திரிகா அறுதி இறுதி பெரும்பான்மை பெற்று நாடாளுமன்றம் அமைப்பது தவிர்க்கமுடியாது! கூட்டணிக்குச் சொந்தக் காலில் நின்று தேர்தல் களம் குதிக்க வக்கில்லை, புலிகளின் அனுசரணை பெற்று தேர்தல் கேட்கிறார்கள். அவர்கள் வீணாகத் தோற்கப் போகின்றார்கள் என்றும், புலிகளுக்குத் தமிழ் மக்கள் மத்தியில் சரியான எதிர்ப்பு இருக்கின்றது என்றும் தங்களை ‘யதார்த்தவாதிகள்’ ‘புத்திஜீவிகள்’ ‘மாற்றுக்கருத்துக் கூறுபவர்கள்’ என்று கூறிக்கொள்பவர்கள் கூறிய வாதப் பிரதிவாதங்களை ஒருதரம் இரைமீட்டுப்பார்க்கின்றேன். மாற்றுக் கருத்துக் கூறுபவர்கள் ‘யதார்த்தவாதிகள் நாங்கள்!! புத்தி ஜீவிகள் நாங்கள்’ என்று பெருமையுடன் கூறி, சாதாரண மக்களுக்குத் தவறான செய்திகளையும், முடிவுகளையும் சதா கொடுத்துக்கொண்டு, அந்த மாமேதைகளுக்கு நடந்துமுடிந்த தேர்தல் முடிவுகள் நல்ல பாடமாக அமையும் என்பதில் என்ன சந்தேகம் இருக்கமுடியும் என்று எண்ணியபடி மீண்டும் கண்களை மூட முயல்கின்றேன். முடியவில்லை. சுய உணர்வுகள் விழித்து இருக்கும்போது மனம் உறங்க நினைத்தால் அது முடியாத காரியமாகிவிடுகிறது என்று எங்கோ வாசித்த நினைவுகளும் குறுக்கே வராமல் இல்லை. கொழும்பில் ஒரு நாள் கூட நிற்க முடியவில்லை. வன்னிக்குப்போய் என் உறவுகளையும், ஏனையவர்களையும் உடன் சந்திக்க வேண்டும்போல் இருந்தது. கடந்த மார்கழி மாத்தில்தான் வன்னிபோய், யாழ். போய் அவுஸ்திரேலியா போயிருந்தேன். மூன்று மாதங்கள் கூட முழுமையாகத் தங்கவில்லை. மீண்டும் இலங்கை வரவேண்டிய தேவை ஏற்பட்டது. கொழும்பில் வந்து இறங்கியும் ஏதோ அந்நிய நாட்டில்தான் இன்னும் இருப்பதுபோன்ற ஓர் உணர்வு. படுக்கையை விட்டு எழுந்து, குளித்துவிட்டு உடுப்புக்களை மாற்றிக்கொண்டு வெளியில் வந்து விடுதி நிர்வாகியின் அறையில் போய் அமர்ந்துகொண்டேன். மிகவும் அன்பானவர், நிதானமானவர் அவர். ‘என்ன, ஏதேனும் உதவி உங்களுக்குத் தேவையா?’ என்றார். ‘ஆம் நான் வன்னி போக வேண்டும்’ என்றேன். அவர் ஆச்சரியத்துடன் ‘என்ன! இன்றுதான் வந்தீர்கள், உடன் போக நிற்கிறீர்கள்?’ என்றார். நான் சிரித்துவிட்டு, ‘போகவேண்டி இருக்கிறது’, என்றேன். அவர் என் மனநிலையைப் புரிந்தவராக, உடனே தொலைபேசியில் தொடர்புகொண்டு அந்த இரவே வன்னி போவதற்கான ஒழுங்குகளைச் செய்து தந்தார். கொண்டு சென்ற பைகளைப் பூட்டி, அங்குள்ள பணியாளர்களிடம் கொடுத்துவிட்டு, ஒரு சிறு பையில் இரண்டொரு உடுப்புக்களையும் மற்றும் சில அத்தியாவசியப் பொருட்களையும் போட்டுக்கொண்டு, விருந்தினர் அறையில் வந்து அமர்ந்துகொண்டேன். குறித்த நேரத்தில் வான் வந்து நின்றது. முன் இருக்கையில் வசதியாக அமர ஒழுங்கு செய்து தந்தார்கள். ஆயிரம் ரூபாவும் கட்டணமாக வாங்கிக்கொண்டார்கள். கொழும்பில் பல இடங்களுக்கும் சென்று பிரயாணிகளை அவர்கள் வீட்டுவாசல் மட்டும் சென்று ஏற்றினார்கள். 12 ஆசனங்கள் கொண்ட வான் வெள்ளவத்தையிலிருந்து காலி வீதிவழியாகச் சென்று - கொழும்பு மாநகரைக் கடந்து விரைந்து சென்றுகொண்டிருந்தது. ‘இண்டைக்கு நான் குறுநாகல் வழியாகத்தான் போகப்போறன்’ என்று சாரதி கண்ணாடியினூடாக பிரயாணிகளைப் பார்த்து கூறினார். எனக்கு எதுவித பிரச்சினையும் இருக்கவில்லை. ஒரு வயோதிபர் ‘ஏன் தம்பி புத்தளம் பாதை சுகமல்லே?’ என்றார். ‘அப்பு உங்களுக்கு விசயம் தெரியாதே?’ என்று சாரதி மிகவும் சாதாரணமாகக் கூறியபடி, ‘அப்பு நேற்று இரவு புத்தளம் வீதியால் போன பஸ்களை காடையர்கள் மறித்து - சாரதிக்கு அடித்து மண்டையை உடைத்துவிட்டு பல இலட்சக்கணக்கான பணத்தையும், நகைகளையும் கொள்ளையடித்து எல்லே போட்டினம்.’ பஸ்சில இருந்த எல்லோரும் திடு திடு என முழிப்பது தெரிகிறது. நாட்டுநிலைமை தெரியும், ஏன் இவ்வளவு தொகைப் பணத்தையும், நகைகளையும் இவர்கள் இரவு நேரங்களில் போட்டுக்கொண்டு போகிறார்கள் என்று மீண்டும் நினைத்தபடி அமைதியாகக் கண்களை மூடிக்கொண்டேன்.

*(பயணம் தொடரும்)*

INDIAN ASTROLOGER

# சாய்பாபா

ॐ

# Laxmi Kanthswamy

**பிரபல இந்திய ஜோதிடர் கைரேகை நிபுணர் இந்தியாவிலிருந்து இங்கே வருகை தந்துள்ளார்.**

எம்மிடம் வருவதால் உங்கள் சகல பிரச்சனைகளும் தீர்த்து வைக்கப்படும். 99 வீதம் சரியாக கணித்துச் சொல்லப்படும். உங்கள் நிகழ்காலம், வருங்காலம், வியாபாரம், கல்வி, குடும்ப விபரங்கள், தேகசுகம் எல்லாம் சரியாக கணித்துச் சொல்லப்படும். அத்துடன் சாந்தி பூஜா, இலட்சுமி பூஜா பிரார்த்தனைகளும் செய்து தருவோம்.கண் திருஷ்டி, சூனியம் அகற்றுதலும் செய்து தருவோம்.

**சந்திக்குமிடம்:**

**(West London) South hall**

**Contact:**

**Tel: 07932724065 / 07939613067**

# CEFT FORMATION

Organisme de Formation

பிரெஞ்சு மொழியை நன்றாக பேசவேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களா?

பிரெஞ்சு கல்வி அமைச்சின் அனுசரணையுடன் இயங்கிவரும் **Ceft Formation** பாடசாலையில்

புதிய ஆரம்ப பிரஞ்சு வகுப்புக்கள் **Juin 5ம்** திகதி முதல் ஆரம்பம்!!

***Français Langue Etrangère FLE***

** பிரெஞ்சு ஆரம்ப வகுப்பு

** இடைத்தர வகுப்பு

** உயர்தர வகுப்பு

கற்பிக்கபடவுள்ள பாடங்கள்

Français orale - écrit ( Conversation )...
Vie pratique et vie quotidienne.................
Connaissance de l'environnement.............
socioprofessionnel Relations sociales

ஆகிய 3 பிரிவுகளாக வகுப்புக்கள் வாரத்தில் 3 நாட்களாக சனி ஞாயிறு செவ்வாய் வியாழக்கிழமைகளில் பி.ப **3h30** மணிமுதல் **5h30** மணிவரை நடைபெறும்.

## SPECIAL COMPUTER வகுப்புகள் ஆரம்பம்!!

மிக இலகுவாக கணனி உலகை புரிந்து கொள்ள உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!!

புதிய **Computer** வகுப்புக்கள் : **JUIN 5** திகதி முதல் ஆரம்பம்!!

நேரம் : தினந்தோறும் பகல் அல்லது பிற்பகல் நேரங்களில் உங்கள் வசதிப்படி கற்றுக்கொள்ளலாம்!! வகுப்பு இறுதியில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் (Certificat de Formation) வழங்கப்படும்.

Course : A Windows XP & 98 (ஆரம்பவகுப்பு **30h**)

**Introduction to System Components and Operating Systems**
- Introduction to Networking Technology
- Basic DOS Commands
- Operating System : Windows 98, Windows XP
- Introduction to Internet and Usages of Browsers

**Course : B Word (30h)** — **Course : C Excel (30h) (25h)**

**Introduction to Windows ...........Introduction to Windows**
**Microsoft Word ( Office )...........Microsoft Excel ( Office )**

**Course : D Power Point** — **Course: E Hardware**

**Introduction to Windows...........System Assembling ( Hardware )**
**Microsoft Powerpoint........... Software Installations**

மாணவர்கள் அனைவருக்கும் அதிவேக internet இணைப்புடன் தனித்தனி PC Computer வழங்கப்படும்

நேரடியாக தொடர்புகொள்ள விரும்புபவர்கள் தொலைபேசியில் உங்கள் வருகையை தெரியப்படுத்துங்கள்.

**81 rue de la Plaine 75020 PARIS - METRO : MARAICHERS**

**Tel : 01 41 14 94 21 Site internet : www.ceftformation.com**

புதிய computer ஒன்றை மிக மலிவு விலையில் தவணைமுறையில் வாங்க விரும்புகிறீர்களா?.....

உடன் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது www.microceft.com

# பூபாளம்

## பொத்தகசாலை

**உங்களுக்குத் தேவையான அனைத்துவகையான பொத்தகங்களையும் ஒரே இடத்தில் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.**

உங்களுக்குத் தேவையான நூல்களை குறுகிய நாட்களுக்குள் பெற்றுத் தருவோம்.

தமிழீழ விடுதலைப் பாடல்கள் அடங்கிய CDக்கள், மற்றும் தமிழீழத்தில் வெளியாகும் நூல்களையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

**நூலகம்! நூலகம்!! நூலகம்!!!**

**தமிழ் மக்களுக்கோர் இனிய செய்தி!**

பூபாளம் பொத்தகசாலையுடன் இணைந்த புதிய சேவை. பல்துறை சார்ந்த 2000 க்கும் மேற்பட்ட பொத்தகங்களை வாசிப்பதற்கான அரியவாய்ப்பு. பூபாளம் நூலகத்தில் இப்பொழுதே நீங்களும் ஒரு அங்கத்தவராகி உங்களுக்குப் பிரியமான பொத்தகங்களை வாசித்துப் பயன்பெறுங்கள்.

**பூபாளம்** பொத்தகசாலை

***22, Rue Perdonnet, 75010 Paris, France.***
***Tél: 01 40 05 95 15***

# பூபாளம்

## *Informatique*

# ORDINATEUR COMPLET


## (OCCASSION)

சிறப்பு மலிவு விற்பனை

## à partir de 150 Euro

**Ecran 15"**
**u Centrale PII, PIII ou Celeron**
**Claviet**
**Souris**
**Haut Parleur (150 watts)**

விபரங்கட்கு தொடர்புகொள்ளவும்.



## 'முரசு' குறுக்கெழுத்துப்போட்டி

**இல: 03**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | 3 | ■ | 4 |
| 5 | | ■ | 6 | | | ■ | |
| | ■ | 7 | | ■ | | 8 | ■ |
| | ■ | 9 | | | | | ■ |
| 10 | | ■ | | ■ | ■ | | 11 |
| 12 | | 13 | ■ | 14 | | | |
| ■ | ■ | | ■ | | ■ | | |
| ■ | 15 | | | | ■ | ■ | |

### இடமிருந்து வலம்

1. நிலத்தில் பலமுறை உருட்டப்பட்ட பின்னரே இதன் முள் முனைகள் தேய்ந்து இதனைத் தூக்கிச் செல்வார் தோள்களை உறுத்தா. முக்கனிகளுள் பெரிய கனி.
5. இனிய சொற்கள் இருக்கும்போது அவற்றைவிட்டு கடுஞ் சொற்களைக் கூறுதல் என்பது இது இருக்கக் காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றது என்று கூறுகிறது திருக்குறள்.
6. உச்சி மீது வான் இடிந்து வீழ்கின்றபோதிலும் இது இல்லையென்று பாரதி முழங்கினான். *(திரும்பியுள்ளது)*
7. மாசி மாதத்தில் பெய்யும் இது உடம்பெல்லாம் ஊசி போல் குளிரால் குத்துமாம். *(திரும்பியுள்ளது)*
9. தங்கம் முதலியவை படிந்து நிறைந்திருக்கும் அடி நிலப்பகுதி.
10. மருத்துவப் பயன்கள் கொண்ட இதில் ஊட்டச்சத்துக்கள் பல உள்ளன. அத்தோடு இதில் மெல்லிய சக்கைப் பொருளான 'செல்லுலோஸ்' அதிகமாக இருப்பதால் இது மலச் சிக்கலைப் போக்குகிறது.
12. சில தாவரங்களிலிருந்தோ சில விலங்குகளிலிருந்தோ எடுத்துப் பக்குவப்படுத்தித் தயாரிக்கப்படும் மேல் பூச்சு மருந்து.
14. தாயகத்தில் இதனைப் பனையிலிருந்து செய்வார்கள். கருப்புக்கட்டி என்ற காரணப் பெயரைக் கொண்ட இது மருவி இப் பெயர் கொண்டும் அழைக்கப்படுகிறது.
15. தன் குழந்தையைத் தூங்க வைப்பதற்காக, அதனைத் தொட்டிலிலிட்டு அதன் தாயார் பாடும் பாட்டு இது. *(குழம்பியுள்ளது)*

### மேலிருந்து கீழ்

1. குருஷேத்திரப் போரின்போது அர்ச்சுனனுக்குக் கிருஷ்ணன் போதிக்கும் போதனையை இப்படித்தான் அழைப்பர்.
2. தொப்புள் கொடிமூலமே தாயின் கருப்பையிலுள்ள கரு உணவையும் பிராணவாயுவையும் பெற்று கழிவுப்பொருட்களையும் வெளியேற்றுகிறது. தாய்மைக்கான தொப்புளில் அல்லவா தரையில் விடும் இவ்விளையாட்டுப் பொருளை இப்பொழுது சினிமாக்காரர் விடுகின்றார்கள்!
3. குழியில் செங்குத்தாக நிறுத்தப்படும் மரம், உலோகம் முதலியவற்றால் ஆன தூணை இப்படியும் அழைக்கலாம். *(குழம்பியுள்ளது)*
4. இது பிரகாசமாகச் சுடர்விட்டெரிய எண்ணெய் வேண்டும்.
8. எதாவதொரு விடயம் அனைவராலும் அறியப்படும் ஒரு நிலையைக் குறிக்கும் சொல். மக்கள் கண்டுகளிக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறும் பொது இடத்தையும் இச்சொல் குறிக்கும்.
11. மா.பொ.சிவஞானக்கிராமணியாரை இதன் செல்வர் என்றே அழைப்பர். *(திரும்பியுள்ளது)*
13. இது ஒத்திசையினால் உண்டாகும் ஓசை நயம். *(திரும்பியுள்ளது)*
14. தறி. கத்திரி போன்ற சொற்களின் பொருள் கொண்ட சொல்லிது.

**போட்டி விபரங்கள்**

- *13.06.04 திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறுபவையே போட்டியில் ஏற்றுக்கொள்ளப்படும்.*
- *சரியான விடையெழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசில் வழங்கப்படுவதுடன், சரியான விடை எழுதியவர்களின் பெயர் விபரமும் வெளியிடப்படும்.*

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி

``குறுக்கெழுத்து போட்டி``

**POOBALAM - 22, Rue Perdonnet, 75010 Paris, France.**

**இல: 02**

**விடை**

முரசு குறுக்கெழுத்துப் போட்டி இல.2 இல் சரியான விடையெழுதி பரிசு பெறும் வாசகர்

செல்வி கோமதி
75020 Paris,
France.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | ட | கு | ■ | 2 தே | ர் | 3 த | ல் |
| ல் | ■ | ■ | 4 து | ம | ■ | ழி | ■ |
| லா | ■ | 5 டி | ■ | 6 ல் | லை | வ | ■ |
| 7 ங் | ர | கு | கு | ■ | ■ | ரை | 8 ந |
| கு | ■ | னை | ■ | 9 அ | ப | ப் | ம் |
| 10 ளி | 11 கை | ம | ■ | ல் | ■ | பா | பி |
| ■ | ங் | ■ | 12 ப | லி | ■ | தை | க் |
| 13 ன் | கொ | ல | ல் | ■ | 14 ப | ல | கை |

தயாரிப்பு:
கந்தையா
நவரேந்திரன்

# பிரான்சில் அன்னை பூபதி நினைவு நிகழ்வு





தேச விடுதலைக்காய் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த தேசத் தாய் அன்னை பூபதியின் 16வது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு பாரிஸ் மாவட்டத்தின் கார்ஜ் லே கோணேஸ் நகரத்தில் கடந்த 15.05.2004 சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

பிரான்ஸ் தமிழ் பெண்கள் அமைப்பினரால் செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு, தேசத்தாயின் ஈகத்தை நினைவு கூர்ந்து தேச விடுதலைக்கு வலுவூட்டுவதாய் அமைந்திருந்தது.

திருமதி மீரா மங்களேஸ்வரன் அவர்களின் மாணவிகளின் நடனமும், செல்வி சர்மிளா சர்வேஸ்வரனின் நடன நிகழ்வும், அவரது தயாரிப்பில் அவரது மாணவிகள் நிகழ்த்திய நடன நிகழ்வுகளும் ஏனைய கலை நிகழ்வுகளும் நிகழ்ச்சிக்கு மெருகூட்டுவதாக அமைந்திருந்தன.

திருமதி லீனா ஜெயக்குமாரின் தனி நடிப்பு - காணாமல் போனவர்களின் உறவினர்கள் படும் அவலத்தை எடுத்துக்காட்டியது.








# பாரிசில் தமிழர் நிகழ்கலைக் கூடம்

29.05.2004 அன்று மாலை வில்தனூஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. சிவகுரு தலைமையில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் 'தமிழர் கலைக்கூடம்' அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், பொதுமக்களின் கருத்துக்கள் கவனம் கொள்ளப்பட்டதுடன் சிறப்பு உரையை கவிஞர் கி.பி. அரவிந்தன் அவர்களும், நிகழ்கலைப் பட்டறைப் பயிற்சியாளர் திரு.சுபாஸ் அவர்களும் வழங்கினர். புலம்பெயர் வாழ்வில் இத்தகைய முயற்சியின் அவசியம் பற்றி திரு. முகுந்தன் அவர்கள் எடுத்துரைத்தார்.

புலம்பெயர்ந்து வாழும் ஐரோப்பிய மண்ணில் இப்படியோர் அறிவியல் கூடம் உருவாக்கப்படுவது எதிர்காலத்தில் உறுதியான தலைமுறையொன்று வெளிப்படுவதற்கான அறிகுறியைக் காட்டுவதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மானிடத்தின் பேறுகளைக் காவிச்செல்லும் பாதைதான் கலை. விலங்கிலிருந்து பிரிந்தவனாகிய மனிதன் காலங்காலமாக கலைகளின் பதிவுகளை எங்களின் முதுசொங்களாக்கியே பயணித்தான். மானுட நேசிப்பைக் கலைகள் பொத்தி வளர்க்கின்றன. மனிதவளத்தின் பன்முகத்தன்மைகளை/ ஆற்றல்களை வெளிக்கொணர்வதனூடாக தனிமனித ஆளுமை வலுவூட்டப்படுகிறது. ஆனால் கலைகள் பற்றிய தெளிவான புரிதல்களில்லாத இன்றைய இயந்திர சூழலில், கலைப் பற்றாளர்களும், ஆர்வலர்களும் எடுத்துவரும் முயற்சிகள் எதிர்நீச்சல் பணியாகவே அமைகின்றன. தகவற்தொழில்நுட்ப மலர்ச்சி யுகத்தில் எதையும் வீட்டினுள் அதுவும் கண்முன்னாலுள்ள குறுந்திரையில் பார்க்கத் தொடங்கிய மனிதன், சகமனிதர்களுடனான தொடர்பாடல்களில் இருந்து விலகித் தனிமனித இயந்திரமாக்கப்பட்டு சுயசிந்தனைகளின் விரிவாக்கலை வளமூட்ட முடியாதவனாகத் தவிக்கிறான். இதை மீறி அசைவுறும் பணி இன்றைய காலகட்ட மானுடப்பற்றாளர்களின் கட்டாயமானதாகிறது.

ஒரு கனவின் நனவாக மெல்லத் தடம் பதிக்கிறது 'தமிழர் நிகழ்கலைக் கூடம்'. தமிழன் பூமிப்பந்தின் பல பாகங்களில் வாழத்தலைப்பட்டுள்ள இருபத்தியொராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவனுடன் பிடுங்குண்டு வந்த வேர்களும் அதனுடன் ஒட்டிய மண்ணும் இன்று மீளுருவாகிப் புதிய குருத்துகளுடன் மிளிரத் தொடங்கியுள்ளன. இது சென்ற நூற்றாண்டின் தமிழ்க் கவியின், 'எட்டுத் திக்கெங்கும் சென்று கலைச்செல்வம் கொணர்ந்திடுவீர்' என்ற கனவினை நிறைவாக்கும் அரிய சமிக்ஞைகளாகின்றன. இக்காலகட்டத்தில் நடமாடும் பேறு பெற்றவர்களாகிய நாம் எம் முன் விரியும் பணியின் தேவையை நன்கே உணரவேண்டியவராகின்றோம்.

24.04.2004 அன்று வில்தானூஸ் தமிழ்ச்சோலையில் நிகழ்த்தப்பட்ட 5வது ஆண்டுவிழா நிகழ்வில் இங்கு வளரும் அடுத்த தலைமுறைச் சிறார்களால் நிகழ்த்திக் காட்டிய -பத்துமா- என்ற நிகழ்கலை நாடகம் தமிழ்ச் சமூக ஆர்வலர்களின் கவன ஈர்ப்பைப் பெற்றது. புலம்பெயர்ந்த நிலையில், வாழத்தலைப்பட்டுள்ள அடுத்த தலைமுறையினருக்கான உற்சாகமான வளர்ச்சிக்கு இந்தவகை முயற்சிகளின் தொடர்பணியின் அவசியம் நன்குணரப்பட்டது. இதனைச் சமூக அக்கறையுடன் 01.05.2004 அன்று பரிசீலித்த வில்தானூஸ் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கிய பெருமைமிக்க அங்கீகரிப்பானது பாரீஸில் தமிழர் நிகழ்கலைக் கூடமாக உருவம் பெற்றுள்ளது.

ஏதிர்வரும் யூன் 2004 முதல் மாதாந்தம் இரு சனிக்கிழமைகளில் தலா இரண்டு மணித்தியாலங்கள் கொண்ட முறைசாரமுறைமைப் பயிற்சிநெறி ஆரம்பமாகின்றது. இப்பயிற்சியில் கலந்து கொள்வோருக்கு வயதெல்லை கிடையாது. வருடத்தில் 48 மணித்தியாலங்களைக் கொண்டதான இப்பயிற்சி 5 வருட தொடர் பயிற்சியின் பின் சான்றிதழுடன் நிறைவுறும். கலைப் பட்டறை, தேவைக்குரிய சிறப்பு மொழிப்புலமைப் பட்டறை, மொழிபெயர்ப்பு / மொழி தழுவல் பட்டறை, ஆக்கங்கள்- புதியன புனைவுப் பட்டறை, இசை, பாடல் பட்டறை, அரங்கங்கள் என பல்வேறு பயிற்சிகளின் தொகுப்பாக ஆற்றலாளர்களால் நடாத்தப்படும்.

பயிற்சி: திரு பாலகணேசன் (சுபாஸ்), தொடர்பு: திரு. கிறிஸ்டி பாஸ்கரன் (கலைப்பொறுப்பாளர்- புனர்வாழ்வுக்கழகம்- வில்தானூஸ்), இணைப்பு: திரு முகுந்தன் (வள்ளுவர் படிப்பகம்), ஆலோசனை: கவிஞர் கி.பி. அரவிந்தன் (அப்பால் தமிழ்) வருகையையும் - ஆலோசனைகளையும் - கருத்துகளையும் - ஆதரவுகளையும் நாடியுள்ளோம்.

# நோர்மண்டி தரையிறக்கத்தின் 60வது ஆண்டு விழா

# முக்கிய தலைவர்கள் பங்கேற்கிறார்கள்



இரண்டாம் உலகப்போர் காலத்தில் பிரான்சை ஆக்கிரமித்திருந்த ஜேர்மன் சர்வாதிகாரி ஹிட்லரின் படைகளைத் தோற்கடிப்பதற்காக அமெரிக்கா தலைமையிலான நேச நாடுகளின் கூட்டுப்படைகள் பிரான்சின், நோர்மண்டி கடற்கரையில் வந்து தரையிறங்கிய உலகப் புகழ்பெற்ற நிகழ்வின் 60வது ஆண்டு நினைவு விழா 06.06.2004 அன்று (06.06.1944ம் ஆண்டு தரையிறக்கம் இடம்பெற்றது) நோர்மண்டி கடற்கரையில் பிரமாண்டமான முறையில் இரண்டு வாரங்களுக்கு நடைபெறவுள்ளன.

இந்த நினைவு விழாவில் கலந்துகொள்வதற்கென அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ், ரஷ்ய அதிபர் விளதிமீர் புட்டீன், ஜேர்மன் அதிபர் ஜெஹாட் ஸ்ருடர் உட்பட 12ற்கும் மேற்பட்ட உலக நாட்டுத் தலைவர்கள் பங்குபற்ற இருக்கின்றனர். ரஷ்யாவின் ஸ்ராலின்கிராட் தோல்வியைப் போல இந்த நோர்மோண்டித் தரையிறக்கமும் ஹிட்லரின் நாசிப் படைகளுக்குக் கிடைத்த மிகப்பெரிய தோல்வியாகும். இந்தத் தரையிறக்கம் நாசிப் படைகளைப் பிரான்ஸ் மண்ணில் இருந்து விரட்டியடிப்பதற்கும் சர்வாதிகாரி ஹிட்லரின் அதிகார வெறியை முடிவுக்கு கொண்டுவருவதற்கும் அடித்தளம் இட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நோர்மோண்டித் தரையிறக்கம் நிகழ்ந்தபோது பிரெஞ்சுப் படைகளுக்கு ஜெனரல் சாள்ஸ் து கோல் தலைமை தாங்கினார். இந்தத் தரையிறக்கம் நடந்த காலத்தில் அந்த நோர்மண்டிக் கடற்கரைப் பிரதேசத்தில் 17 டிவிசன்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் நாசிப் படைகள் நிலைகொண்டிருந்தன.

ஏறத்தாள 4000 துருப்புக்காவிக் கப்பல்கள், 700 போர்க் கப்பல்கள் மற்றும் பத்தாயிரம் விமானங்கள் சகிதம் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் நேச நாட்டுப்படைகள் இங்கு தரையிறக்கப்பட்டன. ஒவ்வொரு துருப்புக்காவி கப்பலில் இருந்தும் 36 பேர் வீதம் 19 வினாடிகளில் நேசநாட்டுப்படையினர் தரையிறக்கப்பட்டனர். 18 ஆயிரம் போர் விமானங்களிலிருந்து பரசூட் மூலம் தரையிறக்கப்பட்டனர். இந்தப் பரசூட் படையினரில் சரி அரைவாசிப் பேர் இந்தத் தரையிறக்கத்தின் போது நாசிப் படைகளால் கொல்லப்பட்டு விட்டனர்.

இந்தத் தரையிறக்கம் நடந்து 11 மாதங்கள் தொடர்ச்சியாக நடந்த சண்டைகளின் பின்னர் நாசிப் படைகள் முற்றாக பிரான்ஸ் மண்ணில் இருந்து விரட்டியடிக்கப்பட்டன.

ஆனையிறவு படைத்தளத்தைத் தகர்ப்பதற்காக விடுதலைப் புலிகள் மேற்கொண்ட குடாரப்புத் தரையிறக்கத்தை இந்த நோர்மண்டித் தரை இறக்கத்துடன் போரியல் வல்லுநர்கள் ஒப்பிடுவது வழக்கம்.




# பொழுது

# ஆய்த எழுத்து மணிரத்தினத்தின் மற்றுமொரு தோல்வி

மணிரத்தினம் ஒரு திரைப்படத்தைப் படைக்க முயன்றார். அது இடைவேளை வரைதான். இறுதியில், 'செய்ய' முயன்றார், அல்லது ஒப்பேற்றி முடித்தார். இதுதான் மணிரத்தினத்தின் ஆய்த எழுத்து திரைப்படம் பற்றிய சுருக்கமான வரைபு.இன்னும் சொன்னால் மணிரத்தினம் திரைப்படத்தை எப்படி முடிப்பது என்று திரு திருவென முழித்தார், அல்லது கையை பிசைந்து கொண்டு நின்றார் என்றும் கூடச் சொல்லலாம். ஆனால் அவர் அவ்வாறு முழித்ததையோ நின்றதனையோ நாம் காணவில்லை. ஆதலினால்தான் முதல் வசனத்தை எழுதினேன்.

திரைப்படப் பிரதியின் பலம் என்பதுதான் ஒரு திரைப்படத்தின் வலிமை என்பதனை மேலும் மேலும் அழுத்திச் சொல்லத்தேவை இல்லை. அது கண்கூடு. பாசமலர், பாலும் பழமும் என்று பீம்சிங் அவர்களின் வெற்றியோ, கல்யாணப்பரிசு, நெஞ்சில் ஓர் ஆலயம். என்று சிறீதர் அவர்களின் வெற்றியோ எஸ். பாலச்சந்தர், பந்துலு, கே.பாலச்சந்தர், பாரதிராசா, மகேந்திரன், பாலுமகேந்திரா போன்றோரின் வெற்றியெல்லாம், பெரும்பாலும் திரைப்படப்பிரதியின் வலிமையிலேயே தங்கியிருந்தது. இதற்காக இவர்களெல்லாம் நெறியாளும் ஆளுமை இல்லாதவர்கள் என்றில்லை. இன்னும் சொன்னால் திரைப்படப் பிரதியைத் தெரிவு செய்வதும், அதனை வலுவுள்ளதாக ஆக்குவதும் கூட நெறியாளரின் ஆளுமையிலேயே தங்கியுள்ளது.

ஏன் மணிரத்தினத்தின் ஆரம்பகாலத் திரைப்படங்களான பகல்நிலவு, இதயக்கோவில், மௌன ராகம், நாயகன், தளபதி போன்ற திரைப்படங்கள் கூட வலுவான பிரதிகளைக் கொண்டிருந்தன. மேலும் சொன்னால் வலுவான பிரதியைக் கொண்டிருந்த திரைப்படங்களே வெற்றியையும் பெறுகின்றன. வசந்த மாளிகை, உலகம் சுற்றும் வாலிபன், சகலகலா வல்லவன், பாட்சா போன்ற வர்த்தக ரீதியான திரைப்படங்களாக இருந்தாலென்ன அல்லது உன்னைப்போல் ஒருவன், யாருக்காக அழுதான், திக்கற்ற பார்வதி, உதிரிப் பூக்கள், சந்தியாராகம் போன்ற கலைத்துவத் திரைப்படங்களாக இருந்தாலென்ன அவற்றின் வெற்றி பிரதியின் பலத்திலேயே தங்கி உள்ளது. பிரதி என்பது பிசிறில்லாமல், குழப்பம் இல்லாமல், மறைபொருள் அதிகம் கொண்டிராமல் புத்திசாலித்தனத்தைப் பறைசாற்றாமல் தெளிவாக, இயல்பாக எழுந்த பிரதிகளே பலம் பொருந்தியவை. பல திரைப்படங்கள் இதற்கு உதாரணம்.




ஆய்த எழுத்து என்ன மாதிரியான திரைப்படம்? வலுவிழந்த பிரதி. மணிரத்தினம் நிறையவே குழம்பிப்போயுள்ளார். மணிரத்தினத்தின் அரசியல் அவரைப் போட்டு அலைக்கழிக்கிறது. ஆய்த எழுத்து திரைப்படத்தில் இது தெட்டெனத் தெளிவாகிறது. அரசியல் தெளிவாகாத வரைக்கும், அரசியலில் சரியான நிலைப்பாடு எடுக்காத வரைக்கும் ஆகக் குறைந்தது மானுட விரோத அரசியலைக் கையாளும் வரைக்கும் அரசியல் திரைப்படம் எடுத்தல் சாத்தியமில்லை. அது செழுமையாக வருதலும் சாத்தியமில்லை. ரோஜா திரைப்படத்தின் நாயகன், அப்பாவி என்றும், அரசியலே தெரியாதவன் என்றும் அவனைக் காஷ்மீர் தீவிரவாதிகள் வீணாகக் கடத்திவிட்டார்கள் என்றும் சித்திரம் தீட்டமுனைந்த மணிரத்தினம் தீவிரவாதிகள் இந்தியத் தேசியக்கொடியினை எரித்த போது அந்த நாயகன் அக்கொடியினைத் தனது உடலில் சுற்றி, உருண்டு அணைக்க முயன்றபோது, மணிரத்தினம் தீட்டமுயன்ற சித்திரமும் எரிந்து போயிற்று. இவ்வாறு பம்பாய், இருவர் உயிரே, கன்னத்தில் முத்தமிட்டால் போன்ற திரைப்படங்களிலும் மணிரத்தினத்தின் வஞ்சக அரசியலை நாம் காணலாம். தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகள் அல்ல. அவர்கள் பயங்கரவாதிகள் என்று சொல்கின்ற சிறீலங்கா, இந்தியா, அமெரிக்கா அரசுகளின் கருத்தை மணிரத்தினம் கன்னத்தில் முத்தமிட்டால் திரைப்படத்தில் காட்சிப்படுத்தியிருந்தார். இதுதான் மணிரத்தினத்திற்குத் தெரிந்த அரசியல். மானுடவிரோத அரசியல். இன்னும் சொன்னால் இந்திய மேலாதிக்க வாதங்கொண்ட பிராமணியத்துவம் சார்பான அரசியல். இதற்கு மிகச் சிறந்த உதாரண நபர்களாக அரசியல் துறையில் சுப்பிரமணிய சுவாமி போன்றோரும், ஊடகத் துறையில் சோ, இந்து என்.ராம் போன்றோரும், ஆன்மீகத்துறையில் சாய்பாபா சங்கராச்சாரியார் போன்றோரும் திகழ்கின்றனர். திரைப்படத்துறையில் அல்லது காட்சிப்படுத்தல் தன்மையில் மணிரத்தினம், ஷங்கர் போன்றோர் விளங்குகின்றனர்.

இவ்வாறு நான் சும்மா சொல்லிவிடவில்லை. தகுந்த ஆதாரங்களுடனேயே சொல்கின்றேன். ஆயினும் ஆதாரங்களைத் தருவதோ, அவைபற்றி விபரிப்பதோ இங்கு என் நோக்கமல்ல. ஆய்த எழுத்து திரைப்படம்பற்றி, அதன் தோல்வி பற்றிய பதிவே இங்கு என் நோக்கம். அதன் அரசியலையும் சொல்லவேண்டும். ஆய்த எழுத்து திரைப்படத்தின் கதையினை இங்கு சொல்லி மினக்கெட முடியாது.

மூன்று இளைஞர்கள். இன்பா- முரடன். சடக்கென ஆத்திரம் கொள்பவன். அரசியல் வாதியின் கையாள்.

மைக்கேல்- மாணவத் தலைவன். சமூகத்தில் அக்கறை கொண்டவன். அர்யுன் பெண்களை வசீகரிப்பதில், காதலில் நாட்டம் கொண்டவன். வெளிநாட்டு மோகமும் கொண்டவன். இன்பா மைக்கேலைக் கொல்ல முயல்கின்றான். அர்யுன் அதனைக் காண்கின்றான் இப்படிப் போகின்றது கதை.

வெறுமனே சமூக சீர்திருத்தவாதி ஒருவனுக்கும், முரடன் ஒருவனுக்கும் இடையிலான முரண்பாடே இத்திரைப்படம் என்று சொல்லிவிட்டுப் போய்விடலாம். ஆனால் இதனைச் சொல்கின்றவர் மணிரத்தினம் என்பதும், சொல்லப்பட்ட விதமுமே நம்மை ஐயுறவுக்கு ஆளாக்குகின்றது. இதில் வருகின்ற அரசியல்வாதி *(நடித்திருந்தவர் பாரதிராஜா)* கறுத்த தேகம் கொண்டவர். எந்த நேரமும் கறுப்புச்சட்டை அணிந்திருக்கின்றார். இருமுறை வெள்ளைச் சட்டையணிந்த போதிலும் இரண்டு முறையும் அந்த வெள்ளைச் சட்டையைக் கழட்டுகின்றார். இப்படியெல்லாம் பார்க்க வேண்டுமா என்று நீங்கள் கேட்பது புரிகின்றது.



ஆனால் மணிரத்தினத்தின் திரைப்படங்களில் அப்படிப் பார்க்க வேண்டும். மணிரத்தினம் காட்சிப்படுத்துகின்ற அரசியல் வஞ்சகம் நிறைந்தது. இந்த அரசியல்வாதி யாரை அல்லது எந்த அரசியலைக் குறிக்கின்றது. இந்தக் கறுப்புச்சட்டை எதைக் குறிக்கின்றது என்பது மிகத் தெளிவானது. ஈ வே ரா பெரியர் கறுப்புச் சட்டை அணிந்திருந்தார். திராவிட அரசியலில் ஈடுபட்டோர் அநேகம் பேர் கறுப்புச்சட்டை அணிந்தனர். ஆகமிஞ்சினால் கறுப்புச்சால்வையாவது அணிந்தனர். வைகோ நம் கண்ணுக்கு முன் உதாரணமாவார். பிராமணியம் கறுப்பு நிறத்தை அமங்கலம் என்று தள்ளிவைத்து, ஒதுக்கி வைத்ததற்கு எதிர்ப்புக்காட்டி அடையாளமாக, கலகக் குரலாக கறுப்புச்சட்டை இயக்கம் எழுந்தது. நடிகர் கமல்காசன் கூடப் பெரியார் மீது கொண்ட தீவிர ஈடுபாட்டால் முக்கியமான விழாக்களில் கறுப்புச் சட்டை அணிந்தே செல்வார். விருமாண்டி திரைப்படத்திலும் கறுப்புச்சட்டை அதிகம் பயன்பட்டது. இந்தப் பின்னணியில்தான் ஆய்த எழுத்தின் மோசமான வஞ்சகத்தனமான அரசியல்வாதியின் கறுப்புச் சட்டை நம் கண்ணை உறுத்துகின்றது. இந்த அரசியல்வாதிகளால் வட இந்தியா செழிப்புற வைக்கப் படுவதனையும், தென் இந்தியா சீரழிக்கப்படுவதனையும் விமர்சிக்க 'வடக்கு வாழ்கின்றது தெற்கு தேய்கின்றது' என்று தி.மு.க. முன்வைத்த கோசத்தை இந்தக் கறுப்புச்சட்டை அரசியல்வாதி அலங்காரத் தமிழில் மேடையில் பேசுகிறான். அது மாத்திரமன்றி அதிக பாராளுமன்ற உறுப்பினர்களை அனுப்பி, ஆட்சியைத் தீர்மானிக்கின்ற தி.மு.க. வின் பங்கும் இதே அரசியல் மேடையில் பேசப்படுகின்றது. இங்கு மணிரத்தினத்தால் அவை காட்சிப்படுத்தப்பட்டவிதம் மிகவும் கிண்டலுக்கு, நக்கலுக்கு உரியது. எழுதுவதில் வல்லவரான, பிராமணிய இயல்புகொண்ட சுஜாதா வசனத்தில் நக்கல் கூர்மையுடன், நளினத்துடன் எழுதியிருந்தார்.

மணிரத்தினம் அல்லது சங்கர் ஆகிய நெறியாளர்கள் எப்பொழுதும் தமிழ்த் தேசிய அரசியலைக் குறிவைத்துத் தாக்குவதிலேயே கவனமாய் இருக்கின்றார்கள். அதன் காரணம் என்ன? அதனைப் புரிந்துகொள்வது ஒன்றும் கடினமல்ல. பிராமணியத்தை, இந்திய மேலாதிக்க வாதத்தை உறுதிப்பட எதிர்த்து நிற்பது எப்போதும் தமிழ்த் தேசியமே. இதனை ஈ வே ரா பெரியார் திராவிடத் தேசியம் என வரையறை செய்தார். ஆயினும் திராவிடத் தேசியம் இப்போது காலாவதியாகிவிட்டது. திராவிடத் தேசியத்திலிருந்து கன்னடமும், மலையாளமும், தெலுங்கும் கழன்று போய்விட்டன. தமிழே தனித்து நிற்கின்றது. எனவே திராவிடத் தேசியத்தைத் தமிழ்த் தேசியம் எனக்கூறல் குற்றமல்ல.

ஆதலினால் மணிரத்தினம், சங்கர் ஆகியோர் தமிழ்த்தேசியத்தைக் குறிவைத்துத் தாக்குகின்றனர். பிராமணிய எதிர்ப்பில் வலு உறுதிப்பட நிற்பதிலும், இந்திய மேலாதிக்க வாதத்தை ஏற்றுக் கொள்ளாதிருப்பதிலும் தமிழ்த் தேசியம் மிகவும் உறுதியாக நிற்கின்றது. பிராமணியத்திற்குள் நிற்போருக்கு நாத்திகவாதம் முன்வைக்கும் கம்யூனிஸ்ட்டுக்கள் கூட பிரச்சினையல்ல. தேவைப்படின் பிராமணியச் சார்பானவர்கள் கம்யூனிசமும் பேசுவர். ஆனால் இவர்களுக்குப் பிரச்சினை எப்போதும் தமிழ்த் தேசியம்தான். மணிரத்தினத்தின் இருவர் திரைப்படம் திராவிட அரசியலைக் குறிவைத்துத் தாக்கியது. ரோஜா திரைப்படம் இந்திய மேலாதிக்கவாதத்தை நியாயப்படுத்தி, விடுதலைப்போரை பயங்கரவாதமாகச் சித்தரித்தது. உயிரே விடுதலைப் போருக்கு எதிரான திரைப்படம். பம்பாய் இந்துத்துவ சார்பான திரைப்படம் மணிரத்தினத்தின் இருவர் திரைப்படம் திராவிட அரசியலை கிண்டலுக்கு உள்ளாக்குகின்றது என்பது போக, தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் அரசியலை வஞ்சக அரசியல் எனச் சித்தரிக்கின்றது. இப்போது இருப்பவர்களில் திராவிட அரசியலில் மூத்த தலைவராக மு.கருணாநிதி அவர்களையே குறிப்பிடலாம். அதனால்தான் அவர் மீது இத்தனை தாக்குதல்.

சங்கர் இயக்கிய முதல்வன் திரைப்படமும் கருணாநிதி அவர்களையே காட்டமாக விமர்சித்தது. அதேபோல சேரன் இயக்கிய தேசிய கீதம் திரைப்படமும்கூட கருணாநிதி அவர்களையே குறிவைத்துத் தாக்கியது. சேரனின் வெற்றிக்கொடிகட்டு திரைப்படத்தின் ஒரு பாடல் காட்சியில் காந்தி, நேரு, காமராஜர் ஆகியோரது நிழற்படங்கள் காட்டப்படுகின்றன. ஆனால் ஈ வே ரா பெரியாரினதோ அறிஞர் அண்ணாத்துரை அவர்களினதோ நிழற்படம் அதில் இல்லை. இவர்கள் யாரினது நலன்சார்ந்து இயங்குகின்றார்கள் என்பதனை வெளிப்படுத்த இவற்றைச் சொன்னேன். நமது கேள்வி என்னவென்றால் மணிரத்தினம், சங்கர், சேரன் போன்றோர் திரைப்படங்களை இயக்கும் காலத்தில் பல வருடங்களாகத் தமிழ்நாட்டை ஆட்சி புரிந்தவர் செல்வி ஜெயலலிதா அவர்கள். ஜெயலலிதா செய்யாத ஊழலா? ஜெயலலிதா காட்டாத ஆணவமா? பதவிக்காக ஜெயலலிதா செய்த வேலைகளை எழுதவே கைகூசும். சரி, ஜெயலலிதாவின் இத்தகைய செயற்பாடுகள் எதுவும் இவர்களைப் பாதிக்கவில்லையா?

பாதிக்காது. காரணம் `பாவம் அவள் ஒரு பாப்பாத்தி` ஜெயலலிதா பிராமணப் பெண். பிராமணியத்தை ஏற்றுக்கொண்டு, ஆதரிக்கின்ற ஒருவர். அதனால் மணிரத்தினம், சங்கர், சேரன் போன்றோருக்கு அது தாக்காது. வி.பி.சிங் அவர்கள் பிரதமராக இருந்த காலத்தில் கொண்டுவந்த பிற்படுத்தப்பட்டோருக்கான சட்டம் ஒன்று பிராமணரைப் பாதித்துவிட்டது என்பதற்காக கோபம் கொண்டு அதனையே கருவாக வைத்து தனது முதலாவது திரைப்படமான ஜென்ரில்மென் திரைப்படத்தை இயக்கிய சங்கருக்குப் பிராமணப் பெண்மீது எப்படிக் கோபம் வரமுடியும்? யார் இவர்கள் என்று புரிகின்றதல்லவா? ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில்தான் பாரதிராஜா தமிழ்ச் செல்வன் என்று திரைப்படம் எடுத்திருந்தார். ஜெயலலிதாவின் கும்பல் அப்போதைய ஐ.ஏ.எஸ் அதிகாரியான சந்திரலேகாவின் மீது அசிற் வீசிக் கொலைசெய்ய முயன்ற சம்பவத்தைத் தமிழ்ச்செல்வன் அன்று திரைப்படமாக்கியிருந்தார். அந்தத் துணிச்சல் பாரதிராஜாவுக்கு இருந்தது. கோபம்

– வழுதி

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

# இத்தாலியின் டகார் தந்தை காலமானார்


இத்தாலியின் வீதிகளில் ஓடும் வாகனங்களில் 60 வீதமானவையை நிர்மாணித்த பெருமைப் *பியற்* நிறுவனத்தையே சாரும். இது தவிர உலகின் பல நாடுகளிலும் வாகன உற்பத்திகளை விரிவுபடுத்திய ஒரே நிறுவனம் *பியற்* என்பதாகும். இத்தாலியில் தற்போதுள்ள வாகனத் தயாரிப்பு நிறுவனங்களில் பிரபல்யமான பியற், பராரி, அல்பாரோமியோ, லாண்சியா இவ்வாறு தொடரும் சகல தயாரிப்புக்களுக்கும் உரிமையாளர்கள் அக்நெலி குடும்பத்தினரே.

இத்தாலியின் ரூறின் பகுதியைத் தளமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பியற் நிறுவனத்தின் ஏனைய தயாரிப்புக்களாக பார வாகன உற்பத்தி, விமான இயந்திரம் தயாரிப்பு போன்றவைகளும் உள்ளன. 2003ம் ஆண்டின் ஜனவரி மாதம் அந்நிறுவனத்தின் தலைவரான ஜியோவாணி அக்நெலி காலமானார். இவரது இறப்பின் சற்று முன்புவரை நன்றாக இயங்கிவந்த பியற் நிறுவனம் சற்றுத் தடுமாறத் தொடங்கிய போது இவர் பதவி விலகி, தனது பதவியை இளைய சகோதரனிடம் ஒப்படைத்தார். அதன் பின்பு வந்த காலங்களில் பியற் மீண்டும் இலாபகரமாகச் செயற்படத் தொடங்கியது.



கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு நடந்த பங்குதாரர்களின் மாநாட்டில் புதிய இயக்குநரான அக்நெலி சமூகமளிக்கவில்லை. இது பொதுவாக இடம்பெறாத ஒன்று என்றும் சகல விதமான கூட்டங்களிலும் சமூகமளிக்கும் இவர் இம்முறை வராததானது அக்நெலியின் உடல் நிலையில் பாதிப்பு ஏற்பட்டதற்கான காரணமாக இருக்கலாமெனக் கூறப்பட்டது. அதன் பின் அவரது இடம் மோர்சியோ என்பவரால் நிரப்பப்பட்டது.

கடந்த வியாழனன்று உம்வெக்ரோ அக்நெலி காலமானார் என அறிவிக்கப்பட்டது. இவரது இழப்பால் நிறுவனத்தின் பங்குகள் சற்றுச் சரிந்துள்ளபோதிலும் பாரிய பொருளாதாரச் சிக்கல்களை அது எதிர்கொள்ளாது என புதிய நிர்வாகி கூறியுள்ளார். ஆனாலும் 1899ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மேற்படி நிறுவனம் முதன்முறையாக 98ம் ஆண்டு அதன் பங்குகளில் வீழ்ச்சியைக் கண்டது. இதனை அடுத்து அமெரிக்க நிறுவனமொன்றுடன் பியற் தனது வர்த்தக ஒப்பந்தங்களைப் பகிர்ந்துகொண்டது. எப்படியான போதிலும் அது தொடர்ந்தும்




தனித்து இயங்க முடியாத நிலையே காணப்பட்ட காரணத்தால் இத்தாலிய அரசு அந்நிறுவனத்தைக் காப்பாற்றும் முயற்சிகளை மேற்கொண்டது. ஆனாலும் அவை தொழிற் சங்கங்களின் தலையீட்டினால் கைவிடப்பட்டன. இப்படியிருந்த போதிலும் அந்நிறுவனத்தின் புதிய சில வடிவமைப்புக்கள் இவ்வருட ஆரம்பத்திலிருந்து இலாபகரமாக இந்நிறுவனம் இயங்கத் தொடங்கியது.


தற்போது அக்நெலி குடும்பத்தின் இரண்டு பேரர்கள் நிறுவனத்தின் பொறுப்புக்களைக் கையேற்றுள்ள நிலையில் நிறுவனத்தின் எதிர்காலத்திற்கு அச்சுறுத்தலேதும் இல்லை என்று பொருளாதார ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

## ஈராக்கில் அமெரிக்கா தொடர்ந்து நிலைகொள்ளும்!

ஈராக்கில் அமெரிக்கா மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கை பலத்த எதிர்ப்புக்களைச் சந்தித்து வருவது மட்டுமன்றி ஆக்கிரமிப்பு இராணுவம் என்ற நிலைக்கும் அந் நாட்டின் இராணுவத்தைத் தள்ளிவிட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகள் இதில் தலையிட்டுள்ள போதிலும் ஒட்டுமொத்தமான தலையீடு ஈராக்கில் இருக்கவில்லை. இந்நிலையில் இன்னும் சில மாதங்களுக்குள் அமெரிக்கா ஈராக்கிலிருந்து வெளியேறிவிடும் என்ற நிலைப்பாடு ஒருபுறம் ஏற்பட்டுவரும் அதேவேளை ஐரோப்பிய வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள் ஐக்கிய அமெரிக்கா தனது படைகளை இன்னும் சில பாரிய அழிவுகளை எதிர்கொண்டதன் பின்னர்தான் வெளியேறும் எனத் தெரிவித்துள்ளன.



அண்மையில் ஐரோப்பியப் பொருளாதாரத்துறைக் கொள்கை வகுப்பாளர் ஒருவரிடம் ஈராக்கில் ஐக்கிய அமெரிக்காவின் நிலைபற்றி வினாவியபோது, எதிர் வரும் நவம்பர் மாதம் அமெரிக்காவின் தேர்தல்கள் நடாத்தப்படவுள்ளன. இத் தேர்தல் முடிவடைந்த பின்னரும் அமெரிக்கா ஈராக்கிலிருந்து வெளியேறுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளாது அதற்கான தயார்ப்படுத்தல்களையே தற்போது அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். ஐரோப்பிய ஆதரவு நாடுகளான பிரித்தானியா, இத்தாலி, போலந்து, டென்மார்க், ஸ்பெயின் போன்ற நாடுகளில் அமெரிக்க எதிர்ப்பு வாதம் பலமாக ஒலிக்கத் தொடங்கியுள்ளது. அந்த வகையில் ஸ்பெயின் தனது படைகளை ஏற்கனவே விலக்கிக் கொள்ள ஆரம்பித்துள்ளது. ஏன் அமெரிக்கா தொடர்ந்தும் அங்கு நிலைகொள்ள விரும்புகிறது என்ற கேள்விக்குப் பதிலளித்த ஒரு வெளியுறவுக் கொள்கை ஆய்வாளர், 'ஈராக்கின் குழம்பிப்போயுள்ள பொருளாதார நிலையில் இலாபம் பெற்றுக்கொள்ள அமெரிக்கா விரும்புகிறது என்ற அபிப்பிராயம் பரவலாகக் காணப்படுகின்றது. இதனையே வேறு சில கொள்கை வகுப்பாளர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் அவர்களது அபிப்பிராயப்படி ஈராக் தற்போது உள்ள நிலையில் அதனைக் கைவிட்டுச் சென்றால் அதனுடைய பொருளாதார நிலை மட்டுமன்றி அரசியல் நிலைகூட மிக மோசமாகிவிடும். சுமார் 24 மணி நேரத்திற்குள் அந்நாடு சிவில் யுத்தத்திற்குள் மூழ்கிவிடும்' என்றார்.



## பிரான்சில் வேலை இல்லாதோர் தெகை அதிகரிப்பு

பிரான்சில் கடந்த ஏப்பரல் மாதம் வேலை இல்லாதோரின் தொகை 8200 ஆல் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு வேலை இல்லாதோரின் மொத்த எண்ணிக்கையில் 0,3 வீதமாகும். கடந்த ஏப்ரல் மாதக் கணிப்பின் படி பிரான்ஸில் மொத்தமாக 24 இலட்சத்து 30 ஆயிரத்து 700 பேர் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். இது அந்த நாட்டின் மொத்த சனத்தொகையில் 9.8 வீதமாகும்.




பிரான்ஸ் நாட்டில் வேலை இல்லாதோரின் தொகை வருடத்துக்கு 2.4 வீதத்தால் அதிகரித்துச் செல்வதாக அந்த நாட்டின் தொழிலமைச்சு அறிவித்துள்ளது. வேலையற்றவர்களுக்கு வேலை தேடிக் கொடுக்கும் ANPE நிறுவனத்தில் 38 இலட்சத்து 79 ஆயிரம் பேர் பதிவு செய்திருப்பதாகவும், இதில் தற்காலிக வேலையில் இருந்து கொண்டு புதிய வேலை தேடுபவர்களும், அடக்கம் என்றும் பிரான்ஸ் தொழிலமைச்சு தெரிவித்துள்ளது.

## ஆயிரக்கணக்கான வாகனங்கள் கடலில் மூழ்கின!

தென்கொரியா மற்றும் ஜப்பானிய வாகனங்களை ஏற்றிக்கொண்டு வந்த கப்பல் ஒன்று சிங்கப்பூரில் விபத்துக்குள்ளாகியதில் அதில் கொண்டுவரப்பட்ட 4190 கார்களும் கடலில் மூழ்கியுள்ளன. சனியன்று நடுநிசியில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. எம்.வி ஹியூண்டாய் எனும் கப்பல் 279,949 தொன் மசகு எண்ணெய்யுடன் வந்த எம்.வி.கமினேசன் எனும் கப்பலுடன் மோதிக்கொண்டது. கப்பல்கள் யாவும் கடலில் மூழ்கியபோதும் இதுவரை எண்ணெய் கப்பலில் இருந்து கசிவுகள் எதுவும் ஏற்படவில்லை எனத் துறைமுக அதிகாரசபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.




தென்கொரியாவின் வாகனத் தயாரிப்பு நிறுவனமான ஹியூண்டாய் நிறுவனத்தின் 3000 புதிய கார்களும், சுமார் 1000 வரையிலான ஜப்பானியத் தயாரிப்பு பாவித்த கார்களும் அக் கப்பலில் கொண்டு வரப்பட்டுள்ளன. கப்பலின் சிப்பந்திகள் எல்லோரும் காப்பாற்றப்பட்டுள்ளனர். கப்பல்கள் இரண்டும் மோதிக்கொண்டவேளை துறைமுக அதிகார சபைக்கு எச்சரிக்கைக் கோரிக்கைகள் அனுப்பப்பட்டன. அதேவேளை இரு கப்பல்களும் தங்களுக்கிடையேயும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டன. மேற்படி கப்பல்கள் மூழ்கியதால் பொருளாதார ரீதியாக ஹியூண்டாய் நிறுவனம் பாதிக்கப்படுமா எனக் கேட்டதற்கு ஏற்றுமதிக்கு அனுப்பப்பட்ட வாகனங்களுக்கெல்லாம் ஏற்கனவே பணம் வழங்கப்பட்டுவிட்டன. அத்துடன் விபத்துக்கான காப்புறுதியும் செய்யப்பட்டுள்ளன. ஆகவே பொருளாதார ரீதியாக பாதிப்புக்கள் எதுவும் ஏற்படாது என்று வாகனங்களின் ஏற்றுமதி நிறுவனத்தின் அதிகாரி தெரிவித்தார். மேலும் கடலில் மூழ்கியுள்ள வாகன வகையைச் சேர்ந்தவைகள் ஏராளமாக கையிருப்பில் உள்ளன. வெகுவிரைவில் மீண்டும் அவை ஏற்றி அனுப்பப்படவுள்ளன என உறுதி கூறினார். இதற்கிடையே மூழ்கிப்போன மற்றொரு கப்பலான எண்ணெய் தாங்கி பற்றிய செய்திகள் விபரமாக இதுவரை கிடைக்கவில்லை. ஆனாலும் சிங்கப்பூர் துறைமுக அதிகார சபையினர் எந்தவித பாதிப்பும் துறைமுகத்துக்கு ஏற்படவில்லையென உறுதிகூறியுள்ளனர். தென்கிழக்கு ஆசியாவின் சந்தடி மிக்க, போக்குவரத்து அதிகமான துறைமுகங்களில் சிங்கப்பூர் பிரதானமானது என்பது குறிப்பிடத்தக்கது.

## நாணய மாற்று

| | ஈரோ | டொலர் | பவுண்ஸ் | சு.பிராங் |
|---|---|---|---|---|
| இலங்கை | 121.30 | 99.28 | 182.06 | 79.26 |
| இந்தியா | 55.56 | 45.47 | 83.38 | 36.30 |

## ஆராரோ...! ரோ ரோவோ!

(13ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் புதைகுழிகளில் இருந்தன. கண்டுபிடிப்பு நடந்த காலத்திற்குஸ் சற்று முன்பாக செம்மணிப் புதைகுழி விவகாரம் சர்வதேச கவனத்தை ஈர்த்திருந்தது. இதன் காரணமாகத் துரையப்பா விளையாட்டரங்கப் புதைகுழிகள் உரிய கவனத்தைப் பெறவில்லை. இதற்கு இன்னுமொரு காரணம் உண்டு. கொழும்பிலுள்ள

**1983 அளவில் தொடங்கிய இந்தியாவின் இலங்கைத் தலையீடு 1987இல் நேரடித் தலையீடாக மாறியது. தெற்கு ஆசியாவின் பிராந்திய வல்லரசு என்ற ஒற்றை ஆதிக்க உரிமையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அமைதி நிலைநாட்டும் நோக்குடன் இறங்கிய இந்தியா தானே முழு அளவு அமைதிச் சீர்குலைப்பை நடத்தியது.**

இந்தியத் தூதரகத்தில் பணியாற்றும் றோ அதிகாரிகள் இந்த விவகாரத்தை மூடி மறைப்பதில் பெரும்பங்கெடுத்தனர். தூதரகம் கொடு-த்த அழுத்தம் காரணமாக இந்த விவகாரம் மூடி மறைக்கப்பட்டுள்ளது. இப்போது சிங்கள இராணுவத்தின் பிடியில் யாழ். நகரம் இருப்பதால் செம்மணி எலும்புக் கூடுகளை இரவோடு இரவாக எரித்து அழித்ததுபோல் துரையப்பா விளையாட்டரங்கு எலும்புகளையும் அழிக்கும் வாய்ப்பு இருக்கிறது.

இப்போது யாழ். நகருக்கு றோ அமைப்பினர் அடிக்கடி வந்து செல்வதால், இந்தியர்களும் சிங்களவர்களும் இணைந்து தடயங்களை அழிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. ஹொங்கொங் தீவுகளில்



நிலை கொண்டுள்ள ஆசிய மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்ட கைநூலில் *(Sri Lanka: Disappearence and The Collapse of The Police System 1999)* யாழ். குடாவில் செம்மணி ஒன்றுதான் இது வரை கண்டுபிடிக்கப்பட்ட மனிதப்புதை குழி என்று வரைபடத்துடன் கூறப்பட்டுள்ளது. இந்திய இராணுவம் விட்டுச் சென்ற புதைகுழி பற்றிய விவரங்களைத் தனது அடுத்த பிரசுரத்தில் *Asia Human Rights Commission* வெளியிடும் என்று நம்புகிறோம். இந்த அமைப்பின் இணையதள முகவரி *www. disappearances.org* - தொடர்பு கொண்டு பாருங்கள்!

(இன்னும் வரும்)

## மிலேனியம்...

(16ம் பக்கத் தொடர்ச்சி)

முடிவெடுத்துச் செயற்படும் ஆற்றல் கொண்ட இவன், தான் வளர்க்கும் போராளிகளுக்கும் இப்படியான அறிவுரையை அடிக்கடி கூறுவான். அந்நியன் காலடியில் மண்டியிட்டு வாழ்வதை விடச் சண்டையிட்டுச் சாவதே மேல் எனச் சூளுரைத்து நின்றவன். இவன் பல வரலாற்றுத் தாக்குதல்களை வழிநடத்திய வீரத்தளபதி. எழுத்தில் வடிக்க முடியாத இவனது உணர்வுகள் பல உண்டு. இப்படியாகக் கடற்கரை தனிலே இவன் பணி நன்கே தொடர்ந்தது.

காலங்கள் உருண்டோடின கடற்புலிகளின் துணைத்தளபதியாக கடமையாற்றி 2000ம் ஆண்டு வீரச்சாவடைந்த லெப்.கேணல் நிரோஜனின் பொறுப்பை இரும்பொறை சுமந்து கொண்டான். அவ்வாண்டிலேயே இவன் பிறந்த மண்ணான திருமலை சென்று அங்கே இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கடற்பரப்பில் கரும்புலிப் படகுகளைக் கொண்டு சென்று அங்கு பல தாக்குதல்களை வழி நடத்தினான். திருமலைத் துறைமுகத்தினிலே பாரிய துருப்புக்காவிக் கப்பலைத் தகர்த்தழித்த வெற்றித்தாக்குதலை நெறிப்படுத்தி வழிநடத்தினான். இதனால் தேசியத் தலைவரிடம் பாராட்டுதலையும் பெற்றிருந்தான். இடமறிந்து காலமறிந்து செயற்படும் ஆற்றல் கொண்ட தளபதியாய் இவன் விளங்கினான். தலைவனின் சிந்தனையை தன் மனதில் தாரக மந்திரமெனப் பதித்துச் செயற்பட்டான், இவன். கண்ணுறக்கம் இன்றி எதிரியின் வரவிற்காய் உடல் வருத்தி உழைத்த தளபதி. சொந்த பந்தங்களின் பாசத்திற்காய் தன் உறவுகளாய் மதித்து நடந்தான்.

மிலேனியம் ஆண்டினிலே மிகையின்றி மிளிர்ந்த தளபதி இரும்பொறை வழமை போல பொழுது சாய்ந்த அந்திப் பொழுதில் கடமையின் நிமித்தம் கடல் மடியேறிச் சென்றான் இவன். எல்லோரிடமும் அன்பாக விடை பெற்றுச் சென்றான். அன்று யாரும் அறிந்திருக்கவில்லை இரும்பொறை கடல் மீது சரித்திடுவான் என்று. 16.09.2001 அன்று பருத்தித்துறைக் கடற்பரப்பில் கப்பல் தொடரணி மீது பாரிய தாக்குதலை நடத்தி வீரகாவியமான லெப்.கேணல் அனோஜனுடனும் சக தோழர்களுடனும் இணைந்து களமாடி வெற்றியை எமதாக்கி விட்டுத் தன் மார்பிலே குண்டேந்தி வீரகாவியம் ஆகிவிட்டான். கடல் மடியில் செங்குருதி சிந்தி சாய்ந்து விட்ட எம் தளபதி மரணிக்கவில்லை. எம் மனங்களில் வாழ்கிறான்.

'சாவு இவனது பேச்சையும் மூச்சையும்
தான் நிறுத்திக் கொண்டதே தவிர
இவனது விடுதலை இலட்சியத்தை
இன்னும் வீச்சாக்கியுள்ளது.

இவன் வளர்ப்புகள் இங்கே தொடர்கின்றனர் இவன் பணி.
வீரத்தளபதியே மலரப்போகும் தமிழ் ஈழத்திலே என்றும் நீ வாழ்வாய்.

**ஆக்கம் - போராளி கஸ்தூரி.**

## ஆய்த எழுத்து

(26ம் பக்கத் தொடர்ச்சி)

பாரதிராஜாவுக்கு இருந்தது. அது இவர்களுக்கு இல்லை. ரஜனிகாந் ஜெயலலிதாவின் அரசியலில் கேள்வி கேட்காவிட்டாலும்கூட படையப்பா திரைப்படத்தில் கிழித்திருந்தார்.

மணிரத்தினத்தின் ஆய்தஎழுத்து திரைப்படம் என்ன சொல்ல வந்தது. எதைச்சொல்லி முடித்தது என்பதே தெளிவில்லாத ஒன்று. அரசியல் வாதிக்குத் தொண்டனாகப் போகின்ற அல்லது அடியாளாகப் போகின்ற ஒருவனின் சீரழிவினைச் சொல்கின்றார். அது மாத்திரம் சொன்னாரில்லை.

தமிழ்நாட்டு அரசியல் அழுக்கு என்றும் சொல்கின்றார். ஆனால் மாணவர்கள், இளைஞர்கள் அரசியலுக்கு வரவேண்டும். சட்ட சபைக்குள், பாராளுமன்றத்திற்குள் அவர்கள் நுழையவேண்டும் என்றும் சொல்கின்றார். ஆனால் அதற்குள் ஆயுதம் எடு ஆணவம் சுடு என்றொரு பாடலும் உண்டு.

ஆயுதப் போராட்டத்தை வலியுறுத்துகின்றாரா? அப்படியென்றால் சட்ட சபைக்குள் நுழைவது சரியா?

சட்ட சபையை நம்புகின்றாரா மணிரத்தினம். மணிரத்தினம் எதைச் சொல்ல வருகின்றார்? ஆனால் மணிரத்தினத்திற்கு நாம் சொல்ல வருவது இதுதான். அரசியலில் தெளிவான நிலைப்பாட்டை எடுங்கள். அது சரியோ தவறோ, முற்போக்கோ பிற்போக்கோ என்று எதுவும் வேண்டாம். ஒரு அரசியல் திரைப்படம் எடுக்கையில் உங்கள் நிலைப்பாட்டில் இருந்து எடுங்கள். நீங்கள் குழம்பவேண்டாம். மற்றவர்களைக் குழப்ப வேண்டாம். உங்களுடைய கருத்தைச் சொல்ல உங்களுக்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை உங்களது கருத்தை விமர்சிக்க எங்களுக்கும் உண்டு.

மணிரத்தினத்தை நான் மெச்சுகின்ற விசயம் மணிரத்தினத்தின் பெண்கள் உண்மையானவர்கள். ஆண்களின் சமயாரிகள். மணிரத்தினத்தின் பெண்களைப் பார்க்கின்றபொழுது ஆண்கள் யாவர்களுக்கும் இயல்பாக காதல் எழும். அப்படிப் பெண் இல்லையே என ஏக்கம் வரும். அந்தப் பெண்கள் உடலால் அழகோ இல்லையோ மனதால் அழகு. பாலு மகேந்திராவின் நாயகப் பெண்ணும் அப்படித்தான். என்றாலும் பாலு மகேந்திரா ஒரு திரைப்படத்தில் இரண்டு பெண்களை வைத்துவிடுவார். ஒன்று காவியப்பெண். மற்றது காமம் சொட்டும் பெண். அது மணிரத்தினத்தில் காணக்கிடையாது. ஒரு பெண் தான். நட்புக்குரிய பெண். ஆனால் அதுவே பிரச்சினையாகி விடுகிறது.

ஆய்த எழுத்து திரைப்படத்தில் மூன்று பெண்கள் வருகின்றனர். உடலியல் ரீதியில் மூன்று பெண்களே தவிர தம்மை வெளிப்படுத்துவதில் ஒரு பெண்ணாக மணிரத்தின் பெண்ணாக நிற்கின்றனர். ஆய்த எழுத்து திரைப்படம் காண்கின்றபோது எமக்கென்னவோ இன்பா என்கின்ற பாத்திரம் மீது கூடுதல் கவனம் சென்றது. மாதவன் அந்தப் பாத்திரத்திற்குச் சிறப்பேற்றி இருந்தார். அது போக மணிரத்தினம் அந்த பாத்திரத்தை இன்னும் செப்பனிட்டு பரிணமிக்கச் செய்திருக்கலாம். அந்த ஒரு பாத்திரத்தைப் பிரதானமாக்கிக் கதையை நகர்த்தியிருக்கலாம். ஆனால் 'லாம்' 'லாம்' என்று சொல்ல எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. ஒரு படைப்பை நாம் விமர்சிக்கலாமேயொழிய அப்படி எடு, இப்படி எழுது, இன்னமாதிரி படை என்றுசொல்ல எமக்கு எந்த உரிமையும் இல்லை.

போகட்டும் யாவற்றையும் விட்டுவிடுவோம். மணிரத்தினம் தமிழுக்குக் கிடைத்த மிகச் சிறந்த நெறியாளர். படைப்பு ஆளுமையிலும் தொழில்நுட்ப வல்லமையிலும் சிறந்து விளங்குபவர். அவரது திரைப்படத்தில் ஒரு தொடருந்து வருகின்றது என்றாலே அது படம் பிடிக்கப்பட்ட அழகுபார்க்க ஆயிரம் கண் வேண்டும். அவர் மிகச் சிறந்த திரைப்படங்களை இயக்கியிருக்கின்றார். மணிரத்தினம் அலைபாயுதே என்று காதல், காதலுக்குப் பின்னே வாழ்வு என்று படம்பிடித்தார். நாம் பார்த்தோம், மகிழ்ந்தோம், நயந்தோம். ஏன் முன்னர்கூட மௌனராகம், நாயகன், தளபதி என்று நாம் நயந்தோம்தானே. அவரது அரசியல்தான் நமக்கு ஒத்துப்போகாதது, நமக்கு இடர் தருவது. தமிழில் மிகச் சிறந்த நெறியாளர் என்று இருவரைக் குறிப்பிட முடியும்.

ஒன்று மகேந்திரன். மற்றவர் மணிரத்தினம். எனவே மணிரத்தினம் தோற்கக்கூடாது. நின்று நிலைத்து வெற்றிபெறவேண்டும். ஆனால் ஆய்தஎழுத்து திரைப்படம் முடிந்து வெளியில் வருகின்றபோது மேலும் ஒரு தோல்வியைச் சந்திக்கப் போகின்றார் என்பது புரிந்துபோகின்றது. அதுதான் நமது வேதனை.

### சூரியனுக்கு முன்னால் வெள்ளி வருகிறது உங்கள் கண்கள் கவனம்

சூரியக் குடும்பத்தில் ஒன்றான வெள்ளிக் கிரகம் எதிர்வரும் ஜூன் மாதம் 8ம் திகதி செவ்வாய்க்கிழமை சூரியனை முன்பக்கமாக கடந்து செல்லவிருக்கிறது. 122 வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறும் இந்த நிகழ்வை உலக மக்கள் எல்லோரும் ஒரே நேரத்



தில் பார்க்க முடியாது. இம்முறை ஐரோப்பாவில் இதைப் பார்க்கக் கூடியதாக இருக்கும். ஐரோப்பாவில் கடைசியாக இந்த நிகழ்வை 1761ம் ஆண்டு பார்த்ததாக வரலாற்று ஏடுகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 8ம் திகதி செவ்வாய்க்கிழமை ஐரோப்பிய நேரம் காலை 7.20க்கு சூரியனுக்கு எதிரில் இந்த வெள்ளிக் கிரகம் வரும்போது சூரிய ஒளியின் ஒரு சிறு பகுதியை அது மறைப்பதால் சூரியனில் கரும் புள்ளி இருப்பது போன்ற ஒரு தோற்றம் தென்படும். இது தொடர்-ச்சியாக 6 மணி நேரம் இருக்கும் என்று வானியலாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிகழ்வை வெறும் கண்ணால் நேரடியாகப் பார்ப்பது கண்ணுக்குக் கெடுதல் விளைவிக்கலாம் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். சூரிய கிரகணத்தை பார்ப்பதற்கான விஷேட கண்ணாடிகள் போன்ற கறுப்புக் கலவைக் கண்ணாடிகளை பயன்படுத்துமாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## வெகுமதி

(14ம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பம் என்னவென்று கேட்டார்கள்.

'எனக்குரிய பரிசு' என்றான் அவன்.

'சரி! உன் பரிசைப் பெற்றுக் கொள்வதற்கு வா' என்று கூறி அவர்கள் அவனை அழைத்துச் சென்றனர். கறுப்புத் துணியால் ஆன பை போன்ற ஒரு தொப்பியால் அவன் தலையை மூடினர். கண்ணை மூடிக் கை நிறையத் தங்கமும் வெள்ளியும் கொட்டுவார்கள் என்று கினுவா எண்ணிக்கொண்டான். அரசாங்கம் ஒரு காரியத்தைச் செய்துவிடுமா என்ன? எந்தக் காரியமானாலும் அதை நிறைவேற்ற எத்தனையோ உபகரணங்கள், விநோதமான கருவிகள், சம்பிரதாயங்கள், நடைமுறைகள், உபாயங்கள் என்று ஏராளம் இருக்கின்றனவே! பரிசு கொடுப்பது அப்படியான சம்பிரதாயங்கள் எதுவுமில்லாமல் நடந்துவிடுமா என்ன? வீட்டிற்குத் திரும்பிச் சென்று அவற்றையெல்லாம் தன் மனைவிக்குக் காட்டுவான் அவன். எவ்வளவு சந்தோஷப்படுவாள் அவள்! அவன் ஒரு அழகான வீடு கட்டுவான். விவசாயத்தைக் கவனிப்பான். சந்தோஷமாக வாழ்வான். எதையும் பிடுங்கிக்கொள்ள கோவிந்த் சர்தார்தான் உயிரோடு இல்லையே!

திடீரென்று, ஏதோ ஒன்று அவன் கழுத்தைத் தாக்கியது.


**விரைவில்**


களத்திலிருந்து
போராளி
**ஆனதி** எழுதும்



**விடுதலையின் வீச்சும் வீரச் சாவுகளும்**

நெஞ்சைப் பிழியும் உண்மைச் சம்பவங்களின் தொடர்....

# பாரிஸ்: தமிழ் சிறுமி நிதர்சினி கொலை குற்றவாளிகளுக்கு தண்டனை உறுதி



(31.05.04)

பாரிசின் புறநகர்ப் பகுதியான குசான்வீல் பகுதியில் 1999ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ம் திகதி 12 வயதான தமிழ்ச் சிறுமி நிதர்சினியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி படுகொலை செய்த குற்றவாளிகளுக்கு பிரான்சின் வேர்சைல் மேல் முறையீட்டு நீதிமன்றம் அதிகபட்ச தண்டனையை வழங்கி தீர்ப்பளித்துள்ளது. யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தை சேர்ந்த 33 வயது இஞைர் ஒருவருக்கும், மூளாயைச் சேர்ந்த 37 இளைஞர் ஒருவருக்குமே ஆகக்கூடிய பட்ச தண்டனையாக 22 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர்களது வழக்கை முன்னர் விசாரித்த பாரிஸ் நீதிமன்றம் 2003ம் ஆண்டு முதலாவது எதிரியான கொய்யாத்தோட்ட இளைஞருக்கு 22 வருடச் சிறைத்தண்டனையும் மூளாய் இளைஞருக்கு 20 வருட சிறைத்தண்டனையும் வழங்கியிருந்தது. இத்தண்டனையை எதிர்த்து இவர்கள் செய்த மேன்முறையீட்டு மனுவை கடந்த 24ம், 25ம் திகதிகளில் வேர்சைல் உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. இந்த விசாரணையில் இவர்கள் இழைத்த குற்றத்தின் கொடூரத்தனத்தை கருத்தில் எடுத்துக்கொண்ட நீதிமன்றம், பிரான்ஸ் சட்டவிதியில் உள்ள அதி உயர்ந்த பட்ச தண்டனைக்கோவையான 'பெர்பியூ' சட்டத்தின் கீழ் இருவருக்குமே 22 வருட சிறைத்தண்டனையை உறுதி செய்ததுடன் இந்த 22 வருடத்தில் வருடாந்தம் வழங்கப்படும் விடுமுறைக் கழிப்பையும் இரத்துச்செய்து முழுமையாக 22 வருட சிறைத் தண்டனையை உறுதி செய்துள்ளது. அத்துடன் 22 வருடம் முடிந்த பின்பும் இவர்களை விடுதலை செய்வதுதொடர்பான முடிவை எடுப்பதற்கு நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. இந்த வழக்கை ஐந்து நீதிபதிகள் கொண்ட குழு விசாரித்தது. ஐவருமே ஒத்த கருத்தின் அடிப்படையில் இந்ததண்டனையை உறுதிப்படுத்தியுள்ளனர். இந்தக் குற்றவாளிகள் புரிந்த குற்றம் மிகவும் கொடூரமானதென்றும் இதை எந்தவிதத்திலும் மன்னிக்க முடியாது என்றும் நீதிபதிகள் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளனர்.

## சிறீலங்காவின் வர்த்தகரான அணுவாயுத கறுப்புச் சந்தை இடைத்தரகர் மலேசியாவில் கைது

(31.05.04)

பாகிஸ்தான் அணுவிஞ்ஞானி அப்துல் கதீர்கானினால் இரகசியமாக மேற்கொள்ளப்பட்ட அணுவாயுத இரகசியங்கள் மற்றும் அணுவாயுத உதிரிப்பாகங்கள் விற்பனையில் இடைத்தரகராக செயற்பட்டாரென சந்தேகிக்கப்படும் சிறீலங்கா வர்த்தகர் புகாரி சயீட் அபுதாகி என்பவரை மலேசியாவில் வைத்து கைது செய்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் வெள்ளியன்று தெரிவித்துள்ளன.

அப்துல் கதீர்கான் அணுவாயுதத் தொழில்நுட்பத்தை இரகசியமாக விற்பனை செய்வதற்கு உதவியவரென மெரிக்காவினால் தாகிர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். அணுவாயுத கறுப்புச் சந்தையில் தாகிரின் தொடர்பு குறித்த விபரங்களைக் குறிப்பிட்டு கடந்த பெப்ரவரியில் பொலிஸ் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தபோதும் இவர் மலேசியாவில் சுதந்திரமாக நடமாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தற்போது மலேசியாவினால் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவித்தன. மலேசியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புத் தடைச் சட்டமானது குற்றச்சாட்டுகளோ விசாரணைகளோ



இன்றி சந்தேகத்திற்கிடமானவர்களைத் தடுத்து வைப்பதற்கு அனுமதிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. தாகிர் இரண்டு வருட காலத்திற்கு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பாரென அரசாங்கத் தகவல்கள் தெரிவித்தன.

தாகிர் கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பான செய்திகளால் தாம் மகிழ்ச்சியடைந்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. தாகிரைக் கைது செய்ய மலேசிய அரசாங்கம் எடுத்த நடவடிக்கையானது மிகவும் தீர்மானகரமானதென்று செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ரிச்சட் பௌச்சர், அப்துல் கதீர்கானின் அணுவாயுதக் கறுப்புச் சந்தை வலையமைப்பில் தாகிர் மிகவும் முக்கியமான ஒருவரெனவும் குறிப்பிட்டுள்ளார்.

தாகிரின் கைது ஒரு முக்கியமான நடவடிக்கையென்றும், கானின் அணுவாயுத கறுப்புச் சந்தை வலையமைப்பை மூடுவதற்கான சர்வதேச முயற்சிகளுக்கு இது பெரிதும் உதவியாக இருக்குமென்றும் பௌச்சர் மேலும் தெரிவித்துள்ளார். மலேசியத் தலைநகர் கோலாலம்பூருக்கு வெளியேயுள்ள பங்சார் பகுதியில் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்த வேளையிலேயே தாகிர் கைது செய்யப்பட்டதாக மலேசிய தகவலொன்று தெரிவித்துள்ளபோதும் அரசாங்க அதிகாரிகள் இது தொடர்பாக கருத்தெதனையும் தெரிவிக்க மறுத்து விட்டனர்.

## வடக்கில் அதிக எரிபொருள் நிலையங்களைத் திறக்க இந்தியா திட்டம்

வட பகுதியில் அதிகளவு எரிபொருள் நிலையங்களைத் திறப்பதற்கு இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் ஆரம்பப் பங்கு விற்பனை மூலம் 10 மில்லியன் டொலர்களைப் பெற்றுக் கொள்ளவும் இப்பணத்தை எரிபொருள் நிலையங்களை மேம்படுத்தவும் மசகெண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைக்கவும் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் இலங்கைக் கிளை திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான பங்குகள் அடுத்த மாதத்தில் விற்கப்படுவதுடன் கொழும்புப் பங்குச் சந்தையில் பட்டியலிடப்படும் என இலங்கைக் கிளை நிர்வாகத் தலைவர் மகாதேவன் நாகேஸ்வரன் கூறினார். எவ்வளவு பங்குகள் விற்கப்படும் என்றோ, என்ன திகதியில் விற்பனை ஆரம்பிக்கப்படும் என்றோ அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

இந்தியாவின் மிகப் பெரிய மசகெண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனமாகிய இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் பொறுப்பெடுத்த 100 சில்லறை விற்பனை நிலையங்களைப் புனரமைப்புச் செய்த பின்னர் வடக்கில் அதிக எரிபொருள் நிலையங்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகப் பிணைப்பின் ஒரு பகுதியாக அரசாங்கம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து எரிபொருள் நிலையங்களை நடத்துவதற்கு இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்திற்கு அழைப்பு விடுத்தது.

கிழக்கு துறைமுக நகரமான திருகோணமலையில் மசகெண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை நிறுவவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதன் செயற்பாடு இவ்வருட இறுதியில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் இலங்கைக் கிளை இந்து சமுத்திரத்தைக் கடக்கும் கப்பல்களுக்கு மீள் எரிபொருள் நிரப்பும் நிலையமாக திருகோணமலையை அபிவிருத்தி செய்வதற்கும் திட்டமிட்டுள்ளது.

## 25 மில்லியன் யூரோ உதவி வழங்க ஐரோப்பிய ஒன்றியம் தயார்

சிறீலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தால் 25 மில்லியன் யூரோ நாணயத்தை வழங்குவதற்கு ஐரொப்பிய ஒன்றியம் தயாராக இருப்பதாக ஒன்றியப் பேச்சாளர் எமா உட்வின் கடந்த 26ம் திகதி புதன்கிழமை கூறியுள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் ஐரோப்பிய ஒன்றியம் இருபகுதியினரையும் ஒன்றாக இணைப்பதில் மிகவும் ஆர்வமாக உள்ளதாகக் கூறினார். ஐரோப்பிய ஒன்றியமும் சர்வதேசச் சமூகமும் பிரசல்சில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இதனை வலியுறுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஐ.நா படையில் சிறீலங்காப் படையினர்!

(31.05.04)

சிறீலங்காவின் வரலாற்றில் முதற் தடவையாக அந்நாட்டுப் படையினர் ஐக்கிய நாடுகள் சபையின் படைத்துறையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். சிறீலங்காவின் காலாட்படையைச் சேர்ந்த 800 பேர் இவ்வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

கனேடியத் தீவுகளில் ஒன்றான ஹெய்ற்றில் அமைதி காக்கும் பணிகளை மேற்கொள்வதற்கென ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படையினருடன் சிறீலங்கா காலாட்படையினர் அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

உள்நாட்டு நெருக்கடிக்குள் சிக்குண்டிருக்கும் ஹெய்ற்றியில் பன்நாட்டு படை ஐ.நா. அமைதிப் படையில் அங்கம் வகிக்கிறது. ஹெய்ற்றியில் ஐ.நா. அமைதிப் படையில் இணைந்து கொள்ளுமாறு சிறீலங்காப் படையினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் 800 இராணுவத்தினரை அங்கு அனுப்பப்படுகின்றனர். இதில் 25 அதிகாரிகளும் அடங்கியுள்ளனர்.

இதேவேளை, பல்வேறு நாட்டுப் படையினருடனும் இணைந்து சிறீலங்காப் படையினர் இணைந்து சிறீலங்காவில் பயிற்சிகளை மேற்கொள்ளும் செயற்திட்டமொன்று விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும் சிறீலங்கா படைத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தத் திட்டத்தின்கீழ் அமெரிக்கா, பங்களாதேஷ், நேபாளம், மற்றும் மங்கோலியா ஆகிய நாடுகளின் படைப் பிரிவினரே, சிறீலங்காப் படையினருடன் இணைந்து கூட்டுப் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கா

பௌத்த கடுங்கோட்பாட்டாளராகக் கடந்த காலத்தில் தன்னை அடையாளப்படுத்திய சிறீலங்காவின் முன்னாள் தலைமை அமைச்சர் ரட்ணசறி விக்கிரமநாயக்காவைப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக அரசுத் தலைவர் சந்திரிகா குமாரதுங்கா நியமித்துள்ளார். பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு, புத்தசாசன அமைச்சராகவும் மற்றும் பாதுகாப்புப் பிரதியமைச்சராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும், அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சராக டியூ குணசேகரவும், பிரதி வெளிவிவகார அமைச்சராக விஸ்வ வர்ணபாலவும் கடந்த 26ம் திகதி புதன்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதாக அரசுத் தலைவரின் செயலகம் அறிவித்திருக்கிறது.

## சுதுமலை அம்மன் தேர் சிற்பங்கள் அபகரிப்பு!

(31.05.04)

சுதுமலை அம்மன் கோயில் தேரில் இருந்து 2 லட்சம் ரூபா பெறுமதியான சிற்பங்கள் களவாடப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. எதிர்வரும் 2ம் திகதி இடம்பெறவிருக்கும் ஆலய தேர் உற்சவத்துக்காக தேரை தூய்மைப்படுத்த, அதனை மூடியிருந்த கதவுகளை அகற்றிய சமயமே சிற்பங்கள் காணாமற் போயிருப்பது தெரியவந்தது. இது குறித்து மானிப்பாயிலுள்ள சிறீலங்கா காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# நடேசன் கொலைக்கு பலதரப்பில் இருந்தும் கடும் கண்டனம்
# சிறீலங்கா இராணுவம் மீது விக்டர் ஐவன் குற்றச்சாட்டு

(31.05.04)

சுட்டுக்கொல்லப்பட்ட மூத்த பத்திரிகையாளர் ஜி.நடேசனின் கொலை தொடர்பாக பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளன. சுதந்திர ஊடக அமைப்பு, இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், தென் கிழக்கு முஸ்லீம் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியன கண்டனங்களை தெரிவித்துள்ளன. நடேசன் கொலை தொடர்பாக கருத்து வெளியிட்ட மூத்த பத்திரிகையாளர் விக்டர் ஐவன் இந்தக்கொலைக்கு இராணுவமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் சமீபகாலமாக மட்டக்களப்பில் இடம்பெற்று வரும் கொலைகளுக்கு இராணுவமே காரணம் என்றும் குற்றம் சாட்டினார். சிறீலங்காவில் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்படுவதும் அச்சுறுத்தப்படுவதும் தொடர்கதையாகி வருவதாக குறிப்பிட்ட விக்டர் ஐவன் ஊடகவியலாளர்களுக்கு இராணுவம் பாதுகாப்புத்தரும் என ஒருபோதும் எதிர்பார்க்கமுடியாது என்றும் தெரிவித்தார். அதேவேளை ஊடகத்துறை பிரதியமைச்சர் சேகு இசகுதீன் இந்தக்கொலையை கண்டித்ததுடன் ஜி.நடேசனின் எழுத்துத்துறையையும் பாராட்டிப் புகழ்ந்துள்ளார். நாட்டிற்கு பேரிழப்பு என்றும் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார். அதேவேளை கொழும்பில் இருந்து வெளிவரும் லங்காதீப பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சிறீரணதுங்க இந்தக்கொலையை கண்டித்ததுடன் இராணுவத்திற்கு தொடர்பில்லாமல் நடேசன் மீதான கொலை நடந்திருக்க வாய்ப்பில்லை என்றும் கூறினார். சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டியது அரசாங்கத்தின் பிரதான பொறுப்பு என்றும் கூறியுள்ளார். மாற்றுக்கொள்கை மையத்தின் நிறைவேற்று அதிகாரியும் மூத்த பத்திரிகையாளருமான சுனந்த தேசப்பிரிய கருத்து வெளியிடுகையில், நிமலராஜன் படுகொலையை துரிதமாக விசாரித்து நடவடிக்கை எடுத்திருந்தால் நடேசனின் கொலையை தடுத்திருக்க முடியும் என்றார். இந்த நாட்டில் ஊடகவியலாளர்களுக்கான கருத்துச் சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது என்றும் ஊடகவியலாளர்களுக்கு கடிவாளம் போடுவதற்கு அதிகார மையம் காலத்திற்கு காலம் ஏதோ ஒர்விதத்தில் அச்சுறுத்தி வருகின்றது என்றும் குறிப்பிட்டார்.

## சவுதியில் 2 இலங்கையர் உட்பட 22 பேர் பலி

(31.05.04)

சவுதி அரேபியாவில் தீவிரவாதிகளால் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்தோரை விடுவிப்பதற்கு சவுதிப் படையினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையின் போது 2 இலங்கையர்கள் உட்பட 22 பேர் உயிரிழந்திருப்பதாக சவுதி உள்துறை அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை கோபால் நகரில் வெளிநாட்டவர்கள் தங்கியிருந்த ஓசிஸ் குடியிருப்பினுள் நுழைந்த தீவிரவாதிகள், அங்கிருந்த சுமார் 50 வெளிநாட்டவர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தனர். இவர்களை மீட்பதற்காக சவுதிப் படையினர் உலங்குவானூர்தி மூலம் தரையிறங்கி அதிரடித் தாக்குதல் மேற்கொண்டனர். சவுதிப் படையினர் தாக்குதலை மேற்கொள்வதற்கு முன்னதாகவே தீவிரவாதிகள் 9 கைதிகளை கொலை செய்திருந்துள்ளனர். இவர்களை படுகொலை செய்வதற்கு முன்னதாக, இவர்கள் எந்த நாட்டவர்கள் என்பதைக் கேட்டறிந்த தீவிரவாதிகள், அவர்களில் முஸ்லிம்கள் அல்லாதவர்களைச் சுட்டுக் கொன்றதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, அல் - ஹைடா அமைப்பினர் தமது இணையத் தளத்தில் இப்படுகொலைக்குத் தாமே பொறுப்பு என உரிமை கோரியுள்ளதுடன், இஸ்லாமியர் அல்லாதவர்களை அரேபியத் தீபகற்பத்தில் இருந்து வெளியேற்றுவோம் எனவும் சூளுரைத்தனர். உயிரிழந்தவர்களில் 8 இந்தியரும், 3 பிலிப்பைன்ஸ், 2 இலங்கையரும், தலா ஒரு அமெரிக்கர், பிரித்தானியர், தென்னாபிரிக்க நாட்டவர், சுவீடன் நாட்டவர், இத்தாலியர், எகிப்தியரும் அடங்கியுள்ளனர்.



மீட்புப்பணிக்காக உலங்குவானூர்தியில் தரையிறங்கும் படையினர்

### இராணுவத் தளபதிகள் - விடுதலைப் புலிகள்
## வவுணதீவில் புதனன்று சந்தித்துப் பேச்சு

(01.06.04)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் இராணுவத் தளபதிகளுக்கும் இராணுவத்தின் உயர் தளபதிகளுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று நாளை புதன்கிழமை நடைபெற உள்ளது. கிழக்கின் பூரண நடவடிக்கைகளுக்கான தளபதியாக அண்மையில் நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட தலைமையிலான உயர்மட்ட இராணுவக் குழுவே இச்சந்திப்பில் பங்குபற்றவிருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினதும் புலிகளினதும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு நடுவே சூனியப் பிரதேசத்தில் அமைந்துள்ள வவுணதீவுப் பிரதேச செயலகக் கட்டடத்தில் இக்கூட்டம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு இந்தச்சந்திப்புக்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

கிழக்கில் இனந்தெரியாதோரால் ஆள்கள் கொல்லப்படுவதைத் தடுப்பது குறித்து ஆராய்வதே சந்திப்பின் முக்கிய நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது. இச்சந்திப்பில் பங்குபற்றவிருக்கும் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட இராணுவத்தில் இரண்டாவது நிலை அதிகாரியாவார். அவர் விரைவில் இராணுவத் தளபதியாக நியமிக்கப்படவிருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுஇவ்வாறிருக்க, கிழக்கு பிராந்தியத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்குமான கட்டளைத் தளபதியாக, இராணுவ தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட நியமிக்கப்பட்டுள்ளமை படைதரப்பு உட்பட பல்வேறு மட்டத்திலும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் நந்தன மல்லவராச்சி இருக்கையில், போர்ச் சூழலற்று போர் நிறுத்தம் அமுலிலிருக்கையில் வரலாற்றில் முதல் தடவையாக கிழக்குப் பிராந்தியத்திற்கு, அனைத்து நடவடிக்கைகளுக்குமான கட்டளைப் தலைமையகம் உருவாக்கப்பட்டு அதன் கட்டளை தளபதியாக, இராணுவத் தளபதிக்கு அடுத்த நிலையில் உள்ளவர் நியமிக்கப்பட்டமையே இந்தக் குழப்ப நிலைக்குக் காரணமாகும். இது குறித்து கிழக்கு மாகாணத்தில் படைத் தலைமைப் பீடத்தில் மட்டுமன்றி, கொழும்பிலும் இராணுவத் தலைமையகத்தில் ஆச்சரியம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், கிழக்கில் தங்களுக்கெதிராக நீண்ட தூர ஊடுருவல் தாக்குதலை தீவிரப்படுத்தும் நோக்கில் இவர் நியமிக்கப்பட்டாரா என்ற கேள்வி விடுதலைப் புலிகள் மத்தியில் எழுந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## இந்திய வெளிவிவகார அமைச்சருடன் கதிர்காமர் சந்திப்பு

(31.05.04)

ஐந்து நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியத் தலைநகர் புதுடில்லி சென்றுள்ள சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இன்று, இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங்கைச் சந்தித்துப் பேசியுள்ளார். இச்சந்திப்பின் போது இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியாவின் பங்களிப்பு உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டதாக தெரியவருகிறது.

இந்த விஜயத்தின் போது புதிய தலைமை அமைச்சர் மன்மோகன் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.தீக்ஷித்தையும் கதிர்காமர் சந்தித்து பேசவுள்ளார். அமைச்சர் கதிர்காமர் மற்றும் வெளியுறவுச் செயலாளர் எச்.எம்.ஜி.எஸ். பலிககார குழுவினர் நேற்று முன் தினம் சனிக்கிழமை இரவு புது டில்லி சென்றது தெரிந்ததே.



## களுத்துறையில் தமிழர்கள் மீது...

(01ம் பக்கத் தொடர்ச்சி)

(31.05.04)

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, தமிழ் மக்கள் செறிந்து வாழும் புளத்சிங்கள ஸ்டேட் பகுதியில் கடந்த சில தினங்களாக சிங்கள இளைஞர்கள் சிலர் அங்கு வாழும் தமிழ் மக்களை அச்சுறுத்தி வந்தனர். இன்றிரவு அவ்வாறு அச்சுறுத்த முற்பட்ட போது தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது. பெருமளவில் வேறு பிரதேசங்களில் இருந்து அங்கு சென்ற சிங்கள இளைஞர்கள் தமிழ்மக்களின் வீடுகளைத் தாக்கினர். பொலிசாருக்கு அறிவிக்கப்பட்ட போதும் பொலிசார் உடனடியாக சம்பவ இடத்திற்கு செல்லவில்லை. நேரம் தாழ்த்தியே அங்கு சென்றனர். தற்போது நிலமை அமைதியாக இருப்பதாக பிரதிப்பொலிஸ் மா அதிபர் தெரிவித்திருக்கின்றார். காயப்பட்டவர்கள் களுத்துறை நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## ஊடகவியலாளர் நடேசன் சுட்டுக்கொலை..

(01ம் பக்கத் தொடர்ச்சி)

(31.05.04)

இன்று காலை அவர் தனது வீட்டில் இருந்து நகரிலுள்ள அலுவலகத்திற்கு சென்றபோதே அவரை எதிர்பார்த்து காத்திருந்த ஆயுததாரிகள் அவர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறீலங்கா அரசின் இராணுவப் புலனாய்வுத் துறையினருடன் இணைந்து இயங்கும் மர்மக்குழு ஒன்றின் வேலையே இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் என்று தமிழ் ஊடகவியளாளர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த வாரம் கிழக்குப் பல்கலைகழகப் பேராசிரியர் தம்பையா சுட்டுக்கொல்லப்பட்டதன் பின்னர் தற்போது ஊடகவியளாளர் நடேசன் குறிவைக்கப்பட்டிருக்கிறார். இது திட்டமிட்ட அடிப்படையில் கிழக்கில் முரண்பாடுகளை தூண்டிவிடுவதற்கு எடுக்கப்படும் முயற்சி என்று பலதரப்பாலும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

**விடுமுறையைக் கழிக்க தமிழ்நாடு போகின்றீர்களா!**

சென்னை அடையாறில் AK + 3 அறை + சகல வசதிகளுடன் வீடுகள் வாடகைக்குண்டு. ஒருநாளுக்கு 17 ஈரோக்கள்

தொடர்புகளுக்கு: மகேஸ்வரன்
தொலைபேசி: 01 48 27 20 59
*(பிற்பகல் 5.00 மணிக்குப் பின்னர்)*



**துயர்துடைப்பு நாட்கள்-2004**

ஜூன் 01 முதல் ஜூலை 05 வரை

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரான்சு
Organisation Pour La Réhabilitation Des Tamouls
26, Rue Du Département, 75018 Paris, France.Tél/Fax:01 40 38 30 74
e-Mail:trofrance@trofr.com - web:http://www.trofr.com



**LA CHAPELLE**
**இறைச்சிக் கடை**

சுவையான, சுத்தமான, தரமான ஆடு, மாடு, உயிர் கோழி மற்றும் கோழிக் கால்களுடன் அனைத்து வகையான இறைச்சி வகை களையும் பெற்றுக் கொள்ளலாம்

34 Rue Philippe Girard
Paris 75010, M° : La chapelle
Tel : 01 42 05 00 95



**அதிசயம் ஆனால் உண்மை**

உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

விமல் விநியோக நிலையம்
**VIMAL DISTRIBUTION**
1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98
குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.



**Asha Video Movies**

உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் (Digital - DV Camera) மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி (Computer) மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073

Pub-Fr-39


# மரண அறிவித்தல்



பிறப்பு: 27.12.1966 இறப்பு: 22.05.2004

அளவெட்டியூர் நாதஸ்வர இளந்தென்றல்

## M.P.B. சுதாகர்

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ், கனடா எனப் பல்வேறு நாடுகளிலும் தனது இன்னிசைக் கச்சேரி மூலம் பல்லாயிரக்கணக்கான மக்களின் இதயங்களைக் கவர்ந்த நாதஸ்வர இளந்தென்றல் M.P.B. சுதாகர் அவர்கள் கடந்த 22.05.2204 அன்று தாயகத்தில் காலமாகிவிட்டார் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்: *M. பாலசுப்பிரமணியம் (தவில் கண்ணன் பிரான்ஸ்)*
*T.P: 0153260440*

## இலங்கை பயணியிடம் இலஞ்சம் வாங்கிய 7 பேர் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கைது

(31.05.04)

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இலங்கைப் பயணியிடம் இலஞ்சம் வாங்கிய சுங்க இலாகாவைச் சேர்ந்த 7 பேரை மத்திய புலனாய்வுத்துறை பொலிசார் நேற்றுக் காலை கைது செய்தனர். கொழும்பிலிருந்து சஹாரா ஏர்லைன்ஸ் விமானம் மூலம் சென்னை வந்த ஒரு பயணியிடம் சுங்கத் துறை அதிகாரிகள் இலஞ்சம் கேட்டுள்ளனர். இலஞ்சம் கொடுத்தால்தான் அவரது பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதிக்க முடியும் என்றும் பேரம் பேசியுள்ளனர்.

இது குறித்து அந்தப் பயணி மத்திய புலனாய்வுத் துறை பொலிசாரிடம் புகார் தெரிவித்தார். இதனையடுத்து இலஞ்சம் தர ஒத்துக் கொள்வதாக அந்தப் பயணியிடம் கூறச் சொன்ன சி.பி.ஐ. அதிகாரிகள், அவ்வாறு இலஞ்சம் கொடுத்த போது, அங்கு சென்று சுங்க இலாகா அதிகாரிகள் 7 பேரைக் கைது செய்தனர்.

## விடுதலைப் புலிகள்..

*(32ம் பக்கத் தொடர்ச்சி)*

ரவு தெரிவித்துள்ள நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை புதிய வடிவம் பெற்றுள்ளது.

இந்தப் பின்னணியில்தான் பிரதமர் மன்மோகன் சிங்கிடமும் பிரணாப் முகர்ஜியிடமும் நான் விடுத்த வேண்டுகோளுக்கு செவிமடுத்து ஐக்கிய முற்போக்கு முன்னணி அரசின் குறைந்தபட்ச செயற்திட்டத்தில் இலங்கைத் தமிழர்களது அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா ஆக்கபூர்வமாக உதவ வேண்டும் என குறிப்பிட்டுள்ளது. வெளிவிவகாரத்துறை அமைச்சர் நட்வார் சிங்கிடம், நான் இது குறித்து பேசியபோது, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் என்னையும் உதவ வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார். இது தொடர்பில் உடனடியாக ஒரு மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது. இப்போது செயற்றிட்டத்தில் எமது கோரிக்கைக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. நாட்கள் செல்லச் செல்ல மாதங்கள் செல்லச் செல்ல, அணுகு முறையில் மாற்றம் வரும் என நம்புகின்றேன். ஏற்கனவே, இது தொடர்பில் ஒரு பலமான அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, திடீரென அவ்வழுத்தத்தை மாற்றி விடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது என்றும் தெரிவித்தார்.


ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)

**Directeur de la publication:**
A.F. Santiogu

**Redacteur:** K. Jeisanthar

**Impression:**
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
Via - Imprimé chez I.C.T.
Z.A. de l' EPI d'Or, 94800 Villejuif.

நிர்வாகி: அ.பி. சந்தியோகு

ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-
Poobalam_murasu@hotmail.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0049 172 28 86 291

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்:
அன்பு
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368


**குறிப்பு:**

இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.


Restaurant **Tharsana's**
தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle *ou* Stalingrad

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.

**தர்ஷனா & பிரஷா உணவகங்கள்**
இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்

Restaurant **Prassah**
Gastronomiques Indiennes
பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle *ou* Louis Blanc
Tel: 01 53 26 39 41

ஈழமுரசு ஐரோப்பா
POOBALAM WEEKLY
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"POOBALAM"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16

மேற்கு லண்டன் மாநகரில்
புதிய நிர்வாகத்தில்... புதுப்பொலிவுடன்...
துவாரகா Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 020 8813 9126 Pub

# விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும்

## – வைகோ கோரிக்கை –

(31.05.04)

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கோரிக்கை விடுத்துள்ளார். ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ சென்னையில் நேற்று (29.05.2004) நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது, 'விடுதலை புலிகள் மீதான தடையை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீடித்துள்ளனர். இந்தத் தடையை நீக்க வேண்டும் என்பது என் விருப்பம். ஆனால் அதற்காக மத்



திய அரசை வற்புறுத்த மாட்டேன். இந்த விவகாரத்தினால் மத்திய அரசுக்கு நிர்பந்தம் கொடுக்க மாட்டேன்.

இலங்கை தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு சாதகமான அணுகுமுறையை கடைபிடிக்க வேண்டும். வருகிற ஜூலை மாதம் 11ம் மற்றும் 12ம் திகதிகளில் நெல்லையில் ம.தி.மு.க. பொதுக்குழுவும், பிரமாண்டமான மாநாடும் நடைபெற உள்ளது. இவ்வாறு வைகோ கூறினார்.

இதேவேளை, இலங்கைத் தமிழர்களது பிரச்சினை சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு முன்வைக்கப்பட்டு இப்பிரச்சினைக்குத் தீர்வு காண நோர்வே அரசின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதால், விடுதலைப் புலிகள் தொடர்பில் ஜே.என்.தீக்ஷித் கொண்டிருந்த நிலைப்பாட்டில் மாறுதல் ஏற்பட்டிருக்கும் என இலண்டன் 'பி.பி.சி.'க்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ள ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இலங்கைத் தமிழர்களது ஏக பிரதிநிதிகளாக தமது கட்சி விடுதலைப் புலிகளையே கருதுவதாகவும் தெரிவித்துள்ளார்.

வைகோ மேலும் அப்பேட்டியில் தெரிவிக்கையில், கடந்த கால நிகழ்வுகளை மறப்போம், நம்பிக்கையான எதிர்காலத்தை எதிர்நோக்குவோம் என்ற அடிப்படையில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குப் பதிய விடியல் ஏற்பட வேண்டும். 86, 87களில் ஜே.என்.தீக்ஷித் கொண்டிருந்த கருத்து காலகட்டத்தில் நிச்சயமாக மாறியிருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். ஏனெனில், இலங்கைத் தமிழர்களது பிரச்சினை சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையை உலகின் பல்வேறு நாடுகளும் அங்கீகரித்துள்ளன.

இதன் விளைவாகவே, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வினை ஏற்படுத்தி அவர்கள் உரிமையோடும், மானத்தோடும், அமைதியோடும் வாழ்வதற்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண நோர்வே அரசின் அனுசரணையுடன் தொடங்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தைக்கு ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம், தாய்லாந்து, ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் ஆத

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## மத்திய அரசின் கொள்கையில் மாற்றம் இல்லை

### இந்திய உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

(31.05.04)

விடுதலைப் புலிகள் மீதான கொள்கையை மாற்றும் எண்ணம் மத்திய அரசுக்கு இல்லை. அந்த இயக்கத்தின் மீதான தடை நீடிக்கும், என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீல் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மீது அமுலில் இருந்து வரும் தடையை நீக்குவது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்று புதிய அரசுக்கு கோரிக்கை விடப்பட்டது பற்றி பெங்களூரில் நேற்று மத்திய உள்துறை மந்திரி சிவராஜ் பட்டீலிடம் நிருபர்கள் கருத்து கேட்டனர். அதற்கு பதில் அளித்து சிவராஜ் பட்டீல், விடுதலைப் புலிகள் மீதான கொள்கையை மாற்றும் எண்ணம் அரசுக்கு இல்லை. அவர்கள் மீதான தடை தொடரும். இந்த தடை உத்தரவு தொடர்பாக வைகோ கூறி இருப்பது அவருடைய சொந்த கருத்து. அரசு, புலிகளுக்கு ஆதரவாக எந்த முடிவும் எடுக்கவில்லை.

பொடா சட்டம் நீக்கப்படுவதன் காரணமாக ஏற்படும் இழப்பை சரிகட்ட தேவைப்பட்டால் சட்டத்தில் மாற்றம் கொண்டு வந்து இப்போது உள்ள சட்டம் கடுமையாக்கப்படும். தீவிரவாதத்துக்கு எதிராக இந்தியா கடுமையாக நடந்து கொள்ளும் என்பது சர்வதேச நாடுகளுக்கு தெரியும். நமது உள்நாட்டு தேவைகளுக்காக நாம் இதுபோன்ற சில மாற்றங்களை செய்ய வேண்டியது உள்ளது. இதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளும். பாகிஸ்தான் புதிய ஏவுகணை சோதனையை நடத்தி இருக்கிறது. இது போன்ற சோதனை ஆயுத போட்டியை ஊக்குவிப்பதாகவே இருக்கும். இந்த சோதனையை இந்தியா உன்னிப்பாக கவனித்து செயல்படும். இந்தியாவை பலப்படுத்துவது தான் எங்கள் கொள்கை. பாகிஸ்தானின் இந்த நடவடிக்கை குறித்து விரிவாக ஆராய்ந்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கை எடுப்போம், என்று கூறினார்.

## சமாதானப் பேச்சுக்கள் தொடர தன்னாலான முயற்சிகளை இந்தியா மேற்கொள்ளும்

### – இந்திய வெளயுறவுத்துறை அமைச்சர் –

(31.05.04)

இலங்கையில் சமாதானப் பேச்சுக்கள் தொடர தன்னாலான முயற்சிகளை இந்தியா மேற்கொள்ளும் என இன்று டில்லியில் வைத்து பத்திரிகையாளர்களைச் சந்தித்த இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வார்சிங் தெரிவித்தார். இலங்கைத் தீவில் பேச்சுவார்த்தை மூலமான அமைதித் தீர்வு காணப்படும் என்று தாம் நம்புவதாகவும், சமாதானத்தை ஏற்படுத்த எந்தவழிகளிலெல்லாம் தங்களால் உதவ முடியுமோ அவ்வாறு உதவத் தாம் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்று சிறீலங்காவின் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வார்சிங்கை உத்தியோகபூர்வமாகச் சந்தித்திருந்தார். அதனையடுத்தே நட்வார்சிங் பத்திரிகையாளர்களிடம் கலந்துரையாடியபோது இதனைத் தெரிவித்துள்ளார்.

PHONE 2000
Reparation -Abonnements Telephones Mobiles -Vente en Gros et Detail - Deblocage
Internet-installation Cybercafe -Abonnement ADSL -Creation de Site web.
LES PROFFESSIONNELS DE LA TÉLÉPHONIE MOBILE À VOTRE SERVICE
SFR
PHONE 2000, 2, Rue Perdonnet, 75018 Paris. ☎: 01 40 05 03 43 Fax: 01 40 05 03 53 M°: La Chapelle
PHONE 2000, 85, Rue des Pyrénées, 75020 Paris. ☎: 01 40 09 13 15 Fax: 01 40 09 01 31 M°: Maraîchers
PHONE 2000, 19, Rue du Labat, 75018 Paris. ☎: 01 42 58 55 40 Fax: 01 42 58 55 46 M°: Marcadet Poissonniers
PHONE 2000 Informatique, 87, Rue des Pyrénées, 75020 Paris. M°: Maraîchers Tél: 06 20 21 11 11
PHONE 2000, 4, Rue de Cail, 75010 Paris. ☎: 01 40 05 93 28 Fax: 01 40 05 97 03 M°: La Chapelle ou Gare du Nord
PHONE 2000, 5, Bld. davout, 75020 Paris. ☎: 01 43 71 40 30 Fax: 01 40 09 01 31 Mobile: 06 17 17 28 17 M°: Porte de Vincennes
Pour plus Dinformation Visitez: www.Phone2000.net -Tel: SFR Siva: 06 20 21 11 11